YARL OSAI
யாழ் ஓசை
வார இதழ்
Regested No. QD/130/News/2011
ஓசை : 01 நாதம் : 49 வெள்ளிக்கிழமை 07.10.2011 வார இதழ் விலை ரூபா: 15.00

# பலஸ்தீனத்தில் இஸ்ரேல் கடைப்பிடிக்கும் வழிமுறையை தமிழ் மண்ணில் இலங்கை அரசு கடைப்பிடிக்கின்றது

## -கல்முனையில் தமிழ் கூட்டமைப்பு எம்.பி. சுரேஷ் விசனம்

பாலஸ்தீனத்தை தனிநாடாக்கக் கோரும் அரசு பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் கடைப்பிடிக்கும் மோசமான வழிமுறைகளையே நமது தமிழ் மண்ணில் தமிழர் தாயகத்தில் பின்பற்றுகின்றது என்று யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப்.அமைப்பின் செயலாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். கல்முனை மாநகர சபைத் தேர்தலுக்கான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் கல்முனை பிரதான வீதியில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (6ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 27 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது பட்டம் பெறுவதற்காக மாணவர்கள் அழைத்து வரப்படுவதைக் காணலாம்.

## தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவரையும் விடுதலை செய்யுங்கள்

### பிரதமர், காங்கிரஸ் தலைவியிடம் கருணாநிதி வேண்டுகோள்

சென்னை,

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூன்று பேரையும் விடுவிக்க வேண்டும் என காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியிடமும், பிரதமர் மன்மோகன் சிங்கிடமும் தி.மு.க. தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, (6ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

உடைபடும் அரசியல் கட்சிகள் 11
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சிறப்பு கட்டுரை 15
குலநாயகத்துடன் ஓர் சந்திப்பு 25

## விசுவமடுவில் தனியார் காணியில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு

விசுவமடு றெட்பானா பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து வெடிக்காத துப்பாக்கி ரவைகளின் ஒரு தொகுதி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியின் உரிமையாளர் குடியமர்வதற்காக காணியைத் துப்புரவு செய்தபோது நிலத்தினுள் புதைக்கப்பட்டிருந்த உரப்பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் இத் துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (6ஆம் பக்கம் பார்க்க)

## குரும்பசிட்டியில் இரு கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேற அனுமதி

வண்ணார்பண்ணை,

வலி. வடக்கு குரும்பசிட்டி கிராமத்தின் இரு கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்வதற்கு உத்தியோக பூர்வமாக நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஜே 242, ஜே 243 கிராம அலுவலர் பிரிவுகளுக்கே இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு குரும்பசிட்டி பகுதியில் 21 வருடங்களுக்கு பின்னர் மக்கள் மீள்குடியமர்வதற்கு அனுமதி வழங்கும் நிகழ்வு தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கட்டளைத் தளபதி மேஜர் (6ஆம் பக்கம் பார்க்க)

ஜெயசந்திரன்ஸ் பட்டாடைகளால் உங்கள் திருமண விழாவை அலங்கரித்திடுங்கள்





JEYECHANDRANS
The Art of Fashion
No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com

# அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுப்பார் ரஞ்சன் மத்தாய்

## இந்திய ஊடகம் தகவல்-

எதிர்வரும் சனிக்கிழமை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாய், தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை வழங்குமாறு கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கக்கூடும் என்று புதுடில்லி அதிகார வர்க்கங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நிருபமா ராவுக்குப் பின்னர் இந்திய வெளிவிவகாரச் செயலாளராக பொறுப்பேற்ற ரஞ்சன் மத்தாய் முதல் முறையாக சனிக்கிழமை கொழும்பு வருகிறார்.

மூன்று நாட்கள் அங்கு தங்கியிருக்கும் அவர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன் இருதரப்பு, பல்தரப்பு உறவுகள் தொடர்பாக இலங்கையின் வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகமவுடன் பேச்சு நடத்துவார் என்றும் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடபகுதியில் இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் உதவித் திட்டங்களையும் ரஞ்சன் மத்தாய் மீளாய்வு செய்யவுள்ளார்.

எனினும் ரஞ்சன் மத்தாயின் இலங்கை பயண நிகழ்ச்சிநிரல் குறித்து தகவல் எதையும் வெளியிட கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் மறுத்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.




# இந்திய மீனவர்கள் தான் எல்லை தாண்டுகிறார்கள்

## இந்திய கடற்படைத் தளபதி குற்றச்சாட்டு

சென்னை:

இந்திய மீனவர்கள் தான் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக இந்தியக்கடற்படை த்தளபதி அட்மிரல் நிர்மல் வர்மா குற்றம் சாட்டினார்.

சென்னையில் இடம்பெற்ற கடற்படை அதிகாரிகளின் அறக்கட்டளை ஆண்டு விழா பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது மிகப் பெரிய விடயம். இது இரு நாட்டு கடற்படை தொடர்பான விடயம் அல்ல. இரு நாட்டு அரசியல் தலைவர்களும் கவனம் செலுத்த வேண்டிய விடயமாக உள்ளது.

நமது கடல் எல்லையில் அமைக்கப்பட்டுள்ள ரேடர்களைக் கண்காணிக்கும் போது நமது மீனவர்கள் செல்லக்கூடாத இடங்களுக்குச் சென்று மீன் பிடிக்கின்றனர். ஆனால் அவர்கள் மீது ஆயுதத் தாக்குதல் நடத்துவதை எற்றுக் கொள்ள முடியாது.

இரு நாட்டு அரசுகளும் மீனவப் பிரதிநிதிகளும் பேசித் தீர்க்க வேண்டிய விடயம் இது என்றார்.

# மனித உரிமைகள் நடவடிக்கை திட்டத்தை ஐ.நா.வுக்கு அனுப்புகிறது

மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைத் திட்டம் ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பவுள்ளதாக அரசாங்கம் அறிவித் துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான இலங்கையின் சிறப்புத் தூதுவரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க நேற்றுக் காலை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவலை வெளியிட்டார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்படவுள்ள இந்த நடவடிக்கைத் திட்ட அறிக்கை யாருக்கெல்லாம் தேவைப்படுகின்றதோ அவர்களுக்கெல்லாம் வழங்கப்படும் என்றும் மகிந்த சமரசிங்க மேலும் கூறியுள்ளார்.

மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக அண்மைக்காலமாக அனைத்துலக அளவில் அதிகரித்துவரும் அழுத்தங்களை அடுத்தே அரசு இந்த அறிக்கையை சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# நலிவுற்ற மக்களுக்காக இசைநிகழ்ச்சி

நலிவுற்ற மக்களின் மேம்பாட்டு நிதிக்காக நல்லூர் லயன்ஸ் கழகம் இசைப் பெருவிழா ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. இவ் இசைப் பெருவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்னிந்திய விஜய் தொலைக்காட்சிப் புகழ் கலைஞர்களான பூஜா, சந்தோஷ், சாய்சரண், மாளவிகா, ஸ்ரீநிவாஸ், தயன் ஸ்ரீ ஆகியோர் இப் பெருவிழாவில் கலந்துகொள்ளவுள்ளனர். நல்லூர் ராகம்ஸ் இசைக்குழுவின் கலைஞர்களின் இனிய இசையில் இவர்கள் பாடவுள்ளனர்.

இந்நிகழ்வின் மூலம் கிடைக்கும் நிதி நலிவுற்ற மக்களின் மேம்பாட்டுக்கு பயன்படுத்தப்படுமென ஏற்பாட்டாளர்களான நல்லூர் லயன்ஸ் கழக நிர்வாகிகள் தெரிவித்தனர்.



விசுவமடு றெட்பானா பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட வெடிக்காத துப்பாக்கி ரவைகளின் ஒரு தொகுதியைக் காணலாம்.

# கடற்படையினரால் 513 இந்திய மீன்பிடிப் படகுகள் தடுத்துவைப்பு

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதாக 513 இந்திய மீன்பிடி படகுகள் சர்வதேச கடல் எல்லைக்கு அருகில் வைத்து இலங்கை கடற்படையினரால் துப்பாக்கி முனையில் கைப்பற்றப்பட்டதாக இந்திய மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதன்கிழமை காலை 9.00 மணியளவில் இம் மீன்பிடிப் படகுகளை 6 இலங்கைக் கடற்படைப் படகுகள் சுற்றிவளைத்து சுமார் 15 மணித்தியாலங்கள் தடுத்து வைத்திருந்ததாக மீனவர்களை மேற்கோள் காட்டி இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய கரையோர காவல் படகொன்று அவ்விடத்திற்கு விரைந்ததாகவும் ஆனால் மீனவர்களை விடுவிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் திரும்பிச் சென்றதாகவும் கரைக்குத் திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# காணிகளுக்கு உறுதி இருக்கும்போது மீண்டும் பதிவு ஏன் அவசியம்?

## மீளாய்வு செய்யவேண்டும் என்கிறார் சிவஞானம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிகளை சட்டபூர்வமாக பதிவு செய்வது தொடர்பாக எந்தவொரு அரச உத்தியோகத்தரும் மக்களை நேரடியாக சந்தித்து விளக்கமளிக்கவில்லை. தங்களிடம் வருபவர்களுக்கு மட்டும் கிராம அலுவலர்கள் படிவங்களை வழங்குகின்றனர். இது திருப்தியற்ற செயற்பாடாகும்.

தற்போதைய நிலையில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுமானால் பல்லாயிரக் கணக்கான மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவர் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக்கொள்ளவேண்டும். இந்த நடைமுறையை முழுமையாக மீளாய்வு செய்யவேண்டுமென இலங்கை தமிழரசுக்கட்சி துணைச்செயலாளர் சி.வீ.கே. சிவஞானம் காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஆர். ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி தொடர்பான முகாமைத்துவத்தை விதிமுறைப்படுத்தல் சம்பந்தமான 2011/04 அம் இலக்க சுற்றறிக்கை தொடர்பாக பின்வருவனவற்றை தயவு செய்து தெளிவுபடுத்தவும்.

சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட உரிமை உறுதி இருக்கையில் ஏன் மீள் பதிவு அவசியமாகிறது?.

அவ்வாறு செய்ய வேண்டுமாயின் கூட ஒட்டு மொத்தமாக அவசர அவசரமாக ஏன் இதை நடைமுறைப்படுத்த வேண்டும்?. இந்த திட்டத்தின் விளைவுகளை ஆய்ந்து அறிய நியாயமான கால அவகாசம் வழங்கும் பொருட்டு இறுதி நிபந்தனை திகதியை ஏன் நீடிக்கக்கூடாது?.

உரிமை மாற்றங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் ஏன் இந்தத் திட்டத்தை அமுல் செய்யக்கூடாது?.

தமிழ்மக்களின் கலாசார பாரம்பரியங்களின் அடிப்படையில் தேச வழமைச் சட்டத்தினால் வழங்கப்பட்ட முன் பாதுகாப்பு ஏற்பாடுகளின் நிலை என்ன?. இந்த நடவடிக்கைகள் அவ்வாறான உரிமைகளை இல்லாது ஒழிப்பதற்கான மறைமுக செயற்பாடு என்ற நியாயமான அச்சம் மக்கள் மத்தியில் உண்டு.

புலம் பெயர்ந்த ஒருவர் வலுவான உரிமை உறுதியை கொண்டிருக்கையில் புதிதாக ஓர் உறுதியை ஏன்பெறவேண்டும்?.

இத்திட்ட அமுலாக்கம் பற்றிய விழிப்புணர்வை தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் கொண்டிருக்கவில்லை என்பதை தங்கள் அவதானத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

விபரங்களை விளக்குவதற்காக எந்தவொரு அரச உத்தியோகத்தரும் மக்களை நேரடியாக சந்திக்கவில்லை. தங்களிடம் வருபவர்களுக்கு மட்டும் கிராம அலுவலர்கள் படிவங்களை வழங்குகின்றனர். இது திருப்தியற்றது. இப்போதைய நிலையில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுமானால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாவார்கள் என்பதை ஒவ்வொருவரும் நிச்சயமாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

இடப் பெயர்வுகள் மற்றும் மீள்குடியேற்றங்கள் காரணமாக பிரச்சினைகள் நிச்சயமாக எழும். அவைகள் ஏற்கனவே அமுலிலுள்ள சட்ட மற்றும் குடியியல் நிர்வாக கட்டமைப்புக்கள் ஊடாக தீர்த்து வைக்கப்படலாம். பிணக்குகளோ பிரச்சினைகளோ இல்லாது சட்டபூர்வமான உரிமை உறுதி வைத்திருப்பவர்களை அசௌகரியப்படுத்துவது தேவையற்றது. மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் இந்த நடைமுறையை முழுமையாக மீளாய்வு செய்யுமாறு கோருகின்றோம்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

கோப்பாய்,

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் காணி உரித்துப்பதிவுக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதிவு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை மூன்று நாட்கள் மூன்று கட்டங்களாக யாழ். கொக்குவில் திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. நிர்வாகத் திணைக்களத்தின் அனுசரணையுடன் வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தால் வட மாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இதில் முதற்கட்டமாக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 12 ஆம் திகதியும் இடைநிலை உத்தியோகத்தர்களுக்கு 13 ஆம் திகதியும் சிற்றூழியர்களுக்கு 14 ஆம் திகதியும் நடைபெறும்.

காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை நடைபெறும் இப்பயிற்சி நெறியில் ஆர்வமுள்ள அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு பயன்பெற முடியும் எனவும் பங்குபற்றுபவர்களுக்கு சிற்றுண்டி, மதிய போசனம் எனப்பன வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோரை இழந்த, பிரிந்து வாழ்வோரின் மாணவர்களின் விபரங்கள் திரட்டல்

வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் பாடசாலைகளில் கல்வி பயிலும் பெற்றோரை இழந்த மற்றும் பிரிந்து வாழ்வோரின் பிள்ளைகளின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

வட மாகாண கல்வித் திணைக்களம் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக பெற்றோரை இழந்த மாணவர்கள், பிரிந்து வாழ்வோரின் பிள்ளைகளின் விபரங்களினைப் பாடசாலைகளின் மூலம் திரட்டி வருகின்றது குறிப்பிடத்தக்கது.



# கேட்டியளே சங்கதி

'உலகம் போற போக்கப் பாரு தங்கமச்சில்லாலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே' எண்டு பட்டுக்கோட்டையரப் போல பாடத்தோணுது பாருங்கோ. எங்கட தமிழ் தலைவர்மாரின்ர போக்கப் பாக்க... எல்லாரும் ஒரே குடையின் கீழ் வாங்கோ... ஒற்றுமையாக ஒன்றாக பயணிப்போம் எண்டு சொல்லி தங்களுக்குப் பின்னால வரச்சொன்னவயள் எல்லாம் இப்ப தங்கட கஷ்டத்துக்கு கந்தையப்புவின்ர வண்டில் மாடுகள் கோணலுக்கு இழுக்கிற மாதிரி போக வெளிக்கிடுகினம் எண்டு கதையடிபடுது. ஒவ்வொரு தலையளும் ஒவ்வொரு கோணத்தில நிண்டு அறிக்கைவிடத் தொடங்குகினம் ஒருத்தர் மலையிலிருந்தும் இன்னொருத்தர் வடக்கிலிருந்தும் இன்னொருத்தர் வெளிநாட்டிலிருந்தும் அறிக்கைவிட்டுக்கொண்டிருக்கினம். இதில ஆற்ற கதைய நம்பிறதெண்டு தெரியாம சனம் குழம்பி நிக்குது தங்களுக்கெண்டு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ஊடகங்களை வைத்துக்கொண்டு தாங்கள் நினைக்கிறதை சனத்திட்ட திணிக்க பாக்கினம். சனத்தின்ர மூளையை வார்த்தை ஜாலங்களால் கழுவிறதில எங்கட அரசியல் விண்ணர்கள் கில்லாடிகள் பாருங்கோ... வீர வசனங்கள் பேசியும் தேசியம் பேசியும் தமிழ் சனத்தை தங்கட பக்கமா கூட்டிக்கொண்டு போகிறதில கெட்டிக்காரர். சனம் ஒற்றுமையாக இருப்போம், நிம்மதியாய் வாழுவோம் என்று எண்ணி தேசியத்தின் மீது நம்பிக்கை கொண்டு அது பற்றிக் கூறுபவர்கள் பின்னால செல்லுதுகள். சலுகைக்கா உரிமைக்கா என்று கேட்டபோதெல்லாம் சனம் எந்தப்பக்கம் போனதெண்டு எல்லாருக்கும் வடிவாத் தெரியும். ஒற்றுமையா நிண்டுபோட்டு தான்தோன்றியாகச் செயற்பட்டு பிரிஞ்சு போனவையளை தேர்தல் காலத்தில சனம் திரும்பிப் பார்க்காமல் கைவிட்டதையும் எங்கட அரசியல் தலைவர்கள் அறிவார்கள்.

இதைச் சொல்லேக்கதான் பாருங்கோ எனக்கு எங்கட பழம்பெரும் அரசியல் தலைவர் ஒருவர் சொன்னது ஞாபகம் வருது. எல்லாரும் கப்பலில் ஏறிக்கொள்ளலாம். எல்லாரும் ஒன்றாக 'கப்பலில் இருக்கிறார்கள் என்பதில் ஒற்றுமை இருக்கிறது. இருப்பினும் கப்பலில் இருக்கும் மக்கள் சிலர் ஒவ்வொரு திசைக்கு ஓட்டிச்செல்ல முயற்சித்தாலும் வேறு சிலர் கப்பலில் துவாரமிட முயற்சித்தாலும் கப்பலின் நிலை என்னவாகும்.' எண்டு விளக்கம் தந்திருக்கிறார். உண்மைதான் பாருங்கோ, எல்லாரும் ஒன்றுதிரண்டு கப்பலில் ஏறிட்டாம். கப்பலின்ர சுக்கான் யாரின்ர கையில இருக்குதெண்டு கவனமா பார்க்க வேண்டும். யார் ஓட்ட போட வெளிக்கிடுகினம் எண்டும் கண்டுபிடிக்க வேண்டும். ஏதோ அவர்களிடமே எங்கட உரிமைகளைப் பற்றி பேசிற பொறுப்ப ஒப்படைத்து விட்டோம். அவர்கள் பாப்பினம் எண்டுபோட்டு இருந்திடக்கூடாது பாருங்கோ. சந்தர்ப்பவாத அரசியல் நடக்கிற காலமிது. நாட்டின் தலைவர், கட்சிகள் எல்லாத்தையும் பிரிக்கிற அலுவல 'பாக்கவா' செய்து கொண்டு வாறார். மாளிகைக்கு கூப்பிட்டு தேத்தண்ணி கொடுத்தே எல்லாரின்ர மண்டையையும் கழுவிவிடுவார். யானைத் தலைவர் அவரிட்ட போய்ப் போய் வந்து இப்ப இருக்க நிக்க நேரமில்லாமல் கட்சியின் உடைவைத் தடுக்கிறதுக்காக ஓடிஓடித்திரிகிறார். இப்ப எங்கட தலைவர் மாரும் பேச்சுவார்த்தைக்கென மாளிகை போய் வருகினம். இவயளையும் கவனமாய் அவதானிக்கவேண்டியது எங்கட கடமைதான் பாருங்கோ.

பழசும் இல்லாத இளசுமில்லாத தமிழ்த் தலைவர்கள் சிலர் மூத்த பெரும் தலைவர்களின்ர ஆலோசனைகளை கேட்பதும் இல்லையாம். அவர்களை கதைக்கவும் விடுவதும் இல்லையாம். அதேபோல பின்னால வாற இளம் தலைவர்களையும் தலையெடுக்கவும் விடுகினமில்லையாம்.

ஊடகங்கள் இவையளின்ர கைகளுக்குள்ள இருக்கிறதால இப்படியான உள்வீட்டு விசயங்கள் சந்திக்கு வாறது குறைவு பாருங்கோ... எது எப்படியோ தமிழ்சனம் ஒன்றில் மட்டும் உறுதியாக நிக்குங்கள். தங்கட உரிமை பற்றி கதைக்க வாற தலைவர்களுக்குப் பின்னாலதான் செல்வார்கள். வழிதவறிப்போறவையளை கண்டுகொள்ளவே மாட்டுதுகள். வரலாற்றிலிருந்தே மறந்துவிடுங்கள். இது காலங்காலமாக தமிழ் சனத்திடம் தமிழ் தலைவர்கள் அனுபவத்தால கண்டுவாற உண்மை பாருங்கோ...

Yarl Osai
யாழ் ஓசை
2011 ஒக்டோபர் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# வடக்கு கிழக்கு மக்கள் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வினை எட்டுவதன் அவசியம்

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற சகல மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் நியாயமானதும் நேர்மையானதுமான தீர்வைக் காண்பதில் தாம் உறுதியுடனிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் முஸ்லிம் மக்களின் அக்கறைகள் குறித்தும் தாம் கரிசனை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எட்டப்படும் அரசியல் தீர்வு தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதைப் போன்று முஸ்லிம் மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைவதை நாம் உறுதி செய்வோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள சகோதரர்களின் நியாயமான உரிமைகளுக்கு குந்தகம் விளைவிக்காது, வடக்குக் கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்துகொள்ள ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் எனவும் அவர் தனது அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று தசாப்த காலமாக நாட்டை சூழ்ந்திருந்த போர் மேகங்களால் இங்கு வாழும் மக்கள் மிகக் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்திருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பலிகொள்ளப்பட்டதுடன் இலட்சக் கணக்கானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் இதனூடாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்ட இன்றைய நிலையில் வடக்கு கிழக்கு மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண்பதற்கான அவசியம் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இப் பின்னணியில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்குமிடையில் தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இப் பேச்சுவார்த்தைகளின்போது சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு பேச்சுக்களைக் கைவிடுவதற்கான சூழல் தோற்றுவிக்கப்பட்ட போதும் தற்போது பேச்சுக்கள் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

அந்தவகையில்தான் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களோடு அந்நியோன்யமாக வாழ்ந்து வரும் முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பாக அரசுக்கும் கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சுக்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும் உள்ளீர்க்க வேண்டும் எனவும் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில்தான் கூட்டமைப்பின் இந்த அறிவிப்பானது முஸ்லிம் சகோதரர்களும் திருப்தியைக் கொடுத்திருக்கும் என்பது எமது அவதானமாகும்.

வடக்கு கிழக்கில் பின்னிப் பிணைந்து வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் தமது நியாயமான அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு ஒற்றுமையுடன் செயற்படுவது அவசியமாகும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற கசப்பான சம்பவங்களை மறந்து நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டியது பொறுப்புவாய்ந்த அரசியல் மற்றும் சமூகத் தலைமைகளின் கடமையாகும்.

கூட்டமைப்பின் அறிக்கையில் கூறுப்பட்டுள்ளதுபோன்று முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் உள்ளடக்கியதான அரசியல் தீர்வினைக் காண தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

# குடாநாட்டு மக்களது வாழ்வாதாரம், கல்வி மற்றும் உளநலன்களை பாதுகாத்தலின் அவசியம்

யாழ். குடாநாட்டு மக்களின் மொழி, இலக்கியம், பண்பாடு என்பன உலகில் முதன்மையான தொன்மையான கலாசாரத்தின் வெளிப்பாடு ஆகும். இதனைப் பாதுகாப்பது யாழ்ப்பாண மக்களது கடமையாகும்.

யாழ். மக்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாப்பது என்பது யாழ்பாணத்தின் சனத்தொகைப் பரம்பலின் உண்மையான அளவு தற்போது எவ்வளவு என்பதிலும் அதில் இல்லாதுபோன சனத்தொகையையும் அளவையும் கொண்டு ஆராய்தல் வேண்டும்.

1981ம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் படி 2009 ஆண்டில் புலம்பெயர்ந்த மக்கள் தவிர்த்து 12 இலட்சம் மக்கள் வாழ வேண்டும். ஆனால் தற்போது 6 இலட்சம் மக்களே வாழ்கின்றமை அதாவது சமூகத்தில் 50 வீத வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இதனை நிரவ ஒரு குடும்பத்திற்கு குறைந்தது 4 பிள்ளைகளும் 20 வயதிற்கு மேல் திருமணமும் ஊக்குவிக்கப்படல் வேண்டும். யுத்த அழிவுகளைச் சந்தித்த சமூகத்தில் அதனை மீள எழுப்ப இத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்படுவது வழக்கம். குறிப்பாக உலகில் அழிந்த யூத இனம், தனது இனத்தின் அளவைக்க கூட்டுவதில் கூடிய கரிசனை கொண்டுள்ளது.

அதேபோல் அராபிய மக்களும் தமது வளத்தினை பெருக்கும் நடவடிக்கையில் பின்னிற்பதில்லை. ஆனால் தமிழ் மக்கள் தமது சேமிப்பாக பிள்ளைகளைக் கருதாது பணத்தினையும் நகையினையும் காணிகளையும் கருதி வந்தனர்.

ஆனால் இன்றைய காலத்தின் முதலீடு, அதிக குழந்தைகளை பெற்று ஆராக்கியமாக வளர்த்தலே ஆகும். எமது பாட்டிமார் எவ்வித மருத்துவ வசதிகளும் அற்ற 50 ஆண்டுகளிற்கு முற்பட்ட காலத்தில் 10 இற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்று ஆராக்கியமாக 100 ஆண்டுகள் வாழ்ந்தார்கள்.

அடுத்து வன்னியில் முகாம்களில் உள்ள எமது உறவுகளையும் யாழ்ப்பாணத்தில் குடியேற்றி மனித நேயமேம்பாடு அளித்து, மாணவர்களிற்கு சிறந்த கல்வி அளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. யாழ்ப்பாணத்தின் பெருமை மிக்க கல்லூரிகளாக மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, விக்டோரியாக் கல்லூரி, சோமஸ்கந்தா, காரைநகர் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி போன்றவற்றில் இடம்பெயர்ந்த மாணவர்களை இணைத்து சிறந்த கல்வி ஊட்ட வேண்டியது கடமையாகும்.

அடுத்து வன்னி முகாம்களில் இருந்து வரும் மக்கள் பாரிய உளதாக்கத்திற்கு உட்பட்டு உள்ளனர். அவர்களை வீடுகளிற்கு விடுவித்தாலும் அவர்கள் ஒரு சிறிய வட்டத்தில் சுற்றி நிற்கின்றனர். அவர்கள் ஓர் உளவியல் ரீதியாக முட்கம்பிக்குள் தான் உள்ளனர். இதனையும் அகற்றுதல் வேண்டும். அடுத்து அங்கவீனமுற்றவர்களுக்கு அவயங்கள் பொருத்துதல், மீளவும் செயற்பட வைத்தல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும். இதனை அரசாங்கமோ தனி ஒரு நிறுவனமோ தனித்து நின்று செய்ய முடியாது. பல்வேறு சமூக அமைப்புக்கள் சிறு சிறு பணி செய்தாலே சுமார் 20,000 மேற்பட்ட அங்கவீனர்களிற்கு நீண்ட புனர்வாழ்வு அளித்திடலாம். இதற்கு ஆலய நிர்வாகங்கள், சனசமூக நிலையங்கள் உதவ முன்வரவேண்டும்.

உண்மையான இறைவன் ஏழைகளிலும் பாதிக்கப்பட்டவர்களிலும் தான் உள்ளார். அவர்களிற்காக நாம் சேவை செய்தலே இறைவனுக்குச் செய்யும் தொண்டாக அமையும். குளக்கரையில் இருந்து பௌர்ணமி தினத்தில் பத்திரிகைகளுக்கு புகைப்படப் பொருளாவது சமூகத்திற்கு நல்லதல்ல. மழைகாலத்தில் முகாம்க்கள் நெருக்கடியினை சந்தித்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்கள் தான் கைகொடுக்க வேண்டும்.

இழப்பு என்பது எத்தகையது, மரணத்தினை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கு சமூகப் பெரியார்கள் அரசாங்கஅதிகாரிகளுக்கு விளங்கப்படுத்த வேண்டும். 30 வருட யுத்தத்தில் சுமார் 2 இலட்சம் தமிழ் மக்கள் அழிந்த நிலையில் உண்மையான சமாதானம் நிலைநாட்ட இறந்தவர்களை கௌரவப்படுத்தி அதன் மூலம் அவர்களின் உறவினர்களுக்கு சாந்தி ஏற்பட ஒரு நாளினை இலங்கை அரசு தேசிய விடுதலை தினமாக அறிவிக்க வேண்டும்.

இதன் மூலம் தமிழ்மக்கள் மனதிற்குள் பிளவுபட்டு இராது வெளிப்படையாகவே தமது கவலைகளை வெளிப்படுத்தி ஆறுதல் அடைவார்கள். இதனை மனித நேயம், ஆத்மீகம், மறுவாழ்வு என்பவற்றின் அடிப்படையில் நோக்க வேண்டும். அரசியல் ரீதியாகவோ இன் ரீதியாகவோ நோக்கக் கூடாது.

யாழ்ப்பாணத்தின் வாழ்வாதாரத்தில் உலக அரசியல் மாற்றமும் இந்திய சீனா என்பவற்றிற்கு இடையிலான போட்டியும் நேரடிப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இலங்கை அரசிற்கு இவை இராஜதந்திர ஆதரவு, பொருளாதார ஆரதவு, தொழில்நுட்ப ஆதரவு, இராணுவ ஆதரவு, என பல்வேறு வழிகளில் தமது பாதங்களைப் பரப்ப முனைந்து நிற்கின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக தென்கிழக்காசிய பௌத்த நாடுகளும் தமது பங்களிப்பினை நல்கிவருகின்றன. எனவே யுத்த காலத்தில் இவர்களின் ஆதரவு பாரிய மனித அழிவுகளுக்கும் மனித நேய சீர்த்திடமின்மைக்கும் காரணமானது. ஆனால் யுத்தத்திற்கு பின்பான சூழலில் இவை சூழல் மாசடைதலுக்கும் புவி வெப்பமடைதலுக்கும் காரணமாக அமைகின்றன.

(தொடரும்)

டாக்டர். சி. யமுனாநந்தா

# சிறப்பு முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்

## தமிழக அரசிடம் சீமான் வேண்டுகோள்

**சென்னை**

சிறப்பு முகாம்களில் தடுத்து வைக் கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் உடனடியாக விடு தலை செய்ய வேண்டும் என தமிழக அரசிடம் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

செங்கல்பட்டு, பூந்தமல்லி சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிரு ந்த 44 ஈழத்தமிழ் அகதிகளில் 15 பேரை தமிழக அரசு விடுவித்திருப் பது பாராட்டிற்குரியதாகும்.

ஈழத்தில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை உச்சகட்டத்தில் இருந்தபோது, அங்கே படுகாயமுற் றுக் கிடந்த மக்களுக்கு மருந்துப் பொருட்களையும், மண்ணெண் ணெய் உள்ளிட்ட சில அத்தியாவசி யப் பொருட்களையும் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் இங் கிருக்கும் பல ஈழத்தமிழ் அகதிகளை தமிழக காவல் துறை கைதுசெய்து, சிறப்பு முகாம்கள் என்று பெயரில் சிறையை ஏற்படுத்தி தடுத்து வைத் தது. அவர்களுக்கு எதிரான வழக்குக ளில், பிணைய விடுதலை உள்ளிட்ட

> "சொந்த மண்ணிலும் சிறை, நம்பி பிழைக்க வந்த மண்ணிலும் சிறை என்றால் எப்படி? தமிழர்களாக பிறந்ததைத் தவிர, வேறு எந்தப் பாவமும் இவர்கள் செய்யவில்லை"



சட்ட ரீதி யான நிவார ணங்களைக் கூட பெறு வதற்கு அனுமதிக்கா மல் தடுத்து வைக்கப்பட் டிருந்தனர். இவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்று தமிழின அமைப்புகள், அரசியல் கட்சிகள் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்திருந்தனர். சிறப்பு முகாம் களில் அடைபட்டுக் கிடந்தவர்கள் பலமுறை பட்டினிப் போராட்டம் நடத்தி தங் களை உடனடியாக விடுவித்து, தமிழ் நாட்டிலுள்ள இதர முகாம்க ளில் வசிக்கும் தங்கள் உறவி னர்களுடன் வாழ அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து அவர்களில் 15 பேர் விடுவிக் கப்பட்டுள்ளனர்.

இன்னமும் 29 பேர் பூந்த மல்லி, செங்கல்பட்டு முகாம் களில் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர். அவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இவர் கள் அனைவரும் இரண்டு முதல் 5 ஆண்டுகள் வரை சிறைப்படுத்தப் பட்டுள்ளனர் என்பதை கருத்தில் கொண்டு இப்பிரச்சினையை அணுக வேண்டும்.

தங்கள் சொந்த மண்ணிலும் சிறை, நம்பிப் பிழைக்க வந்த மண்ணிலும் சிறை என்றால் எப்படி? தமிழர்களாக பிறந்ததைத் தவிர, வேறு எந்தப் பாவ மும் இவர்கள் செய்யவில்லை. இந்த நிலையை தமிழக அரசு நினைத்துப் பார்க்க வேண்டும்.

எனவே, 15 பேர் மீது கருணை காட்டி விடுவித்தது போல், மீதமுள்ள 29 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு நாம் தமிழர் கட்சி தாழ்மையுடன் வேண்டுகோள் விடுக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# யமனாக வந்த திருஷ்டி பூசணி

**சேலம்:**



ஆயுத பூஜையை யொட்டி வீதி யில் உடைக்க ப்பட்டிருந்த திருஷ்டிப் பூச ணிக்காய் மீது ஏறிய மோட் டார் சைக்கிள் நிலைதடுமாறி விழுந்ததில் குறித்த மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 12 வயது சிறுமி டிராக்டரில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

தமிழகத்தில் நேற்று முன்தினம் ஆயுதபூஜை வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. கடைகள், வணிக நிறுவனங்கள், அலுவலகங்க ளில் இதையொட்டி பூஜைகள் நடத்த ப்பட்டன. பூஜைகளின் முடிவில் வீதி யில், தெரு நடுவில் திருஷ்டிப் பூச ணிக்காயை போட்டு உடைத்தனர்.

இத்தகைய நடவடிக்கையில் மூலம் போக்குவரத்துக்குப் பாதிப்பும் விபத் துக்களும் ஏற்படும் என்றும், அதை தவிர்க்கும் படியும் காவல் துறையினர் பல முறை எச்சரித்த போதிலும் அதையும் மீறி பூசணிக்காய்களை வீதியில் உடைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மேற்படி செயற்பாட்டால் ஒரு சிறுமி பரி தாபமாக உயிரிழந்துள்ளார்.

சேலம் களரப்பேட்டை வீதியில் நேற்றுமுன்தினம் காலை தனது தந் தையுடன் குறித்த சிறுமி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அப்போது வீதியில் உடைக்கப்ப ட்ட பூசணிக்காய் மீது மோட்டார் சை க்கிள் ஏறியுள்ளது. இதனால், வழுக் கிக் கொண்டு போன மோட்டார் சைக் கிள் நிலை தடுமாறி விழுந்தது. இதில் தந்தையும், மகளும் கீழே விழு ந்தனர்.

அப்போது பின்னால் வந்த டிராக்டர் சிறுமி மீது ஏறிவிட்டது. இதனால் சக் கரத்துக்குள் சிக்கி அந்தச் சிறுமி சம் பவ இடத்திலேயே பரிதாபமாக உயி ரிழந்தார்.

# 'இந்தியாவுடனான நட்பால் பாக். உறவு பாதிக்காது'

**புதுடில்லி:**

இந்தியாவுடனான எங்களின் நட்பு, பாகி ஸ்தானுக்கு எதிரானது அல்ல என ஆப்கா னிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தெரி வித்தார்.

டில்லியில் 'அப்சர்வர் ரிசர்ச் பவுண் டேஷன்' என்ற அமைப்பின் சார்பில், இடம் பெற்ற ஆர்.கே.மிஸ்ரா நினைவு சொற் பொழிவு நிகழ்வில் கலந்து கொண்டு பேசு கையிலேயே அவர் இவ்வாறு தெரிவி த்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது,

பாகிஸ்தானும் நாங்களும் இரட்டைச் சகோதரர்கள். அதேநேரத்தில், இந்தியா எங் களின் நல்ல நண்பன். இந்தியாவுக்கும் எங் களுக்கும் இடையேயான நட்பு காரணமா கவோ இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட் டுள்ள ஒப்பந்தம் காரணமாகவோ பாகிஸ் தானுடனான எங்களின் உறவு எந்த வகை யிலும் பாதிக்கப்படாது. இந்தியாவுக்கும், எங்களுக்கும் இடையேயான நட்பை, பாகி ஸ்தானுக்கு எதிரானதாக கருதக் கூடாது. பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, எந்த நாட்டுக் கும் எதிரானது அல்ல.

இந்தியாவுடனான நட்பு, புதிய விடயம் அல்ல. கடந்த இரண்டு ஆண்டுக ளாகவே, எங்களுக்கு ஏராளமான உதவிகளை இந்தியா செய்துள்ளது என்றார்.

# இந்திய வரலாற்றிலேயே மிகப்பெரிய குற்றவாளியாகப் பேசப்பட்டவர் ஜெயா

## தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன்

**சென்னை:**

இந்திய வரலாற்றிலேயே மிகப்பெரிய குற்றவாளியாகப் பேசப்பட்டவர் ஜெய லலிதா என தி.மு.க. பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பழகன் பேசினார்.

திருச்சி மேற்கு தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு. க. வேட்பாளர் முன்னாள் அமைச்சர் கே.என். நேருவை ஆதரித்து தி.மு.க. பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பழ கன் பிரசாரம் மேற்கொண்டார். அப் போது அவர் பேசியதாவது,

இந்திய வரலாற்றிலேயே மிகப்பெரிய குற்றவாளியாகப் பேசப்பட்டவர் ஜெய லலிதா. டான்சி நிலவழக்கில் தனது கையெழுத்தையே மறுத்து பின்னர் நீதி மன்ற தீர்ப்புக்குப் பின்னர் உண்மையை ஒப்புக்கொண்டவர்.

தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட பஞ்சமி நிலத்தை ஆக்கிரமித்து சொகுசு பங்களா கட்டிக்கொண்டு அந்த இடத் தை இன்னும் ஒப்படைக்காதவர் ஜெய லலிதா.

கூட்டணிக் கட்சியினரை மூன்று மாத த்திற்குள்ளேயே விரட்டி அடித்து சர்வா



திகாரத்துடன் நடந்துகொண்ட ஜெய லலிதாவுக்கு தேர்தலில் மக்கள் பாடம் புகட்ட வேண்டும். கூட்டணிக் கட்சிக் காரர்கள் ஓடிவந்தார்கள். அந்த அம்மை யாரை எதிர்க்கமுடியவில்லை. அந்தக் கூட்டணி நிலைக்கவில்லை. என்ன கார ணம் என்றால் அவர்களின் மனப்பாண் மை. எனவே இப்படிப்பட்ட மனப் பாண்மை உள்ள ஜெயலலிதாவின் ஆட் சி தொடர்ந்தாலும் கூட, அதை எச்சரிக்க க்கூடிய வகையில், அவர்களுடைய போக்கு சரியில்லை என்பதை உணர்த் தக்கூடிய வகையில், இந்த இடைத்தேர் தலை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

## சட்டவிரோத மின்பாவனை;48 பேருக்கு சட்ட நடவடிக்கை

(களுத்துறை மேலதிக நிருபர்)

களுத்துறை மாவட்டத்தில் சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்ட 48 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் களுத்துறைப் பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பண்டாரகம, ஹொரண, இங்கிரிய, மொரகஹன மற்றும் அங்குருபன்னந் தோட்ட ஆகிய பகுதிகளில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

## உடற் கல்வி டிப்ளோமா பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரிய நியமனம் ; அமைச்சர் உறுதி

(யாழ். மத்தி நிருபர்)

வட மாகாணத்தில் வேலையற்று பல வருடங்களாக காத்திருக்கும் உடற்கல்வி டிப்ளோமா தாரிகளுக்கு விரைவில் உடற் கல்வி ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன உறுதியளித்துள்ளார்.

வேலையற்று பல வருடங்களாக காத்திருக்கும் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளின் நிலைமை பற்றி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் உடனடி கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதன்போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார். வடக்கு மாகாணத்தில் 2005 இலிருந்து வெளியேறிய டிப்ளோமா பட்டதாரிகளில் 95 பேர்இது வரை ஆசிரியர் நியமனத்தில் உள்வாங்கப்படவில்லை.

மேற்படி ஆசிரியர் நியமனத்திற்கு கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை மூலமும் கல்வி தகைமை அடிப்படையிலும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டு வட மாகாணத்தில் 3&II ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவரென கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது வேலையற்றிருக்கும் உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளின் விபரங்களை உடன் தயாரித்து அனுப்பி வைக்குமாறும் கல்வி அமைச்சின் செயலாளரை அமைச்சர் கேட்டுள்ளார்.

## திருகோணமலையில் படை வீரர் பலி

### 13 பேர் படுகாயம்

திருகோணமலையில் புதன்கிழமை இடம்பெற்ற விபத்து ஒன்றில் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 13 படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

திருகோணமலை திஸ்ஸ கடற்படை தளத்தில் நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொண்ட படையினரை ஏற்றிச் சென்ற வாகனமே பூநகர் பகுதியில் மரம் ஒன்றுடன் மோதியுள்ளது.இந்தச்சம்பவத்தில் 14 படையினர் படுகாயமடைந்தனர்.இவர்கள் சேருநுவர,கந்தளாய் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த படையினரில் ஒருவர் நேற்று காலை மரணமானதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் நிகால் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

### விசுவமடுவில்...

பற்றைகளாக வளர்ந்திருக்கும் காணியைத் துப்புரவு செய்யும் போதே இவ் வெடிக்காத ரவகைள் மீட்கப்பட்டுள்ளதால் மேலும் அப்பகுதியில் இதுபோல் இன்னமும் வெடிக்காத வெடிபொருட்கள் இருக்கலாமென அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் அப்பகுதி இராணுவத்தினரிடம் முறையிட்டுள்ளார்.

### குரும்பசிட்டியில்...

ஜெனரல் ஹத்துருசிங்ஹவும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் இராணுவத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

21 வருடங்களுக்குப்பின் இப்பகுதியில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட போதும் அப்பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லையென மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிக்கு அருகாமையில் விமான தளம் உள்ளதன் காரணமாக இது தடையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது விடுவிக்கப்பட்ட பகுதியில் பொன் பரமநாதர் வித்தியாலயம் உட்பட 5 இந்துக் கோவில்களும் இங்கு காணப்படுகின்றது.

மீள்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ள பகுதியில் அடுத்துவரும் நாட்களில் பற்றைக் காடுகள் வெட்டும் பணியில் மக்களும் பிரதேச செயலகம், மற்றும் பிரதேச சபைகளும் ஈடுபடவுள்ளன.

### தூக்குத் தண்டனை...

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு இருபதாண்டு காலத்திற்கு மேலாக சிறையிலே வைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் முன் வரவேண்டும் என்றும் அதற்காக தமிழக அரசு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்ப வேண்டும் என்றும் அனைவரும் கேட்டுக்கொண்டு பல நாட்களாகியும், தமிழக அரசு அதற்கு முன் வராத நிலையில், மத்திய அரசாவது இவர்கள் மூவரையும் சிறையிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு உதவிட வேண்டும் என்று பிரதமரையும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியை வழிகாட்டும் தலைவி சோனியா காந்தியையும் தி.மு.க. சார்பில் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

### பாலஸ்தீனத்தில்...

பராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இன்று அரசாங்கம் வடக்கில் மட்டுமல்ல, கிழக்கிலும் இராணுவத்தை நிலை கொள்ளவைக்கும் நடவடிக்கையிலேயே முனைப்பாக மேற்கொண்டு வருகின்றது.

நிரந்தரமாக இராணுவ நிலைகளை உருவாக்குவது முகவர்களை உருவாக்குவது இராணுவத்திற்கான குடியிருப்புக்களை உருவாக்குவது போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதனோடு வடக்கு, கிழக்கில் பரந்துபட்ட நிலையில் இராணுவம் குடியமர்த்தப்படுமாகவிருந்தால் அங்கு இதன் பிற்பாடு சிங்கள மக்களை குடியேற்றவும் அவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலையையும் ஏற்படுத்த முடியுமென்ற திட்டமிட்ட செயற்பாடு அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

இதனால் எவரும் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்படுவதுடன் அரசாங்கம் தான் விரும்பியவற்றை நடத்தலாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் முப்பது வீதம் சிங்கள மக்களை குடியேற்ற வேண்டும் என்ற கொள்கையினடிப்படையில் தான் அரசு இயங்கி வருகின்றது. இந்த நிலையில் தான் அரசின் மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சர்வதேசத்தினால் சுமத்தப்பட்டு அரசு பெரும் இக்கட்டில் மாட்டிக் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகள் காலத்தில் யுத்தம் நடந்தது, அதற்கு முன்பு தந்தை செல்வா அஹிம்சை முறையில் போராடினார், 30 வருடங்களுக்கு மேலாகப் போராடினார்.

அப்பொழுது இலங்கையில் அஹிம்சைப் போராட்டமொன்று நடப்பதாக உலகத்திற்கு தெரியாது. தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் துன்புறுத்தப்படுகின்றனர் தமிழ் மக்களின் நிலங்கள் எந்தளவு கபளீகரம் செய்யப்படுகின்றது என்பதும் அன்று உலகுக்குத் தெரியாது.

ஆனால் ஆயுதப் போராட்டமொன்று தொடங்கிய பொழுது அந்தப் போராட்டம் ஓரளவுக்கு வெளியே தெரிய வந்தது. ஆனாலும் அதற்கான ஆதரவு கிடைக்கவில்லை.

இறுதி யுத்தம் நடைபெற்று முடிந்த பின்பு புலிகள் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம் ஆனால் அந்தப் போராட்டமென்பது மக்களின் இவ்வளவு இழப்பு என்பது இன்று சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு நியாயமான பிரச்சினை இருக்கின்றது.

தமிழ் மக்கள் இந்த இலங்கை மண்ணில் சரிசமமாக நடத்தப்படவில்லை. அவர்கள் இரண்டாம் தரப்பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர். அந்த மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு தேவை. இலங்கை அரசாங்கம் அதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டுமெனக் கூறும் அளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன.

அது மட்டுமன்றி இலங்கை அரசியலை இராணுவ மயப்படுத்தும் திட்டமும் தெரிந்து அது பிழை இராணுவம் அப்புறப்படுத்தப்பட்டு பொலிஸார் தான் சட்டம் ஒழுங்கை கவனிக்க வேண்டுமெனவும் உலகம் சொல்லியுள்ளது.

அதே வேளை இலங்கை அரசுக்குப் பாரிய நெருக்குதல்கள் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை அரசு தன்னைப் பாதுகாக்க ஜனாதிபதி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள கோத்தபாய ராஜபக்ஷ தன்னை பாதுகாத்துக் கொள்ள ஏன் ராஜபக்ஷ குடும்பத்தையே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் நிச்சயம் பல கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய உரிமைகளைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கும் தள்ளப்படும் நிலை வந்துள்ளது.

இதுவெல்லாம் தமிழ் மக்கள் கொடுத்த விலையால் வந்துள்ள நிலையாகும். எமது தியாகம், நாம் கொடுத்த பலிகள் நிச்சயமாக நாம் தலைநிமிர்ந்து வாழும் நிலையை விரைவில் தோற்றுவிக்கும். நாங்கள் எமது மண்ணில் எம்மை ஆளக் கூடிய வகையில் வாழ்வோம்.

எவர் என்ன செய்தாலும் அரசு கூடிய பிரச்சினைகளை நமக்கு ஏற்படுத்தினாலும் கூட இன்று நிலைமை மாறிக் கொண்டு வருவதே உண்மையாகும்.

இதே வேளை நாங்கள் இந்த மண்ணில் வாழப் பிறந்தவர்கள் அதற்கு ஏற்றவகையில் நாங்கள் எங்களது உரிமைகளுடன் வாழ வேண்டும். இன்று ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியூடாக பலஸ்தீனம் தனி நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென உலகுக்குக் கூறியுள்ளார்.

எமக்கு முன்பாக பல தசாப்தங்களாக அந்த மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். எனவே தனி நாடு கோரிக்கை சரியானதே. ஆனால் அந்த பலஸ்தீனத்தைத் தனிநாடாக்க வேண்டுமென்று கூறுபவர்கள் பலஸ்தீனத்திற்கு எதிராகவிருக்கும் இஸ்ரேல் அங்கு என்ன மோசமான வழிமுறைகளைப் பின்பற்றுகின்றதோ அதை இங்கும் தமிழ்ப் பிரதேசங்களில் பின்பற்றுகின்றனர். என்பது தான் வேடிக்கையான வேதனையான விடயமாகும்.

பலஸ்தீனத்தில் முஸ்லிம் மக்கள் வாழக்கூடிய காஸா பிரதேசம் போன்ற பல பிரதேசங்களில் இஸ்ரேலியக் குடியிருப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. பலஸ்தீன மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் இவை உருவாக்கப்படுகின்றன.

இதே பாணியில் தான் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை இன்று சூறையடித்து கபளீகரம் பண்ணி அந்த மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர் என்றார்.

# ஆப்பிள் நிறுவனத்தின் நிறுவனர் ஸ்டீவ் ஜோப்ஸ் மரணம்

ஆப்பிள் நிறுவனத்தின் நிறுவனர் ஸ்டீவ் ஜோப்ஸ் நேற்று முன்தினம் மரணமடைந்தார். புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த ஸ்டீவ் ஜோப்ஸ் நியூயோர்க் நகரில் மரணமடைந்தார். இவரது மரணம் உலகம் முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய நவீன கணினி உலகத்தில் விஞ்ஞான புரட்சியில் முக்கிய இடம் வகித்து வருவது ஆப்பிள் நிறுவனம். ஐபாட் வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்பத்தில் முன்னணியில் விளங்கும் இந்த நிறுவனத்தை உருவாக்கிய ஸ்டீவ் ஜோப்ஸ், கடந்த ஆகஸ்ட் வரை அதன் தலைவராகவும் இருந்தார். இவருடைய மரணம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பில்கேட்ஸ் ஆகியோர் தங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.



# தாம் தயாரித்த விமானத்தில் 23 நாடுகளை சுற்றி வந்த வயோதிபத் தம்பதிகள்



பிரித்தானியாவைச் சேர்ந்த ஒரு தம்பதியினர் தாமே பிரத்தியேகமாக தயாரித்த விமானத்தில் 23 நாடுகளைச் சுற்றி வலம் வந்துள்ளனர்.

இவர்கள் 16 வருடமாகக் கட்டப்பட்ட உள்ளூர்த் தயாரிப்பான சிறியதொரு விமானம் மூலம் 99 பரப்புகளில் இந்த சாதனையை படைத்துள்ளனர்.

இத்தம்பதியருக்கு 23 நாடுகளையும் சுற்றிப் பார்ப்பதற்கு ஒரு வருடமும் ஒரு நாளும் தேவைப்பட்டுள்ளது.

பிரித்தானிய வான்சேவையில் பணியாற்றி ஓய்வுபெற்ற விமானியும் அவரது மனைவியும் தான் இந்தச் சாதனையை படைத்துள்ளனர்.

இவர்கள் தாஜ்மகால் மற்றும் கிசாவிலுள்ள பிரமிட்டுக்கள் அடங்கலாக உலக அதிசயங்களையும் கண்டுகளித்துள்ளனர். இதற்கு 1320 கலன் எரிபொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இச் சுற்றுலாவுக்கு 2,400,000 ரூபா செலவாகியுள்ளது. இவர்கள் இருவருமே இந்த தனிவிமானத்தை உருவாக்கினார்கள். பின்னர் இதற்கான இயந்திரத்தை நியூயோர்க்கிலிருந்து பெற்றிருந்தனர்.

இதேயளவு பணத்தினால் தம்மால் ஒரு வர்த்தக விமானத்தை வாங்கமுடிந்திருந்தாலும் அப்படிச் செய்யாது, 18 மாதங்களில் இதைச் செய்துமுடித்தது பாரிய சாதனையென்றே அவர்கள் கூறினர். இத் தம்பதிகள் அடுத்ததாக வட தென் துருவங்களுக்கிடையே பறப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

# குட்டைப்பாவாடை போடும் பெண்களே அதிகம் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாகின்றனர்



## ஆய்வுகளில் தெரிவிப்பு

கடந்த காலங்களில் நடைபெற்ற பாலியல் துஷ்பிரயோகங்களை உற்று நோக்குகையில், குட்டைப்பாவாடை போடுகின்ற பெண்களே அதிகம் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர் என நடத்தப்பட்ட ஆய்வுகளில் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் குட்டைப்பாவாடை போட்டு பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருப்பதால் ஆண்களின் உணர்ச்சிகள் தூண்டப்பட்டு துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கவர்ச்சி இலகுவாக கண்ணுக்கு தெரிந்துவிடும். ஆபத்தும் இலகுவாக வந்துவிடும். இவை அதிகமாக மேலைத்தேய நாடுகளில் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன.

# தனியாக வாழ்வதாகக்கூறி அரசிடமிருந்து சலுகைகள் பெற்ற பெண்

தான் தனியாக வாழ்ந்து வருவதாக பொய் கூறி அரசின் சலுகைகள் பலவற்றை அனுபவித்துவந்த பெண் பொலிஸாரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

33 வயதான இப்பெண் 1997 ஆம் ஆண்டு முதல் கணவனைப்பிரிந்து வாழ்வதாக கூறி அனைவரையும் நம்பவைத்துள்ளார்.

ஆனாலும் வீட்டுக்கு அருகில் கரவன் என்று சொல்லக்கூடிய ஒரு கொட்டகையில் கணவனுடன் இவ்வளவு காலமும் வாழ்ந்திருக்கிறார்.

இவரது அனைத்து பிள்ளைகளும் 1997 - 2008 காலப்பகுதியில் பிறந்ததாக அத்தாட்சிப்பத்திரமொன்றை தயாரித்து மேற்படி மோசடியில் ஈடுபட்டதாக விசாரணையில் தெரியவருகிறது.

இவ்வளவு நாளும் யாருக்கும் தெரியாத இந்த விடயம் அருகில் உள்ளவர்கள் மூலமாகவே பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டது.

# முட்டை மசாலா ப்ரெட்



### தேவையான பொருட்கள்

முட்டை : 2
வெங்காயம் : 2
பச்சை மிளகாய் :1
தாளிக்க எண்ணெய் : ஒரு தேக்கரண்டி
கடுகு, கறிவேப்பிலை
உப்பு : ஒரு சிட்டிகை
மஞ்சள் தூள் : ஒரு சிட்டிகை
பாண் : 8 துண்டுகள்
நெய் : 2தேக்கரண்டி
வெள்ளரி : 1
தக்காளி : 2

### செய்முறை

வெங்காயம் பச்சைமிளகாய் ஆகியவற்றை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். முட்டையை உடைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றி நன்கு கலக்கி உப்பு மஞ்சள் தூள் அரைத்து போட்டு அடித்துக்கொள்ளவும்.

வெள்ளரிக்காயை தோல்சீவி வளையங்களாக நறுக்கிக் கொள்ளவும். தக்காளியை மெல்லிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

அடுப்பில் வாணலியைக் காயவைத்து ஒரு தேக்கரண்டி எண்ணெயை விட்டு காய்ந்ததும் கடுகு, கருவேப்பிலை போட்டு தாளித்து வெங்காயம், பச்சை மிளகாய் போட்டு நன்கு வதக்கவும்.

அதை கலந்து வைத்துள்ள முட்டைக் கலவையில் சேர்த்து நன்கு கலக்கிவிடவும்.

அடுப்பில் தோசைக் கல்லைக் காய வைத்து சிறு அடைகளாக முட்டையை ஊற்றி திருப்பிப் போட்டு வேக வைத்து எடுக்கவும். இந்தக் கலவையில் 4 அல்லது 5 அடைகள் ஊற்றலாம். உள்ளங்கையளவு வருமாறு பார்த்துக்கொள்ளவும்.

பாண் துண்டுகளை இரண்டிரண்டாக கல்லில் போட்டு சுற்றிலும் லேசாக நெய்விட்டு அதிகம் முறுகவிடாமல் இளம் பதத்தில் ரோஸ்ட் செய்து எடுக்கவும் இரண்டு ரோஸ்ட் செய்த பாண் துண்டுகளின் நடுவில் ஒரு முட்டை அடை வைத்து முட்டைக்கு முன்னும் பின்னும் ஒரு வெள்ளரி, ஒரு தக்காளி ஸ்லைஸ் வைத்துக்கொடுங்கள்.

1 பீஸ் பாண் முட்டை மசாலா உண்டபின் ஏதாவது குடித்துவிட்டால் அப்புறம் குழந்தைகளின் தெம்பிற்கு கேட்கவே வேண்டாம். உற்சாகமாய் செயல்படுவார்கள்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
"யாழ் ஓசை" வீரகேசரி கிளைக் காரியாலயம்
117,புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்

# கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாலய வளர்ச்சிக்கு அதிபர்கள் ஆற்றிய பணி மகத்தானது



கொக்குவில் பிரதேசத்தில் மாணவர்களுக்கு அறிவு மற்றும் ஒழுக்க விழுமியங்களைப் புகட்டும் கல்விக்கூடமாகத் திகழ்வது யாழ்.கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாலயமாகும். நல்லூர் கல்விக் கோட்டப் பிரிவில் உள்ள வகை 2 பாடசாலையாக இது இயங்குகின்றது. இவ் வித்தியாலயமானது 1922 ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதியன்று த. குமாரசுவாமிப் புலவரினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது தலைமை ஆசிரியராக எஸ். வேலுப்பிள்ளை கடமையாற்றியுள்ளார்.



அதிபர்
ந. கந்தவனச் செல்வன்

இப்பாடசாலை 1929 இல் சைவ வித்தியா அபிவிருத்தி சபையிடம் கையளிக்கப்பட்ட பின் 1960 இல் அரசாங்கம் இப்பாடசாலையை பொறுப்பேற்றுக்கொண்டது.

இவ் வித்தியாசாலையில் பல அதிபர்கள் கடமையாற்றியுள்ளார்கள். அவர்களில் எஸ். சதாசிவம்பிள்ளை, த. தர்மலிங்கம், கா. கணேசதாசன், கா.பழனி வேற்பிள்ளை, கி.கிருஷ்ணகுமார் , க. பரமேஸ்வரன் , செ. இளங்கோ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டத்திலும் கடமையாற்றிய அதிபர்களின் பணி முக்கியமானதாக இருந்துள்ளது. ஆரம்பத்தில் வகை ஒன்று பாடசாலையாக இருந்ததுடன் பின்னர் 1969 இல் வகை இரண்டு பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.

இவ் வித்தியாசாலையின் பொன்விழா கொண்டாட்டம் 1972 இல் நடைபெற்றதுடன் 1974 இல் பொன்விழா நினைவாக புலவர் அரங்கு அமைக்கப்பட்டது. அத்துடன் 1982 இல் வைரவிழா கொண்டாடப்பட்டு அதன் நினைவாக ''ஞானபண்டிதம்'' என்னும் மலரும் வெளியிடப்பட்டது.

இப் பாடசாலையில் தற்போது அதிபராக ந. கந்தவனச் செல்வன் கடமையாற்றி வருகின்றார்.தரம் ஒன்று முதல் தரம் 11 வரையும் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இவ் வித்தியாலயத்தில் தற்போது 197 மாணவர்கள் கல்வி கற்க 18 ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றார்கள். மாணவர்கள் கற்றல் செயற்பாடுகள் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கி வருகின்றார்கள். இவர்களின் திறமையினை வெளிக்கொண்டுவர அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மிகுந்த ஈடுபாடுகாட்டி வருகின்றார்கள்.

இவ் வித்தியாலயமானது ''அறிவும் ஒழுக்கமும் நல்லிணக்கமும் வாழ்க்கைத் தேர்ச்சியும் மிக்க பிரஜைகளை உருவாக்குதல்'' என்ற நோக்க கூற்றுடனும் ''சமூக மற்றும் தேசிய முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வினைத்திறன் மிக்க மனித சமூகத்தை நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு உதவும் வகையில் உருவாக்குதல்'' என்ற பணிக்கூற்றுடனும் இயங்கி வருகின்றது.

இப் பாடசாலையின் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவருவதற்கு களம் அமைப்பதற்கு ஏதுவாக இந்துமாமன்றம், ஆரம்பப்பிரிவு மாணவர்மன்றம், ஆங்கிலமன்றம், சமூக விஞ்ஞானமன்றம் மற்றும் கனிஷ்டபிரிவு கலை இலக்கிய மன்றம் என்பன இயங்கிவருகின்றன.

இவ் வித்தியாலய மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் அவர்களின் திறமைகளினை வெளிக்காட்டுகின்றன. தரம் 5 புலமைப் பரீட்சையில் 2009 ஆம் ஆண்டில் இரு மாணவர்கள் சித்தியடைந்தனர். இவ்வருடம் ஏழு மாணவர்கள் நூறு புள்ளிக்கு மேல் பெற்றுள்ளார்கள்.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் வருடாந்தம் குறிப்பிட்ட தொகையான மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றார்கள். 2010 ஆம் ஆண்டில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளமையினைக் குறிப்பிடமுடியும்.

2010 ஆம் ஆண்டு 15 வயதுப் பிரிவு வலயமட்ட உயரம் பாய்தலில் முதலாமிடத்தினை மாணவி எஸ். பிரியங்கா பெற்றுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டு வலயமட்ட பிரிவு இரண்டு குறுவினா விடைப் போட்டியில் இ.லோறன்ஸ் இரண்டாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

> 2010 ஆம் ஆண்டு 15 வயதுப் பிரிவு வலயமட்ட உயரம் பாய்தலில் முதலாமிடத்தினை மாணவி எஸ். பிரியங்கா பெற்றுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டு வலயமட்ட பிரிவு இரண்டு குறுவினா விடைப் போட்டியில் இ.லோறன்ஸ் இரண்டாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

இவ் வித்தியாலயத்தில் 2010ஆம் ஆண்டு கல்வி நம்பிக்கை நிதியம் வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதே ஆண்டு 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டுள்ளதுடன் கல்வி அமைச்சினால் கணினிக்கூடத்திற்குரிய கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன.



2010 இல் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தாவினால் இரண்டு கணினிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் போட்டோ கொப்பி இயந்திரத்தினையும் வழங்கியுள்ளார்.

இப் பாடசாலையில் பல்வேறு தேவைகள் காணப்படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானது இங்குள்ள வகுப்பறைக் கட்டிடங்கள் மாணவர்களுக்குரிய காற்றோட்டமுள்ள வகுப்பறைக் கட்டிடங்களாக மாற்றியமைக்கப்படவேண்டும். மாணவர்களுக்கு கற்றல் சூழல் ஏற்படுத்தப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

இப் பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியினை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு விளையாட்டு மைதானம் ஒன்றின் தேவையும் காணப்படுகின்றது.

இவ் விதியாசாலையில் மாணவர்கள் விஞ்ஞான பாடசெய்முறையினை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்படவேண்டியதுடன் சிறுவர் செயற்பாட்டு அறையும் அமைக்கப்படவேண்டிய நிலை காணப்படுகின்றது.

மாணவர்களுக்கு உடற்கல்வியினைப் போதிப்பதற்கு உடற்கல்வி ஆசிரியரின் தேவையுள்ளதுடன் நவீன கற்பித்தல் முறைகளுக்கு ஏற்ப கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு வசதியாக பல்லூடக எறியி ஒன்றின் தேவையும் காணப்படுகின்றது.

இவ் வித்தியாசாலையின் தேவைகள் நிவர்த்திசெய்யப்பட்டு மாணவர்களின் கல்வித்தரத்தினை அதிகரிப்பதற்கு அனைத்து தரப்பினரும் உதவ முன்வர வேண்டும் என்பது பாடசாலைச் சமூகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

● ஞா.செந்தமிழ் செல்வன்

# மாணவர் மலர்




படத்தில் வெறுமையாக உள்ள வட்டத்தில் 1 முதல் 7 வரையுள்ள எண்களை நிரப்ப வேண்டும். ஆனால் முக்கோணத்தின் ஒவ்வொரு பக்கத்தின் கூட்டுத்தொகையும் 23 வர வேண்டும். முயற்சி செய்யுங்கள்....

## நான் வைத்தியரானால்

நான் 'செய்யும் தொழிலே தெய்வம்'என்பதைக் கருத்திற்கொள்வேன்.

எனது கற்றலுக்கு உதவிய பெற்றோருக்கு முதலில் நன்றி கூறுவேன்.

நான் என்னை இந்த நிலைக்கு உயர்த்திய ஆசிரியருக்கு நன்றி செலுத்துவேன்.

நான் எத்தகைய பாகுபாடுகளுமின்றி சேவை ஆற்றுவேன்.

ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்வேன்.

நோயால் அல்லலுறும் மக்களின் துயர் துடைக்க அயராது உழைப்பேன்.

*கி. கிறிஸ்ரிக்கா*
***மாதகல் சென் தோமஸ் றோ.க.த பெண்கள் பாடசாலை***

## வேகமாக ஓடும் சிறுத்தை



மிக வேகமாக ஓடுகின்ற விலங்கு எது என்று தெரியுமா? சிறுத்தைதான். இதை 'சீட்டா' என்று ஆங்கிலத்தில் மட்டுமல்ல இந்தியில் செல்லமாக அழைக்கப்படுகிறது. சீட்டா என்றால் புள்ளிகள் என்று அர்த்தம். இதன் உடல் முழுவதும் புள்ளிகள் இருப்பதால் தான் இதற்கு சீட்டா என்று பெயர் வந்திருக்கிறது. சிறுத்தை மணிக்கு நூறு கிலோ மீற்றர் வேகத்தில் ஓடும். ஆனால் குறுகிய நேரம் தான் இந்த வேகத்தில் ஓடும். அதன் பின் பழைய நிலைக்கு திரும்ப இதுக்கு அரை மணி நேர ஓய்வு தேவை. தற்போது மனிதர்கள் இதன் இடங்களை எல்லாம் ஆக்கிரமித்து வருவதால் இதன் இனம் குறைந்து குறைந்து அழிந்து வருகிறது. ஆபிரிக்காவில் மட்டும் 12 ஆயிரம் சிறுத்தைகள் இருக்கின்றன.

## இவரைப்பற்றி அறிவோம்

### திருநாவுக்கரசு நாயனார்

திருநாவுக்கரசு நாயனாரின் இயற் பெயர் மருணீக்கியர் ஆகும்.
பெற்றோரை இழந்த அவர் தனது அக்கா திலகவதியாருடன் வாழ்ந்து வந்தார்.
அவர் சமண சமயத்தில் சேர்ந்ததால் திலகவதியார் கவலைப்பட்டு இறைவனிடம் அழுதார்.
இறைவன் சூலை நோய் மூலம் அவரை மனம் மாற்ற விரும்பினார்.
வலிதாங்க முடியாமல் அக்காவிடம் சென்று அழுதார்.
திலகவதியார் அவரை ஆலயத்திற்கு கூட்டிச் சென்றார்.
விபூதியைப் பூசி இறைவன் முன் மனமுருகி அழுது வணங்கினார்.
பாடும் திறன் பெற்றார். உடனே 'கூற்றாயினவாறு'பதிகத்தை பாடினார்.
நோய் நீங்கி சிவனடியாரானார் திருநாவுக்கரசுநாயனார்.

***நேசராஜ்குமார் தமிழினி***
***தரம் 3 கிளிநொச்சி***

## படிக்கிற வயதினிலே...

மாரித்தாய் தன் மனதைக் கல்லாக்கிக்கொண்டு நான்காம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த செல்வத்தை ஆள் தெரியாத பாசை புரியாத ஊருக்கு அனுப்ப சம்மதித்துவிட்டாள்.

மூன்றுவேளை இட்லி, தோசை, பிரியாணி கிடைக்கும் என்றதும் பசிபட்டினியால் வாடிக்கிடந்த செல்வமும் ஆசையுடன் ஊருக்குச் செல்ல சம்மதித்தான் அது மட்டுமல்ல ஊருக்குப் போய் நிறைய பணம் சம்பாதித்துக் கொண்டு வர வேண்டும் அம்மாவின் கஷ்டங்களை எல்லாம் போக்க வேண்டும் என்று கனவுகண்டான்.

ஆனால் நடந்ததோ வேறு. அந்த பிஞ்சு மனதில் தோன்றிய எண்ணங்கள் எல்லாம் ஒரே மாதத்தில் சிதைந்தன கனவு மட்டுமா? மூன்று வேளை உணவு என்பதும் பொய்யாகிப்போனது. ஊருக்குச் சென்ற ஒரு வாரத்துக்கு சொன்னது போல் கவனித்தார்கள். வேலை குறைவாகக் கொடுத்தார்கள் அவர்களும் அம்மாவிடம் பேச அனுமதித்தனர். ''அம்மா நல்லா இருக்கிறேன் வேலை கஷ்டமில்லை நல்லா சாப்பாடு போடுறாங்கள்'' என்று பேசி முடித்ததும் தான் தாமதம் அவனை வேலை வேலை என்று ஓயாமல் தொல்லைகொ



டுத்துக்கொண்டிருந்தனர். படிப்படியாக அவனுக்கு தரப்பட்ட உணவும் குறைந்தது. உடல் நலமும் சரியில்லை அதனால் அவனால் முன்புபோல் வேலை செய்யமுடியவில்லை அப்போதெல்லாம் ''என்ன நடிக்கிறாயா?'' என்று அவனை அடித்து மிரட்டினார்கள். ஊருக்கு போன் செய்ய அனுமதிக்கவில்லை. செல்வம் திகைத்தான், தவித்தான். அவனைப்போல் நூறு பேர் கொத்தடிமைகளாக துவண்டுகொண்டிருந்தனர்.

ஒரு முறை ரயில் நிலையத்தில் முறுக்கு விற்றுக்கொண்டிருந்தான். அங்கே பாதுகாப்பிற்காக நின்றுகொண்டிருந்த பொலிஸிடம் தன் நிலைமையைப் பற்றி எடுத்துக்கூறினான். உடனே அவர் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து இது பற்றி உண்மை நிலைவரங்களை விசாரித்தார். விசாரணை துரித கதியில் முடக்கிவிடப்பட்டது உண்மை நிலவரங்களை அக்குவேறு ஆணிவேறாக துருவித்துருவி ஆராய்ந்தனர். காவலர்கள் அவனைப்போலே கொத்தடிமைகளாக சிக்கித்தவித்த நூறு சிறுவர்களையும் மீட்டனர். உண்மைக் குற்றவாளிகள் சிறையில் தள்ளப்பட்டனர்.

கறுத்து மெலிந்து வந்த செல்வத்தை கண்டு தாய் மாரித்தாய் நெஞ்சம் பதறிப்போய் கட்டியணைத்து கண்ணீர் வடித்தாள். நடந்த விபரம் கேட்டதும் நயவஞ்சகர்களை நெஞ்சில் கடிந்து கொண்டு கதறியழுதாள் பிள்ளைக்காக தான் கஷ்டப்பட்டு உழைத்து பள்ளிக்கு அனுப்பி படிக்கவைத்தாள் செல்வத்தின் முகம் மீண்டும் மலர்ந்தது. செல்வத்தின் முகத்தில் சந்தோசத்தைப் பார்த்ததும் படிக்கவேண்டிய வயதில் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது பாவம் என்பதை மாரித்தாய் உணர்ந்து கொண்டாள்.



உ.காயத்திரி
தரம் 1 E
யா/கொக்குவில் இந்து ஆரம்ப படசாலை

## தெரிந்து கொள்ளுங்கள்

குளோரோபார்மின் இரசாயன பெயர்- ட்ரைகுளோரோமீத்தேன்
நிலநடுக்கத்தை அளக்கும் கருவி- சீஸ்மோகிரா
உலக அமைதி தினம்- அக்டோபர் 2
ஹர்சர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீன பயணி- யுவான்சுவாங்
மேகதூதத்தை எழுதியவர்- காளிதாசர்
நரேன் கார்த்திகேயன் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்? - கார் பந்தயம்

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்புங்கள்
அனுப்பவேண்டிய முகவரி
**'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.**
**117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

## யாழ்ப்பாண வாழ்வியல்:

# காழ்ப்புணர்ச்சியுடன் கூடிய ஓர் ஊடகத்தின் ஏக்கம்



யாழ்ப்பாணத்தின் பாரம்பரியம், வரலாறு என்பவற்றை இளம் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையிலும் அவை பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடனும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வாழ்வியல் என்ற மகுடத்தில் செப்டம்பர் 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருட்காட்சி ஒன்றை நடத்தியது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் இந்தப் பொருட்காட்சியைக்கண்டுகளித்த

> **உண்மையிலேயே வடபகுதி மக்கள் மீதும் அவர்கள் பண்பாட்டின் மீதும் குறித்த அச்சு ஊடகத்துக்கு அக்கறை இருந்திருக்குமானால், ஏலவே இவ்வாறான பொருட்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்து அதற்கான அனுசரணையினையும் வழங்கியிருக்கலாம். அதனைவிடுத்து பல்கலைக்கழக சமூகத்தையும் அவர்களுக்கு அனுசரணை வழங்கிய ஊடகத்தையும் விமர்சிக்க நினைப்பது,அதன் வங்குரோத்து நிலையைக்காட்டுவதாகவே அமைந்துள்ளது.**

னர். அதுமாத்திரமன்றி மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஒருநாள் நீடிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இது யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்துக்கும் துணைவேந்தருக்கும் மற்றும் பேராசிரியர்களுக்கும் அங்கு கல்விபயிலும் மாணவர்களுக்கும் பெரும் பெருமை சேர்க்கும் ஒன்றாக அமைந்திருந்தது என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் பொருட்காட்சி வெற்றிபெறவும் அதற்கு தேவையான வசதிகளை மேற்கொள்ளவும் இலங்கையின் முன்னணி தமிழ் ஊடகம் ஒன்று தனது சர்வதேச மாதஇதழ் ஊடாக அனுசரணையினை வழங்கியிருந்தது.

இந்தப் பொருட்காட்சியின் உன்னத நோக்கத்தையுணர்ந்த குடாநாட்டின் முன்னணி ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்கியிருந்தன.எனினும் இதுவரை காலம் யாழ்ப்பாணத்தின் பாரம்பரியங்கள் ,வரலாறு தொடர்பில் எந்தவிதமான அக்கறையோ அன்றேல் கரிசனையோ கொண்டிராத வடபகுதி பிராந்திய அச்சுஊடகமொன்று தமக்கே உரிய பாணியில் தனது வசைபாடல்களை ஆரம்பித்துள்ளது. 'கழுதைக்கு தெரியுமா கற்பூரவாசனை' என்ற வகையிலேயே அதன்செயற்பாட்டை நோக்கவேண்டியுள்ளது.

அதாவது,தனது கையாலாகாத்தனத்தை மூடிமறைக்கும் வகையிலும் மிகுந்த காழ்ப்புணர்ச்சியுடனும் குறித்த ஊடகம் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அதன் முதிர்ச்சியின்மையை வெளிப்படுத்தியுள்ளதாக வடபகுதிமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த அச்சு ஊடகம் ஒரு கட்சிப்பத்திரிகையோ என்று எண்ணும் அளவுக்கு எந்தவிதமான ஊடக தர்மமுமின்றி செயற்படுவது ஒருபுறமிருக்க,அப்பாவி மக்களை வெறும் மாயையில் விட்டு வைத்து அதன்மூலம் அவர்களின் அடிமடியையும் விட்டுவைக்கவில்லை என்றே வடபகுதிமக்கள் இன்று விசனம் தெரிவிக்கின்றனர். அது மாத்திரமன்றி ,தனது தூரநோக்கற்ற போக்காலும் தெளிவற்ற கொள்கையாலும் அப்பாவி ஊடகவியலாளர்கள் பலர் உயிரிழக்கவும் காரணமாகவிருந்தது என்ற யதார்த்தத்தையும் மறந்துபோகக்கூடாது. அவர்களது குடும்பங்கள் இன்றும் கண்ணீரிலேயே தங்கள் காலத்தைக் கடத்துகின்றன.

வடபகுதி மக்களின் உழைப்பில் இதுவரைகாலம் தன்னை வளர்த்துக் கொண்ட குறித்த ஊடகம் இதுவரை எந்தவொரு நற்காரியத்துக்கேனும் நிதிசெலவிட்டு அனுசரணை வழங்கியுள்ளதா என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

தனது வணிக இருப்பை உறுதிப்படுத்தவே இந்த பொருட்காட்சியை அனுசரணை செய்துள்ளதாகக் கூறும் இப்பிராந்திய ஊடகம் இதன் மூலம் தனது உண்மையான சுயரூபத்தை வெளிக்காட்டியுள்ளது. அதாவது தேசிய ஊடகங்கள் வடக்கில் காலடிவைக்குமானால் துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்ற நிலை தனக்கு தோன்றிவிடுமோ என்ற அச்சமே தவிர வேறு எதுவும் இல்லை என்பது தெளிவானதாகும்.

வணிக நோக்கமே இல்லாதது போன்றும் சேவை நோக்கம் ஒன்றே தனது குறி என்பது போலவும் பாசாங்கு செய்யும் இந்த அச்சு ஊடகம், பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்காக ஏதாவது உதவிகளை இதுவரை வழங்காதது ஒருபுறமிருக்க அவர்கள் சொல்லொணா துன்பங்களுடன் ஓடோடி வந்து உயிரிழந்துபோன தங்கள் உறவுகளுக்காக மரண அறிவித்தல்களை வழங்கிய போது பெருந்தன்மையுடன் அவற்றை இலவசமாக ஏற்றிருந்தாலோ அன்றேல் சற்று கட்டணத்தைக்குறைத்திருந்தாலோ, அந்த ஊடகம் கூறுவது நியாயமாக இருக்கும்.அதை விடுத்து வெறுமனே சாத்தான் வேதம் ஓதுவது



போன்று தெரிவிக்கும் கருத்துக்கள் மேலும் வியப்பை தருவனவாகவே அமைந்துள்ளன.

வடக்கில் இதர பத்திரிகைகள் போட்டிபோட்டு முன்னேறிவரும் இன்றைய சூழ்நிலையில் தனது இருப்பைக்கூட உறுதிசெய்யமுடியாத நிலை உருவாகிவிடுமோ என்ற அச்சமும் குறித்த ஊடகத்துக்கு ஏற்பட்டிருக்கலாம். அதன் வெளிப்பாடாகவே குறித்த பொருட்காட்சியைக் கொச்சைப்படுத்த எண்ணி தனது தலையிலேயே சேற்றை வாரிஇறைத்திருக்கலாம் என்பதும் பொதுவான கருத்தாகும்.

**- இணுவில் பாலா**

உண்மையிலேயே வடபகுதிமக்கள் மீதும் அவர்கள் பண்பாட்டின் மீதும் குறித்த அச்சு ஊடகத்துக்கு அக்கறை இருந்திருக்குமானால், ஏலவே இவ்வாறான பொருட்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்து அதற்கான அனுசரணையினையும் வழங்கியிருக்கலாம். அதனைவிடுத்து பல்கலைக்கழக சமூகத்தையும் அவர்களுக்கு அனுசரணை வழங்கிய ஊடகத்தையும் விமர்சிக்க நினைப்பது, அதன் வங்குரோத்து நிலையைக்காட்டுவதாகவே அமைந்துள்ளது.

தமிழ் தேசியம் என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் குறித்த ஊடகம் எவ்வாறான போக்கைக் கொண்டது என்பதும் தெரியாத ஒன்றல்ல என்று கூறும் வடபகுதிமக்கள் 'பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும்' காட்டுவதிலேயே தனது காலத்தை ஓட்டிவருகின்றது என்பது வெளி உலகிற்கு தெரியாததல்ல என்றும் கூறுகின்றனர். யாழ்ப்பாண மக்கள் யதார்த்தத்தை உணர்ந்தவர்கள். அவர்களின் காதில் பூச்சுற்ற முடியாது என்பதையும் சம்பந்தப்பட்ட ஊடகம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இருபது வருடகாலமாக இவ்வாறானதோர் பொருட்காட்சி வடக்கில் நடைபெறவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளும் கூறும் குறித்த பிராந்திய ஊடகம் அதில் தவறு காண்பதில் மாத்திரமே தனது நேரத்தை செலவிட்டுள்ளமை மிகவும் பரிதாபகரமான நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளதையே எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. மறுபுறம் தம்மால் ஓர் ஐம்பது பேரையாவது திரட்டி ஒரு நிகழ்வை மேற்கொள்ள முடியாத நிலையில் இவ்வாறு ஆயிரக்கணக்கான மக்கள் இதில் பங்கு கொண்டுள்ளனரே என்ற ஆதங்கமாகவும் இருக்கலாம் என்றும் பலரும் பேசிக்கொள்கின்றனர். யாழ். பல்கலைக் கழகத்தையும் நுண்கலைப்பீடத்தையும் குறைகூறுமளவுக்கும் விமர்சிக்கும் அளவுக்கும் இந்த ஊடகத்துக்கு என்ன அருகதையுள்ளது என்பது தான் புரியாத புதிராகவுள்ளது. உண்மையில் இந்த பொருட்காட்சியை யாழ். பல்கலைக்கழகமும் வரலாற்றுத் துறையுமே ஒழுங்கு செய்திருந்தன. இது கூட தெரியாத நிலையிலேயே குறித்த ஊடகம் தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளது.

ஒருவகையில் அதன் நிலை உணர்ந்து பரிதாபப்படுவதைத்தவிர வேறு வழியில்லை என்பதே உண்மை.

# உடைபடும் அரசியல் கட்சிகள்

# மாட்டிக்கொள்ளுமா தமிழ்த் தேசிய கூட்டமைப்பும்?

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் தமிழ் மக்களுக்காக இருந்த ஒரேயொரு நம்பிக்கை வெளிச்சமான தமிழ்த்தேசியக் கூட்மைப்பும் சிதற தொடங்கியிருக்கின்றது. ஆளும் மஹிந்த அரசு, கட்சிகளை உடைத்து பலவீனப்படுத்துவதில் என்றுமே திறமையானது. இலங்கையில் எதிர்க்கட்சி என்ற ஒன்று இல்லை என ஐக்கிய தேசியக்கட்சி சிதறடிக்கப்பட்டுள்ளது. இன்று வரை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கரமசிங்க தனது தலைவர் பதவியை தக்கவைத்துக் கொள்ள நாள்தோறும் போராடவேண்டியவராகவுள்ளார்.

மற்றுமொரு எதிர்க்கட்சியான ஜே.வி.பி.யோ இப்போது மூன்றாவது தடவையாக பிளவுண்டுள்ளது. ஏற்கனவே விமல் வீரவன்ச குழுவொன்றுடன் பிரிந்து சென்றிருந்த போதும் அப்பிளவு ஜே.வி.பி.க்கு பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியிருக்கவில்லை. ஆனால் விமல் வீரவன்சவோ கூடிச்சென்றவருடன் பிரிந்து செல்லவேண்டி ஏற்பட்டிருந்தது. இப்போது மீண்டும் ஜே.வி.பி மற்றுமொரு பாரிய பிளவை சந்தித்துள்ளது. ஆனால் இம்முறை ஏற்பட்டுள்ள பிளவு மோசமான பின்னடைவை ஜே.வி.பி.க்கு ஏற்படுத்தியுள்ளது. நீண்ட இடைவெளியின் பின்னர் ஜே.வி.பி. தனது கட்சி அலுவலகத்தையும் பத்திரிகை அச்சகத்தையும் காப்பாற்றுவதற்காக போராடவேண்டியுள்ளது.

ஏற்கனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பவையும் உடைக்கப்பட்டன. முரண்டுபிடித்துக்கொண்டிருந்த ரவூப் ஹக்கீம் மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரும் சரணாகதி அரசியல் சமரசத்துக்கு வந்துகொண்டனர். ஆளுக்கொரு அமைச்சர் ஆசனங்களுடன் அடங்கிப் போவதாக அவர்களது அரசியல் இருந்தது. இவ்வாறு உடைந்த கட்சிகள் உடையாத கட்சிகள் என அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவேண்டியிருந்ததால் அமைச்சரவை உலகெங்கும் இல்லாதவாறு பரந்தே அமைந்திருந்தது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டுமே உடைக்கப்பட முடியாத கட்சியாக பறைசாற்றிக்கொண்டிருந்தது. ஆனாலும் அதுவும் கடந்த பாராளுமன்ற தேர்தலுடன் உடைவுகளை சந்திக்கவேண்டியிருந்தது. கிஷோர், கனகரத்திரம், தங்கேஸ்வரி என முன்னாள் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கும்பலொன்று பிரிந்து சென்று அசர தரப்புடன் களமிறங்கியது. ஆனால் அவர்கள் படுதோல்வியை சந்திக்கவேண்டியிருந்தது. அத்துடன் அரசியலில் இருந்து அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். பின்னர் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டு அம்பாறையில் வெற்றியீட்டிய பியசேன எதிர்பாராதவாறு பல்டி அடித்து அரச பக்கம் சேர்ந்து அதிர்ச்சியளித்தார். அதே போன்று கூட்டமைப்பிலிருந்து விலகி தேர்தல் களம் நின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சிவாஜிலிங்கம் அணி என்பனவும் தோல்வியைச் சந்திக்க வேண்டியிருந்தது.



தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளே இருந்த நிலையில் யுத்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட தோல்வி கள நிலையை மாற்றியிருந்தது. இந்நிலையில் விடுதலைப்புலிகளது அரசியல் பிரதிநிதிகளாக அறிமுகம் செய்யப்பட்டிருந்த தமிழ்தேசியக் கூட்டமைப்பையே தமது அரசியல் தலைமைகளாக தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். அவ்வாறாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைக்க முற்பட்டவர்களையோ வெளியேறி தேர்தல் களம் இறங்கியவர்களையோ தமிழ் மக்கள் அங்கீகரித்திருக்கவில்லை. நடந்து முடிந்துபோன தேர்தல் தோல்விகள் அதனையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளது உள்குளறுபடிகளும் குத்துக்காரணங்களும் இப்போதுவரை ஓய்ந்தபாடில்லை. தமிழரசுக் கட்சியின் தலைமைகளே பெரும்பாலான குளறுபடிகளின் தோற்றுவாயாக உள்ளமை மறுக்கப்பட முடியாததாகவே உள்ளது. பிற கட்சிகளை ஓரங்கட்டும் நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சி வெற்றிகரமாக முன்னெடுத்தே வருகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என முரண்பாடுகளும் வெளியேற்றங்களும் தொடர்ந்தன.

இப்போது கூட சொல்லிக்கொள்ளத்தக்கதாக எதுவுமில்லை. மீண்டும் அரசுடன் பேச்சுக்களை கூட்டமைப்பு ஆரம்பித்து விட்டதாக ஊடகங்களுக்கு அறிக்கைவிடுகிறார்கள். பங்காளிக் கட்சிகளான தாங்கள் கூட பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிய வேண்டியிருப்பதாகக் கூறுகிறார் கே.சிவாஜிலிங்கம். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான அவர் தமிழீழ விடுதலை இயக்கத்தின் அரசியல் தலைவருமாவார். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாயினும் சரி, ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாயினும் சரி கட்சித் தலைமை என்ன செய்கின்றது என்பதை தெரியாதே இருக்கின்றனர். பெரும்பாலானவர்களுக்கு கட்சித் தலைமை யாரிடமிருக்கின்றது என்பதே தெரியவில்லை என்கின்றனர். சம்பந்தன் ஒன்றைக் கூறுகிறார். சுரேஷ் இன்னொன்றைக் கூறுகிறார். தேசியப் பட்டியில் உறுப்பினர் சுமந்திரனோ இன்னொன்றை கூறுகின்றார். என்ன நடக்கிறது என்பதே புரியவில்லை என்கிறார் இளம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர். எல்லோரும் அதிகாரம் செலுத்தவும் தன்னிச்சையாக முடிவுகளை எடுத்து திணிக்கவுமே முற்படுவதாவும் அவர் கவலை கொண்டுள்ளார்.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் மனோகணேசனுக்கு ஆதரவளிக்ககோரி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் விருப்பம் கொண்டிருந்தனர். ஆனால் மாவை சேனாதிராஜா அவ்வாறு பிரசாரங்களுக்கு செல்ல முற்பட்டவர்களை தடுத்து நிறுத்தி இது கட்சித் தலைமை முடிவென கூறிக்கொண்டார். ஆனால் சம்பந்தனோ அரசுக்கு ஜால்ரா போடும் வகையில் கூட்டமைப்பு எவரையும் ஆதரிக்காது தமிழ் மக்களே தீர்மானித்துக் கொள்ளட்டும் என மழுப்புகின்றார். ஆனால் நடந்து முடிந்த வடக்கு உள்ளூராட்சித் தேர்தலில் மனோ கணேசனை கூட்டமைப்பு முழு அளவில் பிரசாரத்திற்கு பயன்படுத்திக்கொண்டிருந்து.

இதனிடையே தமிழர் விடுதலைக் கூட்டணி தனது பொதுக்குழுக் கூட்டத்தை அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்தி முடித்தது. அழைப்பு விடுக்கப்பட்ட கட்சிகளில் தமிழரசுக் கட்சியும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் தமது பிரதிநிதிகளை அனுப்பிவைத்திருக்கவில்லை. கூட்டமைப்பு பங்கெடுப்பதில்லை என்ற முடிவு உயர்மட்டத்தினரிடையே எடுக்கப்பட்டபோதும் அதனது இரண்டாம் கட்ட தலைமைகள் விடயம் தெரியாது நிகழ்வில் பங்கெடுத்தே இருந்தனர். குறிப்பாக உள்ளூராட்சிச் சபைதலைவர்கள் பலரும் பங்கெடுத்தே இருந்தனர். அவர்கள் பலரும் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவனால் அச்சுறுத்தப்பட்டமை தனியான கதையாகும்.

அரசினால் வடக்கில் காணிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைக்கு எதிராக மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியால் கொண்டுவரப்பட்ட முயற்சி தோற்கடிக்கப்பட்டமை இவ்வாறானதொரு சதியே எனக் கூறப்படுகிறது. இதனை விநாயகமூர்த்தி உறுதிப்படுத்திக்கொண்டார். அரசினைப் பகைத்துக்கொள்வதை தவிர்க்கவும் விநாயகமூர்த்தி பெயரை தட்டிச்செல்வதை தடுக்கவே இறுதி நேரத்தில் சரவணபவன் பல்டி அடித்ததாகவும் கூறப்படுகிறது. முன்னதாக சரவணபவனது உறுதிமொழியை அடுத்தே விநாயமூர்த்தி பிரேரணையைக் கொண்டுவந்ததாகவும் கூறப்படுகிறது.

ஒட்டுமொத்தத்தில் பங்காளிக் கட்சிகளை புறந்தள்ளிவிட்டு தனியாவர்த்தனம் வாசிக்கவே தமிழரசுக் கட்சி மீண்டும் முனைப்புக்காட்டி வருகிறது. பங்காளிக் கட்சிகள் அனைத்துமே குளறுபடிகளால் சோர்வுற்றுள்ளன. தமிழரசுக் கட்சியின் தலைமை எனக் கூறிக்கொள்ளும் ஓரிருவரது சுயநல அரசியல் ஒட்டுமொத்த பின்னடைவுகளை தமிழ் சமூகத்திற்கே ஏற்படுத்தப் போகின்றது.

• பாவலன்

# வடக்கு, கிழக்கு உதவி ஆசிரியர்களுக்கு பாரபட்சம்

## - இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் மகாசிவம்

காரைதீவு,

அரசாங்கம் ஒரே நாடு ஒரே மக்கள் என்று கூறிக் கொண்டு வட கிழக்கு ஆசிரியர்களுக்கு பாரபட்சம் காட்டுகிறது. வட-கிழக்கிலுள்ள உதவி ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் ரூபா 3000 வழங்கப்பட நாட்டின் ஏனைய பிராந்திய உதவி ஆசிரியர்களுக்கு ரூபா 6000 வழங்கப்பட்டு வருகிறது. இது பாரபட்சமில்லையா? அநீதியில்லையா? இதனை அனுமதிக்க முடியுமா. இதற்கெதிராகப் போராட வேண்டும்.

இவ்வாறு சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர் சங்கம் கூட்டிய ஆசிரியர் தின விழாவில் உரையாற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் த. மகாசிவம் அறைகூவல் விடுத்தார்.

சங்கத் தலைவர் வி.ஸ்ரீதரன் ஆசிரியர் தின விழாவிற்கு தலைமை வகித்தார்.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரும், விரிவுரையாளருமான சரா.புவனேஸ்வரன் உலக ஆசிரியர் தின வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தார்.

அங்கு த. மகாசிவம் மேலும் பேசுகையில்:-உதவி ஆசிரியர்களுக்கு ரூபா 6000 என்பது தமிழர் ஆசிரிய சங்கத்தின் நிலைப்பாடு அல்ல. உண்மையில் இத்தொகை போதுமானதல்ல. உதவி ஆசிரியர்கள் அனைவரையும் இலங்கை ஆசிரியர் சேவை 3 II ற்குள் உள்வாங்கி உரிய சம்பளத்தை வழங்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

### நிலுவை வேண்டும்

1998 முதல் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய அதிபர், ஆசிரியர் சம்பள அளவுத் திட்டத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிலுவையுடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்காக எமது சங்கம் தனித்தும் ஒருமித்தும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடும். அதற்கு நாம் தயாராகவுள்ளோம். உலகில் 3 கோடி ஆசிரியர்களைக் கொண்டுள்ள சர்வதேச கல்வியகத்தில் நாம் அங்கம் வகிக்கிறோம். FES போன்ற தொழிற்சங்கத்தின் பின்புலமும் எமக்குள்ளது.

அத்தகைய மாபெரும் மறைமுக சக்தியுடன் பொருளாதாரத்திலும் நிறைவாகவுள்ளோம். எனவே எமது குரலுக்கு செவிசாய்க்க வேண்டிய கடப்பாடு அரசுக்குண்டு.

பால் நிலை சமத்துவத்திற்காக போராடவேண்டும் என சர்வதேச கல்வியகம் இவ்வாண்டு கூறியுள்ளது.வன்னியிலிருக்கும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குமாறு தொடர்ச்சியான வேண்டுகோள்களை விடுத்து வருகிறோம். வன்னியிலும் தீவகத்திலும் நிலவிய கணித, விஞ்ஞான ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நீக்க ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களை நியமிக்குமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் சந்திரஸ்ரீயை நேரில் கண்டு கோரிக்கை விடுத்தோம்.

அவரும் எமது குரலுக்கு மதிப்பளித்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களிடமிருந்து ஒரு தொகுதி ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமித்துள்ளார். இதற்கு தீவக இணைப்பாளர் சண்முகலிங்கமும் நன்றி தெரிவித்திருந்தார். எனவே, ஆசிரிய சமூகம் ஒன்று பட்டு நிற்கும் போது எமது உரிமைகளை கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்றார்.

ஆசிரிய மாணவர் சார்பில் பேசிய ஒருவர் உங்களின் அனைத்துப் போராட்டங்களுக்கும் நாம் பக்க பலமாக நிற்போம். தேவைப்பட்டால் களத்தில் இறங்குவோம் என்று கூறினார்.

# வேடுவக் கிராமத்து சிறுவர்களுக்கு ஆங்கில பயிற்சி

பதுளை,

மகியங்கனை பகுதியின் தம்பானை என்ற வேடுவக் கிராமத்து சிறார்களுக்கு, ஆங்கில மொழியினை கற்பிக்கும் வேலைத்திட்டமொன்று புதன்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தம்பானையின் மாவரகல ஆரணியத்தில் மேற்படி ஆங்கில மொழியினை கற்பிக்கும் வேலைத் திட்டம் ஆரம்பமாகியது.

திரிய பதனம அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும், இவ் வேலைத் திட்டத்தில், வேடுவச் சிறார்கள் பெருமளவில் இணைந்து ஆங்கில மொழியினை ஆர்வமாக கற்க ஆரம்பித்துள்ளனர்.

# மானிய உர விநியோகத்தில் மோசடி ஜனாதிபதி புலனாய்வுப் பிரிவு விசாரணை

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அக்கரைப்பற்று கிழக்கு கமநல சேவைப் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு 'மஹிந்த சிந்தனை' வேலைத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட மானிய விலை உரத்திற்கு மேலதிக கட்டணம் பெறப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

பெரும்போகம் மற்றும் சிறுபோகம் என்பவற்றின் போது விவசாயிகளிடமிருந்து மேலதிகமாக 17 இலட்சத்து 82 ஆயிரத்து 35 ரூபா பெறப்பட்டுள்ளமை விசாரணைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் இது தொடர்பான முறைப்பாட்டினை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தனர். ஜனாதிபதியின் செயலாளர் புலனாய்வுப் பிரிவு அத்தியட்சர் திலக் இத்மல் கொடவுக்கு வழங்கிய பணிப்புரையயடுத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மானிய விலை உரமூடையொன்றுக்கு ரூபா 350/= பெறப்பட்டதுடன் ஏற்றியிறக்கல் என்ற பெயரில் உரமூடையொன்றுக்கு ரூபா 20 முதல் 60 வரை மேலதிகமாகப் பெறப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உரமூடைகளை அக்கரைப்பற்று கூட்டுறவுச் சங்கம் ஏற்றி இறக்கியதாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு கூட்டுறவுச் சங்கம் ஏற்றியிறக்கல் பணிகளில் ஈடுபடவில்லை என்றும் விவசாயிகளே தங்களது செலவில் ஏற்றியிறக்கல் பணிகளை மேற்கொண்டனர் என்பதும் தெரியவந்துள்ளது.

விவசாயத் திணைக்களம் கூட்டுறவுச் சங்கம் என்பனவற்றின் உத்தியோகத்தர்கள் இதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளமை புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

# இனந்தெரியாத நபரின் தாக்குதலில் பிரதேச சபை உறுப்பினர் படுகாயம்

பதுளை,

மகியங்கனை பிரதேச சபை உறுப்பினரான வட்டருக்க விஜித்த தேரர், மஹியங்கனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் தாக்குதலுக்கு இலக்காகி, மகியங்கனை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

மகியங்கனை பிரதேச சபை உறுப்பினரான அத்தேரர், பிரதேச மக்களின் தேவையொன்றின் காரணமாக அதனை நிவர்த்தி செய்வதற்கு பிரதேச செயலகம் சென்றிருந்த வேளையில் இனந்தெரியாத இளைஞரொருவரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இதனையடுத்து, தேரரைத் தாக்கிய இளைஞன் ஓடித் தப்பியுள்ளான். பிரதேச செயலகத்தில் கூடியிருந்தவர்கள் குறிப்பிட்ட இளைஞனை பிடிக்க எடுத்த முயற்சிகளும் பயனளிக்கவில்லை. கடும் காயங்களுக்குள்ளாகிய தேரர், மகியங்கனை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக மகியங்கனை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரையடுத்து, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த குமார தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர், இதுவரை இச்சம்பவம் குறித்து எவரும் கைது செய்யப்படவில்லை.

தேரரைத் தாக்கியவரை உடனடியாக கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தும்படி பிரதேச மக்கள் பொலிஸாருக்கு எதிராக மறியல் போராட்டமொன்றினையும் ஆரம்பித்துள்ளனர்.

# கல்முனையில் கலந்துரையாடல்

(பாலமுனை மேலதிக நிருபர்)

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பிரதேச வைத்திய அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களுடனான கலந்துரையாடலும், அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று முன்தினம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெற்றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.எஸ். இப்றாலெப்பை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி, அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம். அப்துல் மஜிட் - மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் தேவராஜ் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நுவரெலியா மாநகரசபை எல்லைக்குள் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை

## - உதவி வலய கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

நுவரெலியா,

நடைபெறவிருக்கும் நுவரெலியா மாநகரசபை தேர்தலை முன்னிட்டு நுவரெலியா மாநகரசபை எல்லைக்குள் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக உதவிவலய கல்வி பணிப்பாளர் நடராஜா தெரிவித்தார்.

மேலும் நாளை நடைபெறவிருக்கும் நுவரெலியா மாநகரசபை தேர்தலில் 18,472 வாக்காளர்கள் 16 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளார்கள்.

இவ் வாக்குகளை எண்ணுவதற்காக நுவரெலியா மாவட்ட செயலகத்தில் 4 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் கடமைகளுக்காக 200 அரச உத்தியோகத்தர்களும் 20 வாகனங்களும் ஈடுபடுத்தியுள்ளதாகவும் நுவரெலியா உதவி தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரட்னாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா மாநகரசபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய இலங்கை ஜனநாயக முன்னணியும், ருகுணு ஜனதா கட்சியும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் தனித்து போட்டியிடுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடுகின்றன.

இத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட ஐந்து அரசியல் கட்சிகளுடன் 6 சுயேட்சை குழுக்கள் சார்பில் 143 வேட்பாளர்கள், 10 உறுப்பினர்கள் தெரிவிற்காக போட்டியிடுகின்றனர்.



# கல்வியின் நோக்கம் சிதைவடைந்து பரீட்சைக்கான கல்வியாகின்றது

கல்வி என்பது ஆகாயத்தில் இருந்து உதித்தோ அல்லது ஏனைய மனித செயல்களிலும் சமுதாய அமைப்புக்களிலும் இருந்து வேறுபட்டு தனியே வளர்ச்சி காணவில்லை. கல்வி இயற்கையுடன் இணைந்த மனிதவர்க்கத்தின் நுண்ணறிவுச் செயல்பாடுகளினூடாக தோற்றமளித்த ஒரு அமைப்பாகும். ஆதலால் இயற்கை காரணிகளும் சமூக அமைப்பும் மனித சிந்தனையுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது.

எந்தவொரு நாட்டின் கல்வி செயற்பாடுகளை கற்கும் போதும் அந்த நாட்டின் கலாசாரம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம் போன்ற முக்கிய அம்சங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து காணப்படும். இதனூடாகவே மாணவர்களை கல்வி செயற்பாட்டில் ஈடுபட வைத்து நாட்டின் அபிவிருத்திக்கு முக்கிய பங்காற்றுவது வெள்ளிடைமலை ஆகும்.

ஆனால் இன்று எமது நாட்டில் கல்வி என்பது பரீட்சைக்கான கல்வியாகவே மாறிவருகின்றது. இது நாட்டின் வளர்ச்சிக்கோ, அபிவிருத்திக்கோ எந்த விதத்திலும் உதவப்போவதில்லை என்பதை யாவரும் அறிந்தும் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிக்காமல் உள்ளனர். முகாமைத்துவம், வணிகம், விஞ்ஞானப் பட்டப்படிப்பினை பூர்த்திசெய்த பட்டதாரிகள் பாடசாலைகளில் ஆரம்ப பிரிவில் பொருத்தமற்ற பாடங்களை கற்பித்துக் கொண்டிருப்பதை காணலாம். இதனால் அவர்கள் துறைசார்ந்த சிந்தனை அற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். இதற்கு தீர்வாக துறைசார் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களை அத்துறைகளில் நியமித்து நாட்டின் வளர்ச்சிக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்காற்ற இடமளிக்கவேண்டும்.

கல்வியின் ஊடாகவே சமூகத்தில் வன்முறையற்ற மக்களை உருவாக்க முடியும். ஏனெனில் மனிதன் ஒரு சமூக பிராணியாதலால் அவன் வாழும் சூழலில் ஏனையவர்களுடன் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் இயல்பாகும். இத்தொடர்பு ஆரம்பத்தில் குடும்பத்துடனும் அயலவர்களுடனும் அதன் பின்னர் பாடசாலைகளிலும் ஏற்பட்டு சமுதாய கட்டுமாணம் பரிணமிக்க உதவுகின்றது. இதன் ஊடாக சமய, கலாசார, அரசியல் தொடர்புகள் விருத்தியடைந்து கல்வி கற்றவர்களின் ஊடாக பாமரமக்கள் அறிந்து கொள்ளும் விடயங்கள் பல என கூறிக் கொள்ளலாம். இன்றைய சமூக அமைப்பை எடுத்துக்கொண்டால் எல்லோரும் கல்வியில் ஆர்வம் கொண்டு கற்றுவருகின்றார்கள். ஆனால் குடும்பங்களிலும், அயலவர்களுடனும் தொடர்பற்றவர்களாக கல்வி கற்பதில் / தேடுவதில் மட்டும் ஆர்வம் கொண்டு நேரமற்று அலைவது பரீட்சைக்காக மட்டுமே தவிர சமூக விழுமியங்களை பாதுகாக்கவோ, சமூகத்தில் இடைத் தொடர்புகளை வலுப்படுத்தவோ இல்லை. 'கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு' என்பது அனுபவத்தையே எடுத்துக்காட்டுவதாக புலப்படுகின்ற போதும் எம்மவர் தமது பெயரின் பின்னால் பட்டங்களை பதிப்பதிலே அதிக அக்கறை கொள்கின்றனர். அதனூடாக தமது வருமானத்தையும் பதவியையும் உயர்த்தி கொள்ளும் சுயநலப் போக்கை உருவாக்கி கொண்டிருப்பதை கண்கூடே காணக்கூடியதாகவுள்ளது. ''ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது'' என்பது போல் பிள்ளைகளை பெற்றோர்கள் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதிலே அதிக அக்கறை கொள்ளுகின்றனர். இதனால் சமூக விழுமியங்களிலோ, அரசியல் அபிலாசைகளிலோ நாட்டமற்ற சமூக அமைப்பே உருவாகும் சந்தர்ப்பம் இன்றைய கல்விமுறையால் உருவாகியுள்ளது. எனவே கல்வி என்பது தமிழரின் சொத்து. அதை முப்பது வருடகால யுத்தத்தில் கூட இழந்துவிடவில்லை.

எனவே இதனை கருத்தில் கொண்டு கல்வியின் ஊடாக சாணாக்கியம் உள்ள சமூகம் ஒன்றை உருவாக்க முன்வர வேண்டும்.

*''கற்க கசட கற்றவை கற்றபின்*
*நிற்க அதற்கு தக''*

**தர்மகுமாரன்**
*ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி*

---

# உலகை ஆக்கிரமித்துள்ள மின்வெளிப் பயங்கரவாதம்

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*



தனிநபர்களையோ அல்லது குழுக்களையோ புண்படுத்தும் நோக்கில் அல்லது அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக் கில் செயற்படுதலை மின்வெளித் தொந்தரவு (Cyberstalking) எனக் கூறுவோம். இந்தக் குற்றச் செயல்கள் பல்வேறு முறைகளில் கையாளப்படுகின்றன.

மின்வெளிப் பயங்கரவாதம் அல்லது இணையத்தளக் குற்றங்கள் பரந்துபட்டவை. அவற்றில் இலங்கையில் பதிவான முக்கியமான முறைப்பாடுகளில் சிலவற்றையே நாம் இங்கு தந்துள்ளோம். இதுதவிர இன்னும் பல்வேறு குற்றச்செயல்கள் காணப்படுகின்றன.

பூலோகமயமாதலில் பிரதான பங்கினை வகிக்கும் இணையத்தளங்கள், சமூக வலையமைப்புகள் தொடர்பில் விழிப்புடன் செயற்படவேண்டியதே இதனைத் தடுப்பதற்கும் தவிர்ப்பதற்கும் வழியாகும்.

***இவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகள் என்ன?***

★ தேவையற்ற தொடுப்புகள் (Link) கோப்புகளை சொடுக்கும் (Click) போதும் தரவிறக்கம் செய்யும்போதும் இருமுறை சிந்தித்தல்

★ பயனர் கணக்கு, கடவுச் சொற்களை தனிப்பட்ட ரீதியில் பேணுதல்

★ தேவையற்ற, தெரியாத நபர்கள் குறித்து கவனமாக இருத்தல். குறிப்பாக சமூக வலைப்பின்னல்களில் போலிப் பெயர்களில் விடுக்கப்படும் அழைப்புகளை தவிர்த்தல்

★ போலியான பெயர்களில் காணப்படும் வைரஸ் எதிர்ப்பு (Antivirus) கோப்புகள் தொடர்பில் அறிந்து வைத்திருத்தல்

★ இணைய வங்கியியலை (Online Banking) மேற்கொள்பவராயின் தனிப்பட்ட கணினியை அதற்கென உபயோகித்தல்

★ சமூக வலையமைப்புகளைப்போல வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள போலி வலையமைப்புகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருத்தல்

★ இணையத்தளங்கள், புதிய தொழில்நுட்ப மாற்றங்கள் பற்றி அறிதல்

★ வீடியோ அழைப்புகளை மேற்கொள்ளுகையில் அவதானம்

ஆகிய வழிமுறைகளையும் பாதுகாப்பான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலம் குற்றச்செயல்களைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

இணைய உலகில் வளர்ச்சியை நோக்கும் அதேவேளை மறுவிளைவுகளையும் நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். புதிதாக முளைக்கும் அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர்நோக்குவது என்பதில் கவனம் கொள்ள வேண்டும்.

இலங்கையில் இணையக் குற்றங்கள் தொடர்பில் இலங்கை கணனி பயன்பாட்டாளர்களின் அவசர உதவி மற்றும் பொறுப்புகளுக்கான குழுவினரிடம் முறைப்பாடு செய்யலாம். (தொலைபேசி இலக்கம் 11 269 1692)

எது எவ்வாறாயினும் எமது பாதுகாப்பு எமது கையில் என்ற கருப்பொருளை வாழ்வோடு பின்னிப்பிணைந்துவிட்ட இணையத்தள, சமூக வலையமைப்புகளை உபயோகப்படுத்துகையில் சிந்திக்க வேண்டியது கட்டாய தேவையாகும்.

**இராமானுஜம் நிர்ஷன்**

# சிங்களம் கற்போம்

1. **அபி** - நாங்கள்
2. **லபன** - அடுத்த
3. **சுமானே** - கிழமை
4. **லபன சுமானே** - அடுத்த கிழமை
5. **கமனக்** - பயணம்
6. **ஓயா** - நீங்க
7. **ஓயாத்** - நீங்களும்
8. **கொஹெத** - எங்கே?
9. **ஹிதனவா** - யோசிக்கிறேன்
10. **ஹிதன் இன்னே** - யோசித்துக்கொண்டிருக்கிறேன்
11. **கொ ஹெ கொஹெத?** - எங்கெங்கே?
12. **தலதா மாலிகாவ** - தலதா மாளிகை
13. **மல் வத்த** - பூங்கா
14. **மல் வத்தட்ட** - பூங்காவுக்கு
15. **எயி** - ஏன்
    **அயி** - ஏன்
16. **யன்னே நெத்த** - போவதில்லையா?
17. **வெலாவ** - நேரம்
18. **திபுணாம** - இருந்தால்
19. **மம** - நான்
20. **வெலாவ அனுவ** - நேரத்தை பொறுத்து
21. **எஹெனம்** - அவ்வாறென்றால்
22. **தவ கவுரு ஹரி** - இன்னும் யாரோ ஒருவர்
23. **சமஹர விட** - சிலவேளை

## வினோத கமனக் யமு

### ஒரு சுற்றுலாப் பயணம் போவோம்

**சுகதத் :- அபி லபன சுமானெ கமனக் யனவா** - நாங்கள் வருகிற கிழமை பயணம் போகிறோம்.

**ஒயத் எனவாத?** - நீங்களும் வருகிறீர்களா?

**சாந்த :- கொஹெத யன்னே?** - எங்கே போகிறீர்கள்?

**சுகத் :- அபி யன்ன ஹிதன் இன்னே நுவர** - நாங்கள் கண்டிக்கு போக நினைத்துள்ளோம்.

**சாந்த :- நுவர கொஹெ கொஹெத யன்னே** - கண்டியில் எங்கெங்கே போகிறீர்கள்?

**சுகத் :- தலதா மாளிகாவட்ட, பேராதெனியா மல் வத்தட்ட** - தலதா மாளிகைக்கும் பேராதனைப் பூங்காவுக்கும் போக போகிறேன்.

**சாந்த :- அயி அம்பெக்கே தேவாலயட்ட யன்னே நெத்த?** - ஏன் எம்பெக்கே தேவாலயத்துக்கு போக வில்லையா?

**சுகத் :- ஓவ் வெலாவ திப்புனத் யன்ன ஹித்தன் இன்னவா** - ஓம் நேரம் இருந்தால் போக வேணும் என நினைக்கிறேன்.

**சாந்த :- கொஹொமத யன்னே?** - எப்படி போகிறீர்கள்

**சுகத் :- பஸ் எகே தமா யன்னே?** - பஸ்ஸில் தான் போகிறேன்

**சாந்த :- மொனவத பஸ் எகேத?** - என்ன பஸ்ஸிலையா

**சுகத் :- நே...நே...அபி பஸ் எகக் கத்தாகரகென யனவா** - இல்லை இல்லை நாங்கள் ஒரு பஸ் ஒழுங்குபண்ணி போகிறோம்.

**சாந்த் :- எஹெனம் ஹெமதெனம பலன்ன யன்ன** - அப்படி என்றால் எல்லா இடங்களுக்கும் போயிட்டு வாங்கோ.

**சுகத் :- ஓவ அபிட லெபன வெலாவ அனுவ தமயி ஹிதன்ன ஓனே.** - ஓம் எங்களுக்கு கிடைக்கிற நேரத்தை பொறுத்து தான் யோசிக்க வேணும்

**சாந்த :- ஹரி எஹெனம் மமத் என்னம்** - சரி அப்படி என்றால் நானும் வருகிறேன்.

**சுகத :- கெதரின் தவ கவுரு ஹரி எனவத?** - வீட்டில் இருந்து வேறு யாராவது வருகிறார்களா?

**சாந்த :- கியன்ன பே சமஹர விட நங்கி எயி** - சொல்ல முடியாது சில வேளை தங்கை வரக்கூடும்.

**சுகத் :- பஸ் எகட ரூப்பியல் தெதாசயி** - பஸ்ஸூக்கான காசுக் கட்டணம் இரண்டாயிரம் ரூபா

**சாந்த :- கேம தெனவத?** - சாப்பாடு குடுக்கிறீர்களா?

**சுகத் :- ஓவ், ஓவ்** - ஓம் ஓம்

**சாந்த :- நங்கி எனவத நத்த கியலா போன்கரலா கியன்னம்** - தங்கை வருமா? இல்லையா? என போன் பண்ணி சொல்லுவேன்

**சுகத்:- ஓகே ஹரி** - சரி

## தமிழே உன் தலைவிதி இதுதானா

நக்கீரர் நாவிலே அக்கினித் தமிழாய்
அகத்தியர் நாவிலே அழகுத் தமிழாய்
பாரதியின் நாவிலே புதுமைத் தமிழாய்
பாரதிதாசன் நாவிலே புரட்சித் தமிழாய்
கம்பர் நாவிலே காவியத் தமிழாய்
கண்ணதாசன் நாவிலே கற்பனைத் தமிழாய்
நாவலர் நாவிலே நற்றமிழாய்
வாழ்ந்த என் தித்திக்கும் தேன் தமிழே
இன்றைய தமிழர் நாவிலே மட்டும்
கொச்சைத் தமிழாய் விளங்குவது ஏன்

## கவியரசுக்கோர் கவி

எண்ணத்தில் உள்ளதெல்லாம்
எழுத்தில் வடிக்க- மது
கிண்ணத்தை நாடுகின்ற
கவிஞர் அவர்
ஒரு கையில் மதுவையும்
மற்றோர் கையில் மாதுவையும்
கொண்டிருந்தாலும்- தன்
நம்பிக்கையை என்றும்
கைவிடாதவர்
இந்து மதத்திற்கு அர்த்தம்
கொடுத்த
சந்தனப் பொட்டுக் கவிஞர்
கலைகளுக்குள்ளே கவி புனைதல்
கவின் சிறந்த அரசு போல
அந்தக் கவிதனுக்கே அரசர்
எங்கள் கவியரசர் கண்ணதாசன்

## புன்னகை

பலகோடிப் பொன்னகைகள்
பொலிவற்றுப் போய்விட்டன- உன்
ஒரு துளிப் புன்னகைக்கு முன்னால்
இயற்கையின் புன்னகைப் பூக்களாய்
இலக்கியத்தின் புன்னகைக் கவிதையாய்
பெண்மையின் புன்னகைக் குழந்தையாய்
கார்மேகப் புன்னகை மழைத்துளியாய்
மனிதம் புனிதமாக புன்னகைக்கும்
இனிதான இடங்களில் வாழ்வது ஒரு வரம்
கண்களும் கூட புன்னகைத்தால்
கனவுகளுக்கிங்கே பஞ்சமில்லை

## நான் உணர்வதெல்லாம்

அழகிய பொம்மையைத் தொலைத்த குழந்தையாய்
திருவிழாக் கூட்டத்தில் தொலைந்த சிறுவனாய்
நடுக்காட்டில் நடந்து செல்லும் கன்னிப் பெண்ணாய்
உறவுகள் யாருமற்ற வயோதிபனாய்
நானும் தனிமையை உணர்கிறேன்
என் நட்பை புரிந்து கொள்ளாத உன்னால்

## பொது அறிவுப் போட்டி 08

1. அதிகமாக நீர் அருந்தும் பறவை எது?
2. இளம்பிள்ளை வாத நோய்க்கான தடுப்பூசி மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
3. பைசா என்ற சாய்வு கோபுரம் எந்த நாட்டில் உள்ளது?
4. நந்தி என்ற ஈழத்து எழுத்தாளரின் இயற்பெயர் என்ன?
5. பங்களாதேஷ் என்ற நாடு உருவான ஆண்டு எது?
6. ஆர்ஜென்ரினாவின் புகழ்பெற்ற முன்னாள் கால்பந்தாட்ட வீரர் யார்?
7. இலங்கையின் மூன்றாவது ஜனாதிபதியாக இருந்தவர் யார்?
8. உலகின் தலைசிறந்த குறுந்தூர ஓட்டவீரர் ஹீசைன் போல்ட் எந்த நாட்டவர்?
9. சந்திர கிரகத்தை முதலில் தொலைநோக்கிவழியாக பார்த்தவர் யார்?
10. டென்னிஸ் உலகில் கலக்கும் அமெரிக்க சகோதரிகள் யார்?

**1. செல்வி. அ.வாசவி**
**யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.**

**2. உ. துளசிகா,**
**இல.40 கோணாவளைவீதி**
**கொக்குவில் கிழக்கு**
**கொக்குவில்**

**3.வே.விஜயபாரதி**
**இல:49 , அனுராகம்**
**இராமலிங்கம் வீதி**
**திருநெல்வேலி கிழக்கு**
**யாழ்ப்பாணம்.**

### பொது அறிவுப்போட்டி -06 விடைகள்

01. திருமதி.ஈ.வா. வணசுந்தரா
02. பேரறிவளன்,சாந்தன்,முருகன்
03. ஏ.ஆர்.ரகுமான்
04. இராசிகள்12,நட்சத்திரங்கள்27
05. சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது
06. விக்கிலீக்ஸ்-ஜீலியன்ஆசேஞ்
07. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்க
08. இன்சுலின்
09. முத்தையா முரளிதரன்
10. அர்ஜூன ரணதுங்க

**சரியான விடைகளை எழுதி அனுப்பும் முதல் மூன்று அதிஷ்ட சாலிகளுக்கு மூன்று மாதத்துக்கான 'யாழ் ஓசை' வாரஇதழ் இலவசமாக வழங்கப்படும். சரியான விடைகள் அடுத்த வார யாழ் ஓசையில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**வீரகேசரி/யாழ் ஓசை காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

# சங்கடங்கள் தீர்க்கும் சக்கரமாயவன்



காத்தற் கடவுளான ஸ்ரீமத் நாராயண னுக்கு அமைந்த ஆயுதங்கள் ஐந்தாகும் இதனை பஞ்சாயுதம் எனக் கூறுவார்கள். நாராயணனுக்கு அமைந்த ஆபரணங் களாகவும் இவைவிளங்குகின்றன. நாரா யணனுக்குப் பணிசெய்வதே பஞ்சாயு தங்களின் பெரும்பேறாகும்.

சக்கரப்படையாக அமைந்து பணி செய்பவரே ''நித்தியசூரி'' எனப்படும் சக்கரஆழ்வார் ஆவார். இவர் என்றுமே விஷ்ணுவை விட்டுப் பிரியாதவராவார். இறைவனைப் போலவே ஆதியந்தம் இல்லாதவர் சக்கர ஆழ்வார். இவர் ''சுதர் சனர்'' என்னும் திருநாம் கொண்டு அழைக்கப்படுகின்றார்.

லிங்கத்தை வைத்து சிவனையும் வேல் வைத்து முருகனையும் வழிபடுவ து போலவே சக்கர ஆழ்வாரை வைத்து விஷ்ணுவை வழிபடுகின்றோம். ''சுதர்ச னர்'' என்ற பெயருக்கு நல்வழிகாட்டுப வர் என்றும் காண்பதற்கு இனியவர் என் றும் பொருள்படும். கண்ணனாக திரு மால் அவதாரம் செய்த பொழுது சீமாலி என்றொரு நெருங்கிய நண்பன் இருந் தான் அவன் கண்ணனிடம் பலவிதமான ஆயுதங்களை கையாளும் பயிற்சி பெற் றிருந்தான். அதனால் அவன் ஆணவம டைந்து நல்லோர்களைக் கொடுமைப்ப டுத்தினான். அவனது தீய செயல்களைப் பற்றி தகவல்களைக் கண்ணன் அறிந்தி ருந்தான்.

ஒரு நாள் சீமாலி ''கண்ணா நீ ஒரு பொய்யன் சகலஆயு தங்களையும் கையாளப்பயிற் றுவித்த நீ சக்கராயுதத்தை உபயோகிப்பதனை எனக்குக் கற்றுத் தரவில்லை'' என்று கூறினான் ''நண்பா! சக்கரம் எனக்கே உரியது அதை உன் னால் கையாள முடியாது'' என்று கூறினான். அதற்கு சீமாலி என்னால் முடியாதது ஒன்று உண்டோ'' என்று ஆணவத்துடன் கூறினான். இடைவிடாது மேன் மேலும் சீமாலி வற்புறுத்த கண்ணபி ரான் சக்கராயுதத்தை ஆகா யத்தில் எறிந்து மீண்டும் அதைக்கையில் ஏந்தினார். அதைப்போலவே சக்கராயு தத்தை மேலேயெறிந்து கையால் ஏந்தமுற்பட்ட சீமா லியின் தலை அறுபட்டது.

தீய செயல்களையும் தீய வர்களையும் சக்கராயுதம் துண்டித்து நல்லவர்களை நிம்மதியாக வாழ வைக்கும் பலவிதமான பெருமைகளை யுடையவர் திருவாழி ஆழ் வார் மகாபாரத யுத்தத்திலே சக்கராழ்வானின் பணி மிக வும் போற்றும் பெருமையை யுடையது. ஆழ்வாரின் பெரு மைகளைக் கூறிக்கொண்டே போகலாம்.

நமது ஈழத்திருநாட்டிலே வடபால் வடமராட்சி பருத் தித்துறையில் இருந்து மரு தங்கேணி போகும் நெடுஞ் சாலையில் பருத்துறையில் இருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் வல்லிபுரம் என்னும் பதியினிலே அமர்ந் திருந்து சகல மக்களுக்கும் அருள் பா லித்து ஆன்மாக்களைக்காத்து வருபவர், ஸ்ரீவல்லிபுரசக்கரரூப மாயவன்.

நாகசாபத்தால் பீடிக்கப்பட்ட கன்னி க்கு அவருக்கு சாபவிமோசனம் அளித்து கடலிலே மீனாக அவதரித்து பின்னர் அவளது மடியினில் மீன் தாவி மறுக ணம் குழந்தையாகி சக்கரமாக மாறி நாக சாபம் போக்கி வல்லிபுரப்பதியினிலே வீற்றிருந்து பக்தகோடிகளுக்கு அருள்புரி பவர்தான் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆவார். இஙகே ஆதிமூலக்கருவறையிலே ஸ்ரீ சக் கராயும்தான் மூலவராகக் கட்சியளிக்கி றார். அனைத்து உற்சவ தினங்களிலும் எழுந்தருளியாக கருடன் மீதமர்ந்து வீதி யுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப் பவரும் ஸ்ரீசக்கரரூப மாயவரே.

இந்தத் திருத்தலத்தில் சக்கரரூபநாரா யணனாக அருள் பாலிக்கிறார். ஞாயிறு தோறும் சக்கரமாயவன் வீதியுலாவந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குகி றார். அனைத்து ஞாயிறுதினங்களும் இந் தத்தலத்தில்அபிஷேகம் உற்சவம் நடை பெறுவது வழக்கம். விசேடமாக சூரியப் பொங்கலும் பொங்கிப்படைப்பார்கள். குறிப்பாக நாகதோஷத்தினால் பீடிக்கப் பட்டவர்கள் இங்கே வந்து அதற்குரிய தான விரதமுறைகளைக் கடைப்பிடித்து தமது நாகதோஷத்தை நிவர்த்தி செய்து வாழ்க்கைப் பயணத்தில் வெற்றியடை கின்றார்கள்.

தினந்தோறும் ஆறுகால பூசைகள் வழு வாநெறிமுறைகளுடன் நடைபெறுகின் றன. பிரதி ஞாயிறு மற்றும் மகோற்சவ நாட்களிலும் மார்கழி மாதம் முழுவதும் ஏழுகாலப்பூசைகள் நியமம் தவறாது நடைபெறுகின்றன.

தனிஆள் நிர்வாகமா க இருந்த திருத்த லம் 1976ஆம் ஆண்டு முதல் திருவிழா உபகயகாரர் உள்ளடக்கியதான பலபேர் கொண்ட நிர்வாக சபை உருவாக்கப் பட்டதன் பின் இந்த ஆலயம் புதுப்பொ லிவு பெற்று பலரும் போற்றி வணங்கி வழிபடும் ஆலயமாக மாறியுள்ளதென் றால் மிகையாகாது.

புரட்டாதிப்பூரண தினத்தை சமுத்திர தீர்த்தமாக வைத்து 16 தினங்கள் முன்ன தாக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இறுதி 17 ஆம் நாளில் கேணித்தீர்த்தம், கொடியிறக்கம் நடைபெற்று மறுநாள் ஆஞ்சநேயர் மடையுடன் இனிதே மகோற்சவ நிகழ்வுகள் நிறைவுபெறுகின் றன. 81 ஆம் ஆண்டு ஆரம்பமான 71 அடி இராஜகோபுரத்திற்கு 90 ஆம் ஆண்டு கும்பாவிஷேகம் நடைபெற் றது. நிர்வாக சபை பொறுப்பேற்றதன் பின்னர் மூன்று தடவைகள் சம்பூரோ க்ஷண கும்பாபிஷேகம் நடைபெற் றுள்ளன. தற்போது மேற்குவாசலில் ஒரு அழகான தள மேலைக்கோபுரம் அமைக்கப்பெற்று ஆலயத்தை மேன்மே லும் மெருகூட்டுகின்றது.

தற்போது இரண்டாம் வீதிக்கு கொட் டகை போடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. சென்ற ஆண்டுமுதல் விநாயகப் பெருமானுக்கும் ஒரு தேர் அமைக்கப் பட்டு அதி லே விநாய கப் பெரு மான் தேரி லன்று பரிவா ரமூர்த்தியாக வலம் வரு வார். மூன் றாம் வீதியா கிய வெளிவீ திக்கு தார் இடப்பட்டு செப்பனிடப்பட் டுள்ளது. ஆலயம் தரிசிக்க வரும் அனை த்து அடியவர்களும் பசிபோக்கிக்களைப் பாற வாசல் பகுதியில் வடக்கு , ஈசா னம், கிழக்கு, தென்கிழக்கு மூலைகளில் 4 மடங்குகளும் திருவிழாக் காலத்தில் மட்டும் சேவையாற்ற மேற்கே ஒரு மட மும் அன்னதானம் வழங்குகின்றன. தா கம் தீர்க்க ஆங்காங்கே பல தண்ணீர்ப் பந்தல்கள் தனியார்களால் நடத்தப்படு கின்றன.



என்றென்றென்றுமே எமைகாக்கும் கடவுளான திருமாலின் வலக்கை சக்கர மாயவன் புகழை , அவனது அற்புதங் களை சொல்லிக்கொண்டே போகலாம். இலங்கையிலேயே வேறெங்குமில்லா மல் புனிதமான திருமண் இங்கேதான் கிடைக்கிறது. பெருமை மிக்க சக்கரரூப மாயவனை ஒருமுறை தரிசித்தாலே போதும். ஒளிமயமான எதிர்காலம் எமை வந்து சேரும் என்பது நிலையான உறுதி. சக்கரரூபமாயவனை வழிபடுங்கள் சுபீட் சம் நிறைந்த வாழ்வை அனுபவியுங்கள்.

சுபம்

பிரம்மஸ்ரீ ச.க்.சுதர்சனகுரு
**பிரதமகுரு**
**ஸ்ரீவல்லிபுரக்கோவில்**

## பூர்வபுண்ணியம் செய்திருக்கவேண்டும்



எல்லாம் வல்ல பரம் பொருளான ஸ்ரீமகாவிஷ் ணுவானவர் தம்மை வழி படும் அடியவர்களின் துன்பங்களை நீக்கி இன் பங்களை அருள்வதற்காக எழுந்தருளி வீற்றிருக்கும் புண்ணியதலம் தான் வட மராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ் வார் ஆலயமாகும். காத் தற் கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணு சக்கரத்தாழ்வார் என்னும் திருநாமத்து டன் இந்த ஆலயத்தில் அருள்பாலித்துக்கொண்டி ருக்கிறார்.

இவ்வாலயம் மூர்த்தி , தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளதுடன் ஏழு தளமும் 71 அடி உயரமும் கொண்ட இராஜகோ புரத்துடன் பெரும் கம்பீரமாக காட்சி தருகின்றது.

இவ்வாலயத்தின் உற்சவங்கள் கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து சிறப்புற நடைபெற்று வருகின்றன. இன்று இரதோற்சவதினமாகும். ஸ்ரீசக்கரத்தாழ் வார், விநாயர், மகாலஷ்மி ஆகிய மூர்த்திகள் மூன்று இரதங்களில் அலங்காரமாக வீதி வலம் வந்து அருட்காட்சி தருகின்ற அற்புத நிகழ்வை கண்டுகளிப்பதற்கு பூர்வ புண்ணியம் செய்தி ருக்க வேண்டும்.

நாளை சமுத்திரத்தோற்சவமும் நாளை மறுதி னம் கேணித்தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. சக்கரத்தாழ்வாரை வணங்கி, சேவித்து வாழ்வில் வளம் பெற்று வாழ்வோமாக.

இ. அன்னலிங்கம்
**அறங்காவலர் சபைத்தலைவர்**
**ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்**



அன்புள்ள கமல்ஹாசன்



அரவான்

## மம்மியாக நடிக்க மறுத்த நடிகை

**"உயிரின்** எடை 21" அயிரி பட இயக்குநர் ஏகன் படம் பற்றி,

மனிதர்களை வெட்டி சாய்க்கும் ஒரு ரவுடி, மரத்துக்கும் உயிர் இருக்கிறது என்பதை உணரும் போது திருந்தி வாழ முயல்கிறான். அவனால் முடிந்ததா என்பது கதை. எழுதி இயக்குவதுடன் ஹீரோவாக நான் நடிக்கிறேன். ஹீரோயின் வினிதா. 3 வயது குழந்தைக்கு தாயாக நடிக்க வேண்டிய பாத்திரம். முன்னணி நடிகைகள் சிலரிடம் கேட்டபோது நடிக்க மறுத்துவிட்டனர். புதுமுகமாக நடிக்க வந்தவர்களிடமும் நடிக்க கேட்டபோது, சின்ன வயசிலேயே அம்மா வேடத்தில் நடித்தால் தொடர்ந்து அம்மா வேடமே கொடுப்பார்கள் என்று சொல்லி மறுத்துவிட்டனர். இறுதியில் வேடத்தின் கனத்தை புரிந்துகொண்ட வினிதா ஒப்புக்கொண்டார் .இவர் பதினாறு படத்தில் நடித்தவர். முக்கிய வேடத்தில் திலகன் நடிக்கிறார்.

## சினிபிட்ஸ்

- வேட்டை மன்னன் படத்தில் 2 ஆவது ஹீரோயினாக நடிக்கிறார் ஹன்சிகா மோத்வானி
- திருப்பங்கள் படத்துக்காக சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு சென்று அங்கிருந்த சிறுவர்களிடம் பேட்டி கண்டார் இயக்குநர் சாரதா ராமநாதன்
- வரிசையாக பாலிவூட் படங்களை ஒப்புக்கொண்டிருந்தாலும் ரஜினியின் ரணா தொடங்கும் பட்சத்தில் ஏதாவது ஒரு இந்தி படத்தை ரத்து செய்துவிட்டு நடிக்க வந்துவிடுவாராம் தீபிகா படுகோன்.
- காக்க காக்க இந்தி ரீமேக்கான ஃபோர்ஸ் படம் சென்னை போர் பிரேம்ஸ் தியேட்டரில் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் டோனிக்கு சிறப்பு காட்சியாக திரையிடப்பட்டது.



## கிராபிக்ஸ் காட்சிக்கு தடை

**"பயபுள்ள"** படம் பற்றி இயக்குநர் சரவணன், மதுரை , திருநெல்வேலியை பின்னணியாகக் கொண்ட கதை. ஹீரோ கவின் , ஹீரோயின் கவிதாவுக்கு இடையே மலரும் நட்பு, வில்லன் ராகவ்வால் காதலாகிறது. இது ஜெயிக்கிறதா என்பது கதை. மதுரை பக்கத்தில் நென்மேனி கிராமத்தில் 600 ஆடுகளுக்கு பட்டி அமைத்து காட்சிகள் படமாகின. அப்பகுதியில் உள்ளவர்களுக்கு ஆடு மேய்க்கும் தொழில் பிரதானம். அதன் மீது காட்டும் அன்பால் யாரும் கறி சாப்பிடுவதில்லை. அங்குள்ள கொண்டை முடி ஐயனார் கோயிலிலும் ஆடு பலி கொடுப்பது கிடையாது. நடிகர்களுடன் ஆடு மாடும் நடித்திருகின்றன என்றே கூறலாம். இரண்டு ஆடுகளை அந்தரத்தில் தூக்கிப்போடுவது போன்று கிராபிக்சில் சீன் அமைத்தோம். கோழியை தலைகீழாக தூக்கிச் செல்வது சாராயம் குடித்தது போல் காட்டுவதற்காக பாட்டிலில் இளநீர் ஊற்றி மாட்டுக்கு ஊட்டுவது ஆகிய மூன்று காட்சிகளை மிருகவதை தடுப்பு பிரிவினர் கட் செய்யச் சொன்னார்கள். ஆடு பற்றி பெருமையாக காட்டிவிட்டு இது போன்ற காட்சி தேவையற்றது என்று அவர்கள் கொடுத்த ஆலோசனையை ஏற்று அக்காட்சியை நீக்கி விட்டோம் என்கிறார்.



வேலாயுதம்



# கமல்ஹாசனை பார்த்து ஆனந்த கண்ணீர் விட்ட அண்ணன்



**கமல்ஹாசனின்** முதல் படத்தை தியேட்டர் தியேட்டராக போய் 100 தடவை பார்த்தேன் என்று நடிகர் சாருஹாசன் உருக்கமாக கூறினார். நடிகர் கமல்ஹாசன் கவுரவ வேடத்தில் நடித்துள்ள மலையாள படம் '4 ப்ரெண்ட்ஸ்'. சாஜி சுரேந்திரன் இயக்கியிருக்கும் இப்படத்தில் ஜெயராம், ஜெயசூர்யா, மீரா ஜாஸ்மின் உள்ளிட்டோரும் நடித்திருக்கிறார்கள். இது புற்று நோயினால் பாதிக்கப்பட்ட 4 நண்பர்களை பற்றிய படம். உயிருக்கு கெடு வைக்கப்பட்ட அந்த 4 பேர்களின் கவலைகளை போக்கி உற்சாகமூட்டுகிற வேடத்தில் கமல்ஹாசன் நடித்திருக்கிறார். படத்தில் நடித்ததற்காக அவர் சம்பளம் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை. சமூக கருத்துள்ள படம் என்பதால் இலவசமாக நடித்துக் கொடுத்துள்ளார். இந்த படத்தை 'அன்புள்ள கமல்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியிடுகிறார் பிரதீப். படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா சென்னை ஏவி.எம். ஸ்டூடியோவில் நடந்தது. பாடல்களை கமல்ஹாசனின் அண்ணன் நடிகர் சாருஹாசன் வெளியிட்டு பேசினார். அவர் பேசுகையில் 'அன்புள்ள கமல்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த படவிழாவில் கலந்து கொள்ள எனக்கு அதிக உரிமை இருக்கிறது. கமல்ஹாசன் பிறப்பதற்கு முன்பே எனக்கு திருமணம் ஆகிவிட்டது. யாராவது 100 படங்களை பார்த்தவர்கள் இருக்கிறீர்களா? அல்லது ஒரே படத்தை 100 தடவை பார்த்தவர்கள் இருக்கிறீர்களா? நான் பார்த்து இருக்கிறேன். அது கமல்ஹாசன் நடித்த முதல் படம் 'களத்தூர் கண்ணம்மா'. கமல்ஹாசனை குழந்தையாக தூக்கிக்கொண்டு தியேட்டர் தியேட்டராக போனேன். எல்லா தியேட்டர்களிலும் அந்த படத்தை பார்த்து கண்ணீர் விட்டேன். என் தம்பியை முதன்முதலாக திரையில் பார்த்தபோது ஆனந்த கண்ணீர் விட்டேன் என்று உருக்கமாக கூறினார்.



காதல் பாதை

# திரைப்பட விமர்சனம்



## வாகை சூட வா

மக்களை மகிழ்விக்கும் வெகுஜன சாதனங்களுள் சினிமாவும் ஒன்று. கூடவே மாற்றத்துக்கான சிறு விதையாவது பார்ப்பவர் மனதில் அது விதைத்து சென்றால் அது சிறந்த படைப்பு என்ற அந்தஸ்தை பெறுகிறது. அந்த வகையில் சற்குணம் இயக்கி அண்மையில் வெளிவந்த வாகை சூட வா ஒரு சிறந்த படைப்பு.

1966ஆம் ஆண்டில் கதை ஆரம்பிக்கிறது. ஒரு சமூக சேவை அமைப்பு கண்டெடுத்தான் காடு என்ற செம்மண் புழுதி கிராமத்திற்கு விமலை வாத்தியாராக அனுப்ப, வேண்டாவெறுப்பாக அங்கே செல்கிறார் விமல். ஆண்கள் வீட்டைக் கூட்டி பெருக்கக் கூடாது, வாத்தியார் என்றாலே அடிப்பார் என்றெல்லாம் அபத்தங்கள் நிறைந்த அறியாமை ஊர். இதுமட்டுமல்ல இன்னும் பல அபத்தங்கள். இவ்வாறே படிப்பறிவு இல்லாமலும் படிப்பறிவை விரும்பாமலும் வாழும் அந்த கிராம குழந்தைகளுக்காக விமல் என்ன செய்தார் என்பதே மீதிக்கதை.

பீரியட் படம் என்றால் தெருவில் பழைய பட போஸ்டர் ஒட்டியிருப்பது, ரோட்டில் நடந்து செல்பவர்கள் கதைக்கு சம்பந்தமே இல்லாமல் அப்போதுதான் ரிலீஸான முதல் மரியாதை படத்தைப் பற்றி பேசுவது என்று சில காட்சிகளை வலிந்து திணித்திருப்பார்கள். ஆனால் இங்கே மக்களின் வாழ்க்கை முறைகளையும், அறியாமையும் மட்டுமே காட்டி நாம் எந்த காலத்தில் இருக்கிறோம் என்று உணர வைக்கிறார் இயக்குநர். உதாரணமாக திரையில் நம்பியார் எம்.ஜி.ஆரை அடிப்பதை பார்த்து திரையை சுடும் குருவிக்காரன் பாத்திரம். ஒரே ஒரு காட்சியில் மட்டும் பழைய ஆனந்த விகடனை காட்டுகிறார்கள். அக்காலத்திற்கு தகுந்தால் போல ஒளிபரப்பாகும் அக்கால இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபன பாடல்கள், மண்வாசனையுடனான சடங்குகள், ஒப்பாரி ப்ாட்டு, முப்பதாம் நாள் சடங்கு என்பன அழகு. விமல் அப்பாவி, அடப்பாவி என்று எந்த கேரக்டர் கொடுத்தாலும் நடித்து அசத்துகின்றார். இதில் அப்பாவி. எந்தவித ஹீரோயிசமும் காட்டாமல் அமைதியாக, ஆர்ப்பாட்டமில்லாமல் நடித்திருக்கிறார். கேரளத்து வரவான இனியா இப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகி இருக்கிறார். டீக்கடை வைத்திருக்கும் மதி கரக்டரில் வரும் இவர் விமலிடம் 'சாப்பாடு இங்கே வந்து சாப்பிட்டுக்கங்க' என்று சொல்லி விட்டு, சாப்பாட்டை சரியாக கொடுக்காமல் பணத்தை கறந்து கொள்வதும், பின்பு விமல் மேல் காதல் கொண்டு, அவருக்கு விதவிதமாய் சமைத்துக் கொடுப்பதும் அசத்தியிருக்கிறார். இவருடைய ஆடை மிகவும் எளிமை என்றாலும், பாடல் காட்சிகளில் 1966 ஆண்டுகளில் இருந்த காலத்தை பிரதிபலிக்கிறார் இனியா.

எப்படி ஆர்ட் டைரக்டர் தன் உழைப்பை கொடுத்திருக்கிறாரோ அதைப் போல ஒளிப்பதிவாளர் ஓம்பிரகாஸூம் தன் பங்கை செய்துள்ளார். அருமையான ஒளிப்பதிவு. படம் நெடுக வரும் செபியா டோன. அந்த சரசரக் காத்து பாட்டின் வைட் ஷாட்கள் எல்லாம் ஒரு விண்டேஜ் டச். இசையமைப்பாளர் ஜிப்ரான். முதல் படத்திலேயே மனதை கொள்ளை கொள்ளும் பாடல்களை கொடுப்பது என்பது பெரிய விஷயம்தான். சரசரக்காத்தும், போறானே பாடலும் அருமையான பாடல்கள்.

படத்தின் கதை ஒரு சாயலில் 'திருமதி பழனிச்சாமி' படத்தை நினைவூட்டினாலும், 1966 களில் படம் நடப்பதைப் போல் காட்டியிருப்பது அதை மறக்கடித்து விடுகிறது. பின்னணி இசையில் மட்டுமல்லாது பாடல்களின் இசையிலும் மெய் மறக்கச் செய்கிறார் அறிமுக இசையமைப்பாளர் ஜிப்ரான். இப்படிப்பட்ட ஒரு பீரியட் படத்தை கொடுத்த சற்குணத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அக்காலத்தில் படிப்பறிவில்லா மக்கள் எப்படி இருந்தார்கள், தமது குழந்தைகளை அவர்களையறியாமல் தொழிலாளர்களாக்குவது என சமூக பிரச்சினை கலந்து, ஒரு காதல் கதையை புனைந்து தந்திருக்கிறார்.

குழந்தை தொழிலாளர்கள் பற்றியும் கல்வியின் அவசியம் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல கருத்தைச் சொல்லும் படத்தில் தப்பு, சரி கண்டுபிடித்து மார்க் போடும் வேலையை செய்ய விரும்பவில்லை. ஆம், படத்தில் சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. அதனாலென்ன, வாகை சூட வா என் மனதில் வாகை சூடி விட்டது.

மொத்ததில் சற்குணத்தின் இந்த வாகை சூட வா, நிச்சயம் மக்கள் மனங்களில் வாகை சூடும்.

ராஜ்

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

ஈழத்து தமிழ் இலக்கியத் துறைக்கு பல்துறைசார்ந்த எழுத்தாளர்கள் பெரும் பங்களிப்பை வழங்கிவருகின்றனர். இவர்களுள் கடந்த 20 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவராக கருதப்படுபவர் வைத்திய கலாநிதி பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம். நந்தி என்ற புனைபெயரில் இலக்கிய உலகில் அறியப்பட்ட இவர், சமூக மருத்துவ நிபுணராக இலக்கிய பணியாளராக நாடக ஆசிரியராக, நடிகராக, மேடைப் பேச்சாளராக என பல்முகம் கொண்டவராக இருந்தார். இவரைப் பற்றி சிலவரிகள்...



## பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) இவரைப் பற்றி 25

★ வினாசித்தம்பி செல்லத்துரை -செல்லம்மா தம்பதியினருக்கு 1928 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆம் திகதி பிறந்தவர்தான் சிவஞானசுந்தரம்.

★ இவர் தனது ஆரம்பக்கல்வியை பளை தமிழ்க் கலவன் பாடசாலையிலும் காங்கேசன்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் இடைக்காடு தமிழ்ப் பாடசாலையிலும் கற்றுக்கொண்டார்.

★ யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ், கொழும்பு ஜோசப், றோயல் கல்லூரிகளில் உயர் கல்வியைக் கற்றார்.

★ தனது மருத்துவப் படிப்பை கொழும்பு வைத்தியக் கல்லூரியில் ஆரம்பித்த இவர் எம்.பி.பி.எஸ் ஆக பட்டம்பெற்று வெளியேறினார்.

★ சிவஞானசுந்தரம் 1968 இல் லண்டன் பல்கலைக்கழகம் சென்று சமூக மருத்துவத்துறையில் பட்டப் பின் டிப்ளோமாவையும் 1969 இல் கலாநிதி பட்டப் படிப்பையும் நிறைவுசெய்தார்.

★ இலங்கை வந்த இவர் 1966 ஆம் ஆண்டு வரை அரச சுகாதார சேவையியில் கடமையாற்றியுள்ளார்.

★ சமுதாய மருத்துவதுறையில் பட்டப் பின் டிப்ளோமா முடித்த இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

★ பேராதனை பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியராக பதவி உயர்வு பெற்ற இவர், வைத்திய பட்டப்பின் படிப்பு நிறுவனம் நடத்திய பயிற்சி நெறிக்கு கற்கைநெறிப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

★ 1978 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பிக்கப்பட்ட போது மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறை பேராசிரியராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

★ 'சிங்களம் மட்டும்' என்ற சட்டம் இருந்த காலத்தில் அரசுக்கு அனுப்பும் கடிதங்கள் சிங்கள மொழியில் எழுதப்படவேண்டும் என்ற நிலை இருந்தபோது, இவர் வருமான வரித்திணைக்களத்திற்கு தனது வருமானம் தொடர்பான விபரங்களை துணிந்து தமிழிலே எழுதி அனுப்பினார்.

★ வைத்தியராக வர ஆசைப்பட்ட இவர் சிறுவயதிலேயே தனது நண்பர்களுடன் இணைந்து விளையாடும் போது தன்னை ஒரு வைத்தியராகவே நினைத்துக்கொள்வார்.

★ 1984 தொடக்கம் 1988 வரையான மிகநெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதியாகக் திறமையாக செயற்பட்டுள்ளார்.

★ பொதுச் சுகாதாரத் துறைக்கும் சமுதாய மருத்துவத்துறையின் முன்னேற்றத்திற்கும் அளப்பெரும் சேவையை சிவஞானசுந்தரம் செய்துள்ளார்.

★ ஜோர்டான் நாட்டுச் சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவைக்கான பயிற்சிக்கு இவர் எழுதிய வழிகாட்டி நூல் அரபு மொழியில் மொழிபெயர்க்கப் பட்டு இப்போது அந்நாட்டில் பயன்படுத்தப்படுகின்றது.

★ 1985 - 1999 வரை உலக சுகாதார நிறுவனத்தின் சுகாதார சேவைகள் ஆய்வு மையத்தின் சர்வதேச ஆலோசகராக கடமையாற்றியுள்ளார்.

★ இவர் தலைமையில் மலேசியா, பங்களாதேஷ், வடகொரியா, மொங்கோலியா, இந்தியா, மியன்மார், சிம்பாவே போன்ற நாடுகளில் சுகாதார வைத்தியர்களுக்கு பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

★ தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகத் திறமையாக எழுதும் ஆற்றல் பெற்ற இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பெரும்பாலான நூல்கள் மருத்துவம் சார்ந்தவையாக உள்ளன.

★ மருத்துவத்துறையில் முழுநேரமாக ஈடுபட்டு வந்த இவர் தமிழ் இலக்கிய படைப்பாக்கங்களிலும் தனது தமிழ் புலமையை வெளிக்காட்டியுள்ளார்.

★ ஒரு மருத்துவரினால் எவ்வாறு நோயாளியின் உடம்பிலுள்ள நோயைக் கண்டுபிடித்து குணமாக்க முடியுமோ அதேபோல் சமுதாயத்தில் உள்ள குறைபாடுகளையும் இலக்கியத்தினூடாக கண்டுபிடித்து சீர்ப்படுத்த முடியுமென நம்பிக்கையோடு பல படைப்புக்களை எழுதியுள்ளார்.

★ ஆரம்பத்தில் பல புனைபெயர்களில் எழுதிவந்த இவருக்கு நந்தி என்ற புனைபெயரை சூட்டியவர் மூத்த தமிழ்ப் பேரறிஞரான ராஜாஜி.

★ இவர் முதல் முதலாக எழுதிய 'சஞ்சலமும் சந்தோசமும்' என்ற சிறுகதை 1947 இல் வீரகேசரியில் வெளிவந்தது.

★ 1966 ஆம் ஆண்டு சாந்தி என்பவருடன் திருமண பந்தத்தில் இணைந்துகொண்ட இவர் நான்கு பெண் பிள்ளைகளுக்கு தந்தையானார்.

★ சமூக சீர்திருத்த கருத்துக்களை உள்ளடக்கி பல சிறுகதைகளை எழுதிய நந்தி மூன்று நாவல்களையும் 50 க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

★ இவர் எழுதிய 'மலைக்கொழுந்து' நாவலுக்கு இலங்கை சாகித்திய மண்டலவிருது கிடைக்கப்பெற்றதுடன் தமிழ் இலக்கிய விழாவில் ஆளுநர் விருதும் கிடைத்தது.

★ சமுதாய வைத்தியத் துறைக்கும், தமிழ் இலக்கியத்துறைக்கும் இறுதிவரை பணியாற்றிய நந்தி 2005 ஆம் ஆண்டு யூன் 4 ஆம் திகதி இயற்கை எய்தினார்.

தொகுப்பு - அஸ்வின்

# அரசியல் அமைப்பில் திருத்தங்கள் (பகுதி 17)

## சட்டமும் சமூகமும் 46




*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

இலங்கையில் பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்க நிறைவேற்று அதிகாரம் அற்றவராகவே காணப்பட்டார். தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி சந்திரிக்கா விரும்பவில்லை. பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க 2002 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி (02.02.2002) விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஒரு போர் நிறுத்த உடன்பாட்டைச் செய்து கொண்டார். இதன் பின்னர் ஜனாதிபதிக்கும்- பிரதமருக்கும் இடையிலான முரண்பாடுகள் கூர்மை பெற்று முனைப்படைந்தன. போர் நிறுத்த உடன்பாடு முறையாகக் கண்காணிக்கப்படவில்லை.

போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் செயல்களில் இருபகுதியினரும் ஈடுபட்டார்கள். இந்த உடன்பாட்டுக்கு இருபகுதியினரையும் பேச்சு மேசைக்கு கொண்டு வந்த நோர்வேயால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி உருவான ரணில் விக்ரமசிங்க - அன்ரன் பாலசிங்கம் ஒஸ்லோ உடன்பாட்டை கண்டு சந்திரிக்கா விசனம் அடைந்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட தனக்கே போர்ப் பிரகடனம் செய்யவும் போர் நிறுத்தம் செய்யவும் அதிகாரம் உண்டு என்றார். இதற்கிடையில் ஜே.வி.பியுடன் ஒரு தேர்தல் உடன்பாட்டையும் அவர் செய்துகொண்டார். சந்திரிக்கா அம்மையாருடன் இணைந்து கொண்ட ஜே.வி.பியினர் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தைக் கலைக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். சந்திரிக்கா அம்மையாரோ ரணில் விக்ரமசிங்க தலைமையில் அமைச்சவையின் முக்கிய மூன்று அமைச்சுப் பதவிகளை நீக்கிவிட்டு தானே அவற்றின் அமைச்சருமாக தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டார். பாதுகாப்பு அமைச்சு திலக்மாரப்பன, நிதியமைச்சர் ஜே. என். சொக்கி, ஊடகத்துறை அமைச்சு காபிர் காசிம் ஆகியோர் சந்திரிக்கா அம்மையாரால் அதிரடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி (06.09.2003) நோர்வே தூதுவர் ஊடாக விடுதலைப்புலிகள் ரணில் விக்கிரம சிங்கவிடம் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுப் பொதியை நிராகரித்த சந்திரிக்கா அம்மையார் 2001 ஆம் ஆண்டு இலங்கை மக்களால் தேர்தல் மூலம் அமைக்கப்பட்ட ஜனநாயக அரசாங்கம் ஒன்றை இடைநடுவில் அதன் ஆயுட்காலம் பூர்த்தியாகும் முன்னர் கலைத்தார். மிலேனியம் நூற்றாண்டின் முதல் தசாப்தம் மூன்றாவது பொதுத் தேர்தலை எதிர்நோக்கியது.

### 17ஆவது திருத்தச் சட்டம்
### சுயாதீன பொலிஸ் ஆணைக்கழு

ஒரு நாட்டின் முப்படைகள் என்பது அந்த நாட்டின் அரச இயந்திரமாகவே (State machinary) கருதப்படுகின்றது. பொலிஸ் சேவை என்பது அவ்வாறு அல்ல. அது ஒரு சேவையாகவே கருதப்படுகின்றது. ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் இவைகள் யாவும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக சுயாதீனமாக செயற்பாடுகள் அற்று ஆளும் கட்சியின் கட்டளைகளை நிறைவேற்றிவைக்கும் தங்கள் கீழ்ப்படிவுள்ள ஊழியர்களாகவே (your obedient servant) இவர்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள். நீண்ட நெடுங்காலமாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் எதுவிதமான அரசியல் தலையீடும் அற்று அவர்கள் முறைப்படி நெறிப்படுத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவை எவையும் எவரது காதுகளிலும் ஏறவில்லை. இந்த நிலையில் ஒரு மாற்றம் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி (10.10.2000) அன்று இடம்பெற்ற பொதுத்தேர்தல் முடிவுகளின் விளைவாக உருவாகியது.

1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் ஊடாக அறிவிக்கப்பட்ட விகிதாசார தேர்தல் முறைமையானது இத்தகையதொரு மாற்றத்துக்கு அத்திவாரமிட்டது எனலாம்.

*(தொடரும்)*

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
அனுப்பவேண்டிய முகவரி
யாழ் ஓசை
வீரகேசரி கிளைக் காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# மனித வாழ்வுக்கு ஏணிப்படியாக இருப்பவர்கள் ஆசான்களே

உலகத்தில் பல்வேறு வகையான தினங்கள் காலத்திற்கு காலம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவை அனைத்திலும் சிறப்பானதாக ஐப்பசி 6 ஆம் திகதி உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது.

இத்தகைய ஓர் ஆசிரியர் தினம் தேவைதானா? என்ற கேள்வியினை நாம் அனைவரும் எம்மனங்களில் ஒரு கணம் சிந்திப்போமேயானால் உண்மையில் இத்தினத்தினை மாணவர்கள் மட்டுமன்றி அனைத்துதரப்பினரும் இணைந்து அவர்களுக்கான இவ்விழாவினைக் கொண்டாடவேண்டும். ஏனெனில் ஆசிரியர்களின் மகத்துவத்தையும் மேன்மையினையும் எக்காலத்தில் கூறினாலும் சொல்லில்அடங்காத ஓர் விடயமாகக் காணப்படுகின்றது. உலகத்தில் அனைத்து துறைசார் வல்லுநர்களையும் நல்லவர்களையும் உருவாக்கியவர்கள் எல்லோருடனும் எல்லாமாக இருந்து வழிநடத்துபவர்கள் சமுதாயத்தின் ஏணிப்படியாகவும், மாணவர்களது வாழ்வின் ஒளிவிளக்காகவும் திகழ்பவர்கள் இவ் ஆசான்களே.

எனவே ஆசிரியர்கள் மட்டில் இன்று சமூகமயமாக்கலில் இரண்டு வகையான கண்ணோட்டம் இருப்பதினை நாம் காணக்கூடியதாக உள்ளது. மாணவர் உண்மையில் ஆசிரியர் மட்டில் முழுமையான நம்பிக்கை வைத்து அவருக்கு கீழ்ப்படிந்து வாழும் போது நிச்சயமாக அவனது எதிர்காலம் சிறப்பாக அமையும் என்ற எண்ணமும் சிந்தனையும் இன்று அனைவர் மத்தியிலும் உள்ள ஓர் விடயமாகும்.

இரண்டாவது விடயம் ஓர் மாணவனை ஆசிரியர் நல்ல முறையில் கல்வி கற்று எதிர்காலத்தில் நற்பிரஜையாக வாழவேண்டும் என்ற சிந்தனையோடு செயற்பட்டு தண்டனையையும் வழங்கினால் அவன் பாடசாலை கல்வியினை இடைநிறுத்தி செயற்படும் சந்தர்ப்பமும் உண்டு. ஆனால் இத்தகைய செயலைச் செய்யும் மாணவர்கள் எதிர்கால வாழ்வில் கஷ்டங்களும் துன்பங்களும் அனுபவிப்பதினை நாம் காணுகின்றோம். இவற்றிற்கு மேலாக இன்னும் ஓர் சில கருத்து மக்களிடம் தோன்றுகின்றது. பிள்ளைகள் வீட்டில் இருந்தால் தங்களது அன்றாட கருமங்கள் எதனையும் செய்ய முடியாது என்பதினால் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் கல்வி கற்க அனுப்பும் ஓர் சூழ்நிலையும் காணப்படுகின்றது.

ஓர் தந்தை தனது நெருங்கிய நண்பனை சந்தித்தார். அவரது மகன் என்ன செய்கின்றார் எனக்கேட்டபோது, ' இன்னும் வேலை எதுவும் கிடைக்கவில்லை. பல இடங்களில் விண்ணப்பங்கள் போட்டிருக்கின்றான்' என தந்தை கவலையோடு பதில் அளித்தார். அப்போது அவருடைய நண்பர் 'என்ன கடைசி ஆசிரியத் தொழிலுமா கிடைக்க'வில்லை என கேட்டார்.

இவ்வாறாக இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்களுக்கான மகிமை மகத்துவம் குறைந்து செல்வதினை நாம் காணுகின்றோம். எந்தவொரு பிள்ளையும் மண்ணில் பிறக்கையில் நல்ல பிள்ளைகளே அவர்களை நன்னிலைக்கு கொண்டுவருபவர்கள் பெற்றோர் மட்டுமன்றி ஆசான்களும்தான். தமது குடும்ப வேலைப்பளுக்களையும் சுமந்து கொண்டு மாணவர்களின் உயர்ச்சிக்கு என்றும் மெழுகாக உருகும் உத்தமர்களை என்றும் நாம் வணங்குவதிலும் மதிப்பதிலும் பெரியோர் முதல் சிறுவர்வரை அக்கறையுடன் செயற்படும் இடத்து ஓர் உயரிய நற்பண்புடைய தூரநோக்கும் சிந்தனையும் உடைய ஓர் சமூகம் உருவாகும். எனவே ஆசிரியர்கள் அனைவரையும் நாம் வாழ்த்துவதோடு அவர்களுக்கு என்றும் கீழ்ப்படிவு உடையவர்களாக வாழ திடசங்கற்பம் கொள்வோம்.

எண்ணும் எழுத்தும் எமக்களித்த ஆசான் புகழ்தளை நாம் கூறிடுவோம். எம் ஆற்றல் திறன்களை வளர்த்திட்ட அன்புக் குருக்களை நாம் வாழ்த்திடுவோம்.

*- அனுஷ் -*

## ஏணிபோல் எம்மை ஏற்றி வைப்பார்

*மூன்று வயதுக் குழந்தையையும் எமதன்னை*
*முழுமனதாய் அடுத்தவர்கை ஒப்படைப்பதும்*
*ஊன்று கோலாய் இருந்தெம்மை வழிநடத்தும்*
*ஒரு நல்ல ஆசிரியர் கையில்தான்*

*நான்கு வயதுப் பாலகரை எம் பெற்றோர்*
*நல்லபடி வழிநடத்த நாடுவது*
*பாங்குடனே கல்விதனை பயிற்றுவிக்கும்*
*பவித்திரமான ஆசிரியச் செல்வங்களை*

*ஐந்து வயதுச் சிறுவர்களை அம்மா அப்பா*
*அடுத்ததாக தங்களைப் போல் நம்புவது*
*உந்துசக்தி ஆக எம்மை உயர்த்தி வைக்கும்*
*உன்னத ஆசிரிய வர்க்கத்தையே*

*பெற்றோருக்கு அடுத்ததாக எம்மனதில்*
*பிரியமுடம் இடங்கொடுக்கும் மற்றவர்கள்*
*கற்றோராய் இருந்தெமக்கு கல்விதனை*
*கற்றுதரும் பாக்கியம் பெற்றவர்களை*

*ஏணியைப்போல எங்களை ஏற்றிவைப்பர்*
*எட்டாத கல்வியையும் பெற்றுதரும்*
*வாணியின் திருவுருவாய் மண்ணிலே*
*வந்துதித்த ஆசிரியப் பெருந்தகைகள்*

*கார்த்திகா - அல்வாய்*

# குறுக்கெழுத்துப் போட்டி 48

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | ■ | 12 | 13 | ■ | 14 |
| ■ | 15 | 16 | 17 | 18 | ■ | ■ | 19 |
| 20 | 21 | ■ | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | ■ | 28 | 29 | ■ | 30 | 31 | 32 |
| 33 | 34 | 35 | ■ | 36 | 37 | 38 | ■ |
| 39 | 40 | 41 | 42 | ■ | ■ | ■ | 43 |
| 44 | ■ | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |

இடமிருந்து வலம்

1. சிவன்

9. உலகின் மிகப் பெரிய பாலைவனம்

12.நினைவாலயங்களில் நாட்டப்படுவது (திரும்பியுள்ளது)

15. கைதிகளை காப்பது (திரும்பியுள்ளது)

20. கவிதை (திரும்பியுள்ளது)

22. பானை வயிற்றோன் ( இறுதி எழுத்து இல்லை)

28. திருநங்கை (திரும்பியுள்ளது)

30.ஒரு நட்சத்திரம் (இறுதி எழுத்து இல்லை)

33. தோள் (குழம்பியுள்ளது)

36. எண்ணம்

39 இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்

45. சிம்மாசனம்

மேலிருந்து கீழ்

1. வஞ்சனை( தலைகீழ்)

2. குட்டியை கூடவே சுமந்து செல்வது (தலைகீழ்)

3. தண்ணீரின் காற்று வடிவம்

5. மூவர்ணங்கள் இணைந்த வர்ணம்

6. மண்டபக்கால்

8. முருகன் (தலைகீழ்)

17. பாடங்களின் பகுதி/ பறவைகளின் பகுதி (தலைகீழ்)

20. ஆனைமுகன்

24. அறிவுரை

25.கருணை

28. நிலா (தலைகீழ்)

34. அனுமரின் வெற்றி வார்த்தை (தலைகீழ்)

42. கயிறு/ யாழ் நரம்பு

43. ஓங்கார வடிவம்

குறுக்கெழுத்துப் போட்டி 46க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கி | றீ | ஸ் | ம | னி | த | ன் | ■ |
| ர | ■ | ■ | ண் | க | ■ | ம | கா |
| க | ரா | ம் | பு | ■ | கா | ய | ம் |
| ம் | ■ | ■ | மு | ■ | ற் | ■ | பு |
| ■ | வு | ■ | ■ | ஈ | று | ■ | ■ |
| கா | ர் | த் | தி | கை | ■ | கா | து |
| ல் | ய | அ | ■ | ■ | ஆ | வ | ணி |
| ■ | உ | தி | று | ■ | சி | ல் | ■ |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. கே.அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்

2.திருமதி.தி. சிதம்பரநாதன்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

3.வே. விஜயபாரதி
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்

**குறுக்கெழுத்துப் போட்டி 48க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும்.**

அனுப்பவேண்டிய முகவரி
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




'அந்த நாயின் கழுத்தில் 12 என்று எழுதித் தொங்கவிடப்பட்டிருக்கிறதே, லைசன்ஸா?'
'இல்லை, 12 தடவை என் மாமி யாரை கடிச்சிருச்சி!'




'என் பெண்ணுக்கு ஐந்து லட்சம் ரூபா சீதனம் தருவதுபற்றி ஆட்சேபனையில்லை. அவளிடம் ஒரு குறையுள்ளது....'
'என்ன குறை?'
'விரல் சூப்புவாள்!'
'இதென்ன பெரிய குறை?'
'மற்றவர்களின் கால் விரலையல்லவா சூப்புகிறாள்!'




'எதுக்கு அந்த மர்ம படத்துக்கு டிக்கெட் வாங்கினால் சீப்பு ஒன்று இலவசமாகத் தருகிறார்கள்?'
'அது மயிர்க்கூச்செறியும் படமாயிற்றே! தலைவாரிக் கொள்ள'




'ஏன் உன் கணவரை நீ சுவாமி என்று அழைத்தால் கோபப்படுகிறார்!'
'அவரின் முழுப்பெயர் சுவாமி நாதன்!'




'ஏன் அந்த டாக்டர் கண்ணைக் கட்டிக் கொண்டு ஆபரேஷன் பண்ணுகிறார்?'
'அவருக்கு இரத்தத்தைக் கண்டால் அலர்ஜி!'




'தண்டவாளத்தில் தலைவைக்கப் போகிறேன் என்கிறாய். ஆனால் விஸ்கியும் சிக்கனும் கொண்டு போகிறாயே?'
'ஒருவேளை ட்ரெய்ன் வர லேட்டானா பட்டினியில் சாக வேண்டுமே!'

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

காலச்சக்கரம் சுழலும் வேகம் மனிதனின்அத்தியாவசியமான மனிதாபிமான வேலைகளைக் கூட பாதிக்கச் செய்கிறது. இதனால் எதை எழுதுவது எப்படி எழுதுவது என்ற சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்க எத்தனிக்கும் போதே காலம் வேகமாக கரைகிறது. மனிதன் தான் மாறிவிட்டான் என்று பார்த்தால் காலமும் கால நிலையும் மிக வேகமாக மாறிவருகின்றன. இயல்பான வாழ்வியல் கருமங்களைக் கூட திட்டமிட்டுச் செய்ய முடியவில்லை. இது ஒரு புறம் இருக்க இவ்வாரமும் ஏதாவது ஒன்று எழுத வேண்டுமே என்னத்தைத் தான் எழுதித் தொலைப்பது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது அண்மையில் வெளிவந்த பத்திரிகைச் செய்தியொன்று மனங்கொள்ள வைத்தது. யாழ். அரச அதிபர் வெளியிட்ட அறிக்கை, யாழ்ப்பாண மக்களை , யாழ்ப்பாண கலாசாரத்தின் மீது பற்றுக்கோடு கொண்டவர்களை, சமூக ஆர்வலர்களை சிந்திக்கவும் மறுபுறத்தில் வேதனைப்படவும் வைத்திருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடுகளுமில்லை.

யாழ்.குடாநாட்டில் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் மாத்திரம் 203 சிறுமிகள் கர்ப்பமுற்று இருக்கின்றனர் என்ற அதிர்ச்சிகரமான செய்தியே அது ஆகும். அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் விபசாரம், அப்பாவி பெண் பிள்ளைகளை ஏமாற்றி சீரழிக்கும் கைங்கரியங்கள் குறிப்பாக பாடசாலை மாணவிகளை இலக்குவைத்துப் பாலியல் ரீதியாக சீண்டும் சம்பவங்கள் அதிகரித்துள்ள மை பற்றி ஓரிரு தடவைகள் அல்ல பல தடவைகள் இதே பந்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம். கடந்த வாரமும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. எழுதிய பேனா மை காய்வதற்கு முன்னே மேலும் ஒரு அதிர்ச்சிகரமான செய்தி தமிழ் மக்கள் மனங்களை வருத்துகிறது. மூன்று மாதத்தில் மாத்திரம் 200க்கும் மேலான இளவயதுக் கர்ப்பங்கள் வைத்தியசாலை வட்டாரத்தில் பதிவாகியுள்ளன. யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளில் இருந்து எடுத்த புள்ளிவிபரங்கள் ஆனால் பதிவு செய்யப்படாமல் எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கலாம். குடும்ப கௌரவத்திற்காக பல இளவயதுக் கர்ப்பங்களை பெற்றோர் மறைக்கின்றனர். பெண்களின் எதிர்கால வாழ்வு சூனியப்பட்டு விடக்கூடாதென்பதற்காக பல இளவயதுக் கர்ப்பங்களை பெற்றோர் தமக்குள் அமுக்கிக் கொள்கின்றனர். இருந்தும் சில பல சம்பவங்கள் தேவைகருதியும் சட்ட உதவி கருதியும் வைத்தியசாலைகளிலோ அல்லது பிரதேச செயலகங்களிலோ பதிவு செய்யப்படுகிறது. இவற்றை உற்றுநோக்கி பார்க்கும் போது மாதம் ஒன்றில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வேண்டத்தகாத கர்ப்பங்களுக்கு இளவயது கர்ப்பங்களுக்கு ஆட்பட்டு வருகின்றனர். என்ற அதிர்ச்சியான ஒரு முடிவு கிடைக்கும். இப்படியான சம்பவங்களுக்கு முடிவு காணா மல்



**அறிவீனத்தால் பருவ உணர்ச்சிகளிற்கு இடம்கொடுத்ததால் வந்த வினையை, பெண்கள் இழக்கக் கூடாது என்று கருதப்படும் மாபெரும் சக்தியாகிய கற்பை காவு கொடுத்தவர்கள் அவர்களும் மனிதர்கள் தான். அவர்களுக்கும் உணர்வு இருக்கிறது. உள்ளம் இருக்கிறது. இத்தகையவர்களை தீண்டத்தகாதவர்கள் என்று கருதும் மனநிலையை எமது சமூகம் விலக்க வேண்டும்.**

அறிக்கை விட்டுப்பலனில்லை. வெறும் பருவ உணர்ச்சிகளால் உந்தப்பட்டு தமது வாழ்க்கையைத் தொலைத்த அபலைப் பெண்பிள்ளைகளின் சரியான புள்ளிவிபரங்களை எடுத்து அவர்களை சமூகத்தின் பார்வையிலிருந்து மாசற்றவர்கள் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அதாவது இப்படியான இழி செயல்களில் ஈடுபடுவோர் எமது தமிழ்ச்சமூகத்தின் பார்வையில் தீண்டத்தகாதோர்களாக, கேவலமானவர்களாகப் பார்க்கும் சமூக வடு நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கையில் இத்தகைய அபலைகளை சமூக வாழ்வில் ஒன்றிணைக்கும் தன்மை இல்லாமல் போக ஏதுவாகிறது. இதனால் தான் எமது சமூக ரீதியான ஒட்டுமொத்த பார்வையும் நேராக, மாசற்றதாக, தூய்மையாக இருக்கவேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. ஏனெனில் ஒரு தனியாளின் வாழ்வியலில் சமூகத்தின் பங்கு காத்திரமான பங்களிப்பை நல்குகிறது. சமூகம் நினைத்தால் ஒருவனை பைத்தியக்காரனாக ஆக்கவும் முடியும் நல்லவனை கெட்டவனாகவும் ஆக்க முடியும். எனவே தான் ஒருவனின் வாழ்வியலில் சமூகத்தின் சக்தி தாக்கம் செலுத்துகிறது.

அதே போல அறிவீனத்தால் பருவ உணர்ச்சிகளிற்கு இடம்கொடுத்ததால் வந்த வினையை, பெண்கள் இழக்கக் கூடாது என்று கருதப்படும் மாபெரும் சக்தியாகிய கற்பை காவு கொடுத்தவர்கள் அவர்களும் மனிதர்கள் தான். அவர்களுக்கும் உணர்வு இருக்கிறது. உள்ளம் இருக்கிறது. இத்தகையவர்களை தீண்டத்தகாதவர்கள் என்று கருதும் மனநிலையை எமது சமூகம் விலக்க வேண்டும்.எமது சகோதரிகள் அறியாமற் செய்த பிழைகளை மன்னித்து மறக்கும் மனோ பாவத்தை வளர்க்க நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும். மனரீதியாக புண்படுத்தும் மனப்பான்மையை விட்டுவிலக்கவேண்டும்.

இப்படி கூறிவிட்டோம் என்பதற்காக யாரும் தவறு செய்யலாம். அதனை சமூகம் மன்னிக்கும் மன்னிக்கவேண்டும் என கருதிவிடக்கூடாது இப்படியான தவறுகள் எங்கிருந்து தோன்றுகின்றன? இதற்கு மூலகாரணம் என்ன?. இவற்றைத் தடுப்பதற்கு எத்தகைய வழிமுறைகளை கையாளலாம்? என்று காலம், சூழல் என்பவற்றுக்கு ஏற்ப யதார்த்த பூர்வமாக சிந்திக்க வேண்டும். இதை விடுத்து எமது சமூகத்தையோ அல்லது இத்தகைய சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களையோ குற்றம் சாட்டி எவ்வித பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. மாறாக இப்படியான சம்பவங்கள் நாளை உங்களது பிள்ளைகளுக்கோ, அல்லது சகோதரிகளுக்கோ உறவுகளுக்கோ கூட ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உண்டென்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

எமது தமிழ்ச்சமூக மரபின் படி ஆண்கள் பாலியல் ரீதியாக தவறு செய்தால் அதனை மன்னித்து மறக்கும் தன்மையை வழங்குகிறது. இதனால் ஆண்கள் பாலியல் ரீதியாக தவறு செய்யும் அதிக பட்ச சாத்தியக்கூறுகளை ஆணுக்கு எம் சமூகம் வழங்குகிறது. அதே நேரம் ஒரு பெண் தவறு செய்யும் பட்சத்தில் அவளை சமூகத்திலிருந்து விலத்திவைக்கும் மனநிலை இதை இன்னொரு விதமாகக் கூறினால் ‘விபசாரி’என்ற பட்டத்தைச் சூட்டி சமூகத்திலிருந்து பிரித்து வைக்கும் மனநிலையை எமது சமூகம் கையாண்டு வருகின்றமை துரதிஷ்டவசமானது.

தாய்மைக்கு மாசு கற்பிக்க முயலும் ஈகைத்தனமானது யாழ்ப்பாண சமூகத்தில் இளவயதுக் கர்ப்பங்கள் அதிகரித்து வருகின்றமை எம்மினத்தில் எதிர்கால இருப்பிற்கு ஆரோக்கியமானதல்ல. பழமைகளிலும், தமிழரின் மரபார்ந்த நம்பிக்கைகளிலும், சடங்கு சம்பிரதாயங்களிலும் ஊறித்திளைத்த எம்மினம் இன்று காலமாற்றத்தால் தன்னிலை இழந்து நிற்பது துரதிஷ்டவசமானது. வேரின் பிடிப்பை இழந்த மரம் போல் தமிழினம் தவித்து நிற்கையில் ஆழமாக பண்பாட்டுக் கூறுகளை பேணிவரும் இனமொன்று அதனின்றும் விலகிச் செல்வது மேலும் எம்மினத்திதிற்கு பின்னடைவையும் தலைகுனிவையும் தோற்றுவிக்கும் என்பது நிச்சயம். ‘‘இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்’’ என்ற கருத்து நிலைக்கேற்ப இன்றைய இளம்சந்ததி பொறுப்புணர்வுடன் சிந்தித்து செயற்பட்டால் தான் எதிர்கால சந்ததி ஆராக்கியமான சந்ததியாக உருப்பெறும். இல்லையேல் கட்டுப்பாடில்லாத காடைக் கூட்டமாக காட்டுமிராண்டித்தனமானவர்களாக வரலாற்றில் அடையாளப்படுத்திவிடக்கூடிய நிலையும் காணப்படுகிறது. எனவே இன்றைய இளம் சந்ததிக்கு நல்வழிகாட்டக் கூடிய சமூக வழிகாட்டிகள் தேவை.

படகிற்கு துடுப்பு எவ்வளவு முக்கியமோ அதே போல இன்றைய சந்ததிக்கு துடுப்பாகச் செயற்படக்கூடியவர்கள் நிச்சயம் தேவை. முன்னர் போரியல் வாழ்க்கைக்குள் வாழ்ந்து வந்தமையினால் மக்களின் வாழ்க்கை முறையில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆனால் தற்போது அமைதிநிலை தோன்றியுள்ளதையடுத்து மக்களின் சிந்தனைகள், வாழ்க்கை முறைகள் புதிய சூழலுக்குள் பிரவேசித்திருப்பதால் இவ்வளவு காலமும் அடக்கி ஒடுக்கி வைத்திருந்த உணர்வுகளை, வாழ்க்கை முறைகளை திடீரென மாற்ற முற்பட்டதன் விளைவே தற்போது யாழ். குடாநாட்டிலும், வன்னிநிலப்பரப்பிலும் நடந்தேறுகின்ற கலாசார சீரழிவுகள் சமூக விரோத நடவடிக்கைகளுக்கு காரணம் எனக் குறிப்பிடலாம்.

உதிஷ்டிரன்

# பெண்களும் சட்டங்களும் 04



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இவ்வாறான உரிமைகளில் பெண்கள் ஓரங்கட்டப்படுவதனால் அரசியல் உரிமைகளிலும் இவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இவ்வாறாக சமூக விதிகளினூடாக விதிக்கப்பட்ட பாரபட்சம் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் ஏதோ வகையில் நியாயப்படுத்தப்பட்டு இன்றும் நிகழ்ந்தவாறு உள்ளன. இவ்வாறான பாரபட்சமான சமூக விதிகள் இவற்றை காலா காலமாக நிறுவிவரும் கிராமிய நிறுவனங்கள் இவர்களின் கருத்தாக்கங்கள் தகர்க்கப்படவேண்டும் பெண்களுக்கான எல்லைகள் யாரால் கட்டப்படுகின்றன எவ் எல்லைகட்குள் பெண்கள் இயங்குகின்றார்கள் என்பதை நாம் ஆழமாகக் கவனிக்க வேண்டும். பெண்களின் உரிமைகள் நியாயப்படுத்தப்பட்டு பிரித்தெடுக்கப்பட வேண்டும். பெண்கள் இயங்கும் தன்மைக்கான உரிமைகள் பல்வேறு துறைகளிலும் இடம்பெறக்கூடிய வகையில் இடம்பெறவேண்டும். சமூக விதிகள் அடிப்படையில் பொறுப்புக்கள் உரிமைகள் மறுக்கப்படும் போது பொருள் வளமற்ற நிலையில் பெண் ஒதுக்கப்படும் நிலை உருவாகின்றது?. பெண்கள் உரிமைகள் தொடர்பான கருத்தாக்கங்கள் எளிமையாக அடைய முடியும் என்பதல்ல. இவற்றை சட்டங்களால் மட்டும் வென்றுவிட முடியாது. உண்மையான சமூக சமத்துவம் தொடர்பில் நகர்த்துவதற்குரிய மதிப்பீடு என்றும் தேவையானதாக உள்ளது என்பதை மறுக்க முடியாது.

### பெண்களும் சமூக கட்டமைப்புகளும்

பெண்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகள் யாவும் சமூகத்தின் மரபுவழி வந்த மனப்பாங்குகளால் நியாயப்படுத்தப்படுகின்றன. பெண்கள் ஆண்களை விடத் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணப்பாடு குறிப்பாக பெண்களுக்கெதிரான வன்முறைகள், கட்டாயத் திருமணங்கள் , சீதனக்கொடுமைகள் போன்ற வன்செயல்கள் இன்றும் பரவலாகக் காணப்படுவது இதற்குச் சான்றாகும். பெண்களைப் பாதுகாப்பதாக கூறப்படும் தப்பான எண்ணங்கள் பால் நிலை சார் வன்முறைகள் என்பவை நியாயத்திற்கு அப்பாற்பட்டவையே. உடல், உள ரீதியாக பெண்கள் பாதிக்கப்படும் போது பெண்கள் கட்டுப்பாடுகளுக்குப் பணிபவர்களாகவும் அரசியலில் ஈடுபடுவதற்கு அஞ்சுபவர்களாகவும், தொழில் வாய்ப்புக்களை பெற முடியாதவர்களாகவும் சமூகத்தில் புறந்தள்ளப்படுகின்றார்கள்.

பெண்கள் தமக்குப் பொருத்தமான வேலையில்லாப் பிரச்சினையையும் தொடர்ந்தும் எதிர்கொள்கின்றனர். ஆகவேதான் ஆண்கள், பொருத்தமானது எனக் கருதும் தொழில் வாய்ப்புக்களுக்கு அடிமையாகின்றனர். விபசாரம், பால்சார் சுற்றுலாப் பயணம், விடுதிகளில் தொழில்பார்த்தல், வீட்டுப் பணியாளர்களாக வெளிநாடுகளுக்குச் செல்லல் போன்ற வேலைகளில் அமர்த்தப்பட்டு பலகையிலும் சுரண்டப்படுகின்றனர். தொழிற் சட்டங்கள் கூட தொழில் சங்கங்களின் பலவீனத்தால் திறம்பட செயற்படுவதாக தெரியவருவதில்லை. திருமணம் என்ற போர்வையில் கடத்தப்படும் பல பெண்கள், பால்சார் தொழில்களில் ஈடுபட்டு பல வகையிலும் சுரண்டப் படுகின்றனர்.



திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் கூட ஆண்களால் வஞ்சிக்கப்பட்டு, அவர்கள் வாழ்க்கை சின்னாபின்னப் பட்டு தமது நாட்டிற்கே மீண்டும் திரும்பி வரும் பல சோகமான சம்பவங்களை எமது இலவச சட்டப்பிரிவிற்கு முறையிடவரும் பெண்கள்மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

அண்மையில் கொக்குவில் பிரதேசத்தில் வசிக்கும் ஓர் பெண் கண்ணீருடன் எமது நிலையத்திற்கு வந்திருந்தார். குடும்பத்தில் ஒரே பெண். தாயாரின் செல்லப்பிள்ளை. தனியாக உழைத்து சுயமாக முன்னேறி வந்த இளம் பெண் வெளிநாடு சென்று திரும்பி வந்த ஒருவருக்கு பெற்றோர் இப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். முதல் இரவையே கண்ணீருடன் கழித்த இப்பெண் தனக்கு கணவராக்கப்பட்டவர் போதைப்பொருளுக்கு அடிமையாக்கப்பட்டவர். போதைப் பொருளுக்கு அடிமையாகிய ஓர் மனநோயாளி என்பதை அறிந்து கொண்டார்.

**சரோஜா சிவசந்திரன் (M.A.)**
மகளிர் விவகார அமைச்சின்
தேசிய மகளிர் குழுவின் அங்கத்தவர்

# மூலிகை மருத்துவம்

## மருதாணி

**B.N LAWSONIA INTERMIS**

**F.M LYTHRACEAE**

வேறுபெயர் :- மறுதோன்றி, அழவணம், ஜவணம்,மெகந்தி.

மருதாணி எல்லா வகையான இடங்களிலும் வளரக்கூடியது. வெப்பதை தாங்கக்கூடியது. இதன் பூக்கள் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், ஊதா போன்ற நிறங்களைக் கொண்டது. இதை அட்டகர்ம மூலிகை என்று கூறுவர்.



பயன்படும் பாகம் :- இலை,காய், வேர், விதை

மருத்துவபயன்:- மருதாணி இலை கிருமிநாசினிகளை அழிக்கவல்லது. நகச்சுத்தி வராமல் தடுக்கும். புண்ணை ஆற்றும்.

மேகநோய்க்கு இதன் இலை 10 கிராம் அளவு மணிக்கு ஒரு பூண்டு திரி 5 கிராம் மஞ்சள் ஆகியவற்றை அரைத்து நாளும் வெறும் வயிற்றில் குடித்து பால் அருந்தவும் புளி, புகை காரம் கூடாது. இதனால் மேக நோய் அதனால் ஏற்படும் கிரந்திப் புண், அரிப்பு ஆகியன குணமாகும். 10 - 12 நாள் சாப்பிடவேண்டும்.

தோல் அரிப்பு, படை போன்ற நோய்களுக்கு இலையை அரிசிச் சோற்றுடன் இரவு ஊறப்போட்டு காலை வெறும் வயிற்றில் நீராகாரமாகச் சாப்பிட வேண்டும். உப்பில்லாப் பத்தியம் இருத்தல் வேண்டும். 10-15 நாள் சாப்பிட வேண்டும்.

புண்கள் வாய்ப்புண், அம்மைப்புண் ஆகியவற்றுக்கு இதன் இலையை அரைத்து நீரில் கரைத்து வடித்து வாய் கொப்பளிக்கலாம். அரைத்து அம்மைப் புண்களுக்கு பூசலாம் 3-5 நாளில் குணமாகும்.

இதன் தைலம் பூசினால் முடிவளரும். இளநரை அகலும் தேங்காய் எண்ணெய் 500 மில்லி லீற்றர் விட்டு இதன் இலை 100 கிராம் போட்டு பொரித்து எடுக்கவும். 10 கிராம் சந்தணத்தூள் அரைத்துப் போட்டுக் காய்ச்சலால் இந்த தைலத்தை தலைக்குத் தேய்க்க முடிவளரும்.

மருதாணிப்பூவினை ஒரு துணியில் சுற்றி தலை மாட்டில் வைத்துப் படுத்தால் தூக்கம் வரும். பூவின் மணம் தூக்கத்தை வரவழைக்கும்.

**ரி. உமா**
(3 ஆம் வருடம்) லங்கா சித்த - ஆயுர்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

# யோகாசனமும் ஆரோக்கிய வாழ்வும் 10



**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

5. இடது கையை உயர்த்தி தலைக்கு முன்பாக இடக்காதை தொடுமாறு நீட்டிய படி பார்வை இடக்கைவிரல்களின் மீது இருக்குமாறு வைத்து ஆழமாக சுவாசிக்க வேண்டும்.

6. பின் மூச்சை உள்ளிழுத்தவாறு இடக் கையை பின் கொண்டுவந்து நாரிப்பகுதி யில் வைக்கவும்.

7. மெதுவாக மூச்சை உள்ளிழுத்தவாறு கால்களை அசைக்காமல் நிமிரவும்.

8. மூச்சை வெளிவிட்ட வண்ணம் காலை பழைய நிலைக்கு திருப்பவும் (90 பாகையில் இருந்து)

9. மூச்சை வெளிவிட்ட வண்ணம் வலக் காலை இடது காலுக்கருகில் கொண்டு வந்து தடானத்தில் நிற்கவும்.

குறிப்பு : இதேபோல் மாற்றுப் பயிற்சி யாக மறுபுறம் செய்யவும்.

**பயன்கள்** : மார்புத் தசைகள் நன்கு உறுதி பெற்று விரிவடைகின்றன. கெண்டைக் கால் தசைகள், புஜங்கள், கணுக்கால் கள், முழங்கால்கள், மணிக்கட்டுகள், தோள்மூட்டுக்கள், தொடை தசைகள், தசைநார்கள், நரம்புகள் தளர்த்தப் பட்டு வலிமை பெறுகின்றன.

சுவாசக்கோளாறு, நீரிழிவு, மலச்சிக் கல், ஜீரண குறைபாடு, கால்வலிகள் முதலியன குணமாகும் வயிற்றுப்பு றத் தசைகள், இதயச் சுவர்கள், தசைகள் நாடி நாளங்கள் வலிமை பெறுகின்றன. அதன் செயற்பாடுகளும் பன்மடங்கு அதிக ரிக்கும்.

### 7. உட்கட்டாசனம்

செய்முறை படி 1: நேராக நிமிர்ந்து நிற்க வும் (தடாசனம்)

படி 2: மூச்சை இழுத்தவாறு கைகளை நெஞ்சுக்கு நேராக நீட்டவும்

படி 3: மூச்சை வெளிவிட்டவாறு மெது வாக முழங்கால்களை கதிரையில் உட்காரு வது போல் உட்காரவும் முதலில் அரை நிலையில் இருக்கவும் இதன் முழுநிலை யாக முழுமையாக உட்காரவும் உட்காரும் போது குதிக்கால்கள் தூக்கப்பட்டு புட்டப்ப குதியை தொட்டவாறு இருக்கும் -உச்ச நிலை

படி 4: பார்வை நேராக கைவிரல்களின் மேல் இருக்கும்.

படி 5: பின் மெதுவாக மூச்சை இழுத்த வாறு எழும்பி மூச்சை வெளிவிட்டவாறு மெதுவாக கைகளை விட்டு ஆரம்ப நிலைக்கு வரவும்.

பலன்கள் 1. கை கால் நடுக்கம் குறையும்

2. இடுப்புவலி, தொப்பை குறையும் முது குவலி குறையும் வாதங்கள் நீங்கும்.

3. முழங்கால்கள் கணுக்கால்கள் தொடை கள் என்பன பலப்பட்டு குறைகளை நிவர்த் திசெய்கின்றது.

4. ஐந்து மைல்கள் நடக்கும்போது ஏற்ப டும் பலன்களுக்குச் சமனாகும்.

5. கால் நரம்புகள் எலும்புகளுக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும்.

## இருந்து செய்யும் ஆசனங்கள்

### 8. வஜ்ராசனம்

(கணுக்காலின் மீது அமர்ந்த நிலை)

வஜ்ஜிரம் என்றால் வைரம், பலம், சக்தி ஆகியவற்றைக் குறிக்கும் இந்த ஆசனத் தால் கணுக்கால்களில் ஓடும் வஜ்ஜிரநாடி ஊக்கப்படுத்தப்பட்டு பலப்படும். உடல் பலமடையும்.

செய்முறை

படி 1. நேராக உட்கார்ந்து இரு கால்களை யும் நீட்டவும் பாதங்கள் இணைந்திருக்க உள்ளங் கைகளை புட்டப்பகுதியின் இரு பக்கமும் தரையில் ஊன்றவும்.

படி 2. வலக்கையின் உதவியால் வலக் காலை மடக்கி வலது புட்டத்துக்கு கீழ் வைக்கவும்.

படி 3. இடது காலை இடக்கையின் உதவி யால் மடக்கி இடது புட்டத்துக்கு கீழ் வைக் கவும். முழங்கால்கள் இணைந்திருக்கட்டும் கைகளை தொடையின் மீது வைக்கவும்.

படி 4. உடலின் முழுப் பாரமும் குதிக் கால்களின் மீது இருக்குமாறு நிமிர்ந்து நேராக உட்கார்ந்து ஆழமாக சுவாசிக்கவும் - உச்சநிலை

படி 5. பின்னர் வலது காலை எடுத்து ஆரம்ப நிலைக்கு வரவும் அதேபோல் இட து காலையும் எடுத்து ஆரம்ப நிலையில் வைக்கவும்.

பலன்கள் : காலில் உள்ள மூட்டுக் கள் தசைகளை தளர்த்துகின்றது. வயிற்றின் கீழ்ப்புறப் பகுதி அதிக இரத்த ஓட்டம் பெறும். உடல் பலம டைகிறது. இரப்பை குடல் சம்பந்த மான பிரச்சினைகளுக்கு நல்லது. இடுப்புவலி வாயுப்பிரச்சினை, சமி பாட்டுப்பிரச்சினை, இரத்தஅழுத்தம், மூலவியாதி முதலியவற்றிற்கு சிறந்த ஆச னம்.

உடல் வச்சிரமாகி மனவலிமை, மனஉறு தி மனவலிமை உண்டாடும் பாதங்கள், கணுக்கால்கள், இடுப்பு, தொடைகள் என்பன பலன் பெறுகின்றன.

குறிப்பு : தியானம் பிரணாயாமப் பயிற்சி களுக்கு மிகவும் பொருத்தமான ஆசனமா கும். இவ்வாசனத்தில் எவ்வளவு நேரமானா லும் இருக்கலாம் எந்த நேரமும் இவ்வாச னத்தைச் செய்யலாம் இலகுவான ஆசனம்

(தொடரும்)

எஸ்.நதிபரன்

# HOME டிப்ஸ்

★ மாமிசம் மிருதுவாக இருக்க ‘சீலரி’என்ற கீரையின் தண்டைச் சேர்த்து வேக வைக்கவும். சுவையும் அதிகரிக்கும்.

★ மிகுதியாகவுள்ள பால் பாஜியிலிருந்து ருசியான கல்லெட்டுகள் தயாரிக்கலாம். பால் பாஜியை நன்றாக மசிக்கவும். கொத்தமல்லி நறுக்கியது சேர்க்கவும். கட்லெட் வடிவத்தில் உருட்டி எண்ணெயில் பொரித்து எடுக் கவும். சூடாகப் பரிமாறவும்.

★ எவர்சில்வர் டப்பாவில் மிச்சம் சப் பாத்திகளை வைத்து குளிர்சாதனப்பெட் டியில் வைக்கவும். பரிமாறுவதற்கு முன்பு அவற்றை டோஸ்டரில் சூடு செய் வும். புதிதாகச் செய்த சப்பாத்தியைப் போல் மிருதுவாக இருக்கும்.

★வேகவைத்த பிறகு பசலைக்கீரை, ப்ரோக்கோலி (brocoli) முட்டைக்கோஸ் போன்றவற்றை உடனே மிகக் குளிர்ந்த (ice-cold) தண்ணீரில் நனைத்து வைத் தால் அவற்றின் நிறம் அப்படியே இருக் கும்.



★ தோசை ஃப்ரெஷ்ஷாக இருக்க தோசை கல்லிலிருந்து வெந்த பிறகு எடுத்து தண்ணீர் தெளித்து வைக்கவும்

★ சூப், ஸ்டியூ(பாயா) போன்றவை கொதிக்கும் போது அடிப்பிடித்து விட்டால் கிளறவேண்டாம். வேறொரு பாத்திரத்தில் மேலாக ஊற்றி கறி பவுடர், ஏதாவது சட்னி சேர்ப்பதால் காந்தல் வாசனை வராது. சாஸ் செய் யும்போது வனில்லா/ ஆல்மண்டு எஸன்ஸையும் சேர்க்கலாம்.

★ கரட்/ உருளைக்கிழங்கு அதிகமாக வெந்துவிட்டால் நன்றாக மசித்து வெண்ணெய் சேர்த்துப் பரிமாறலாம். அல்லது கட்லட் தயாரிக்க மேல் மாவாக பயன்படுத்தலாம்.

★ ஸ்டிராவை இரண்டு, மூன்று துண்டுகளாக்கி ‘பை’ தயாரிக் கும்போது போடவும். அதனால் அது பொங்கி வழியாமல் இருக்கும்.

★ சைவ, அசைவ உணவு கிரேவியில் ஒரு கப் பால் சேர்ப்பதால் பிரமாதமான ருசி கூடும். கிரேவி திடமாக (thick) இருப்பதோடு எளிதில் ஜீரணமும் ஆகும்.

★ மிச்சமான இட்லிகளை வைத்து ருசியான உப்புமா செய்யலாமே! எண்ணெய்/ நெசய் ஊற்றி கடுகு பச் சைமிளகாய், கொத்தமல்லி சேர்க்வும். நறுக்கிய வெங்காயத்தைப் போட்டு வதக்கவும்.

இட்லியைத் துண்டுகளாக்கி அத னுடன் சேர்க்கவும். தேவையானால் சிறிது உப்பும் சேர்க்கலாம்.

# இளைஞர்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்படுகிறது



## திரைப்பட இயக்குநர் ந. கேசவராஜன்

இன்று யாழ்ப்பாண இளைஞர்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. அவர்கள் இப்போது ஆக்க பூர்வமாக சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். அவர்களின் சிந்தனைக்கு நல்லதொரு வழிகாட்டலை ஏற்படுத்திக் கொடுப்போமேயானால் உலக அரங்கில் அவர்களை வெற்றிபெற வைக்க முடியும் என திரைப்பட இயக்குநர் ந. கேசவராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி 'அவசரம்' குறும்படத்தின் அறிமுகவிழா யாழ். கோசி ஹொட்டலில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இயக்குநர் கேசவராஜா மேலும் தெரிவிக்கையில், இன்று யாழ்ப்பாணத்தில் குறும்படங்கள், ஆவணப்படங்கள் தயாரிப்பதில் இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்கள். தமக்கு கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி தம்மால் முடிந்தவரை நல்ல படைப்புக்களை உருவாக்கி வருகின்றார்கள். இது இன்று இளைய சமுதாயத்தில் ஓர் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றதென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஏனென்றால் பல இளைஞர்களின் கவனம் இவ்வாறான படைப்புக்களை உருவாக்குவதிலேயே திரும்பியுள்ளது. ஓய்வு நேரங்களையும் அவர்கள் இதற்காக செலவிட்டு வருகின்றார்கள். இப்போதெல்லாம் பெண்களின் பின்னால் சுற்றித்திரிவதற்கே நேரம் கிடைப்பதில்லை என பல இளைஞர்கள் என்னிடம் கூறுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பல குறும்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்துமே சமுதாயத்தை விழிப்படையச் செய்யும் கருத்துக்களையே எடுத்துக்கூறுகின்றன. எமது இளைஞர்கனின் சினிமா சார்ந்த சிந்தனையை எடுத்துக்காட்டுகின்றன. இங்கு தயாரிக்கப்படும் குறும்படங்களை அனைவரும் பார்க்க வேண்டும். எமது படைப்பாளிகளின் படைப்புக்களை ஊக்கப்படுத்த வேண்டும். இளையோர்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் இச்சிந்தனை மாற்றம் ஈழத்து சினிமா வளர்ச்சிக்கு நல்லதொரு பங்களிப்பை வழங்கும் என நான் நம்புகின்றேன் - என்றார்.

## ஒளிக் கீற்றுகள்

தொகுப்பு: அஸ்வின்

## 'மனிதம் தேடி' இறுவெட்டு வெளியீடு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மாணவர்களின் 'மனிதம் தேடி'என்னும் கவிதைத் தொகுப்பு இறுவட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி கல்லூரியின் கலையரங்கில் நடைபெற்ற இவ்வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கலந்து சிறப்பித்துள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜன், ஓய்வுபெற்ற விரிவுரையாளர் கே.தர்மராஜா ஆகியோர் கலந்து சிறப்பினத்தனர்.

இறுவட்டின் முதல் பிரதியை ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் பிராந்தியப் பயிற்றுவிப்பாளர் ரி. எஸ். சோமலோசன் பெற்றக்கொண்டார். நயப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மு. கௌரிகாந்தன் நிகழ்த்தினார்.



'அவசரம்' குறும்படத்தின் அறிமுகவிழாவின்போது சுன்னாகம் பதில் நீதவான் என்.தம்பிமுத்து குறும்பட இறுவட்டை இயக்குநர் கஜதீபனிடமிருந்து பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

## குறும் திரைப்பட விமர்சனம்

### அவசரம்

'அவசரம்' குறும்படம் அவசரமாக வந்தாலும் வெகு நிதானத்துடன் தான் அதன் கதையை நகர்த்திச் செல்கின்றார் இயக்குநர்.

மனோ பிக்ஸர் தயாரித்து வெளியிட்டுள்ள அவசரம் என்னும் குறும்படத்தை அறிமுக இயக்குநர் கஜதீபன் இயக்கி ஒளிப்பதிவு செய்துள்ளார். யாழிலிலிருந்து ஓர் அழகிய காதல் கதை என்ற உபதலைப்புடன் வெளிவந்திருக்கும் இக்குறும்படத்தில் யாழ். மண்ணில் தற்போதைய பைல்சர் வாலிபர்களிடம் மலரும் அவசர காதலலை மிக அழகாக அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் எடுத்துக்காட்டிள்ளார்.

கண்டதும் காதல் என்பதைப் போல் அபி என்ற பெண்ணைக் கண்ட சில நாட்களிலேயே காதலிக்கத் தொடங்கிவிட்டார் சித்தார்த். வெளிநாடுபோய் உழைக்கவேணும், வெள்ளைக்காரனுடன் நின்று போட்டோ எடுக்கவேணும் என்ற ஆசையுடன் கொம்பியூட்டர் வகுப்புக்குச் செல்பவன்தான் சித்தார்த். பின்னேரங்களில் தன் நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சந்தியில் நின்று அரட்டையடிப்பது இவனின் பொழுதுபோக்கு. அபி மீது இவருக்கு ஒருதலைகாதல். ஒரு சந்தர்ப்பத்தில் தனது காதலை அவளிடம் வெளிப்படுத்தி விடுகின்றான் சித்தார்த். அபி உடனே பதில் சொல்லாது வீடு சென்று தன் சக நண்பியிடம் ஆலோசனை கேட்டு முடிவைச் சொல்கிறாள். ஒரு பாடலிலேயே இவர்களது காதல் இறுக்கமாக வளர்வதைக் காட்டுகின்றார் இயக்குநர் கஜதீபன். ஒரு நாள் சித்தார்த் நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டிருக்கும் போது அபியிடமிருந்து போன் வருகிறது. தனக்கு வீட்டில் மாப்பிள்ளை பார்ப்பதால் தன்னை கூட்டிக்கொண்டு போகுமாறு சித்தார்த்திடம் கெஞ்சுகிறாள். நண்பனின் இக்கட்டான சூழ்நிலைக்கு நண்பர்கள் உதவுகின்றார்கள். காதலித்தவர்கள் குடும்பமாக வாழத்தொடங்குகிறார்கள். சில மாதங்கள் தான் கடந்திருக்கும் அவர்களிடம் கருத்து முரண்பாடு 'விருப்பம் என்றால் இரு. இல்லாட்டில் போ' என்ற வார்த்தைகள் வெளிவருகின்றன.

சித்தார்த் பாத்திரத்திற்கு ஏற்றால்போல் பொருத்தியிருக்கின்றார். பைல்சரில் அபியைத் தேடித்திரிவதிலும் நண்பர்களுடன் அரட்டை அடிப்பதிலும் தன் காதலை முதல் முதலாக சொல்லும் போதும் யாழ்ப்பாண இளைஞர்களை கண்முன்னே கொண்டுவருகின்றார். தனது காதலை சொல்லிவிட்டு 'ஐயோ அவசரப்பட்டுவிட்டோமே' எனக் குழம்புவதிலும் பாடல்காட்சியிலும் மிகச்சிறப்பாக நடித்துள்ளார். யாழினி தன்னுடைய பங்கை உணர்ந்து செய்துள்ளார். அவரின் அறிமுக காட்சி பிரமாதம். சித்தார்த் காதலைச் சொல்லும் போது அதை உடனே ஏற்றுக் கொள்ளாது பின் தனது நண்பியிடம் போனில் 'ஓகே சொல்லவா'என்று கேட்பதிலும் ஆலயத்தில் தன் காதலை பூ கொடுத்து சிறிய புன்னகை மூலம் வெளிப்படுத்துவதிலும் சிறப்பாக நடித்துள்ளார். வில்லன் தேவையில்லாத ஒன்று. வலிந்து சேர்க்கப்பட்டுள்ளது.

ஒளிப்பதிவில் புதுப்புது நுட்பமான விடயங்களைக் கையாண்டுள்ளார் ஒளிப்பதிவாளரான இயக்குநர். ஆனால் அதனை படத்தொகுப்பு செய்யும் போது முறையாகப் பயன்படுத்த தவறிவிட்டார். வாகனமும் பைல்சரும் மோதும் காட்சி சரியாக அமையவில்லை. காட்சிகள் மாறும் போது இருளான காட்சி சில நிமிடங்கள் நீள்கின்றது. சிலர் வசனம் பேசி முடிந்ததும் கமெராவையே பார்க்கிறார்கள். அபிராமனின் இசை ஆரம்பத்திலும் பாடலிலும் தனித்துவமாக ஒலித்தாலும். பின்னணி இசையில் தென்னிந்திய சினிப்பாடங்களில் திருடிய இசைகள் வந்து செல்வது அபிராமனின் திறமையின் தனித்துவத்தை சிதைக்கின்றது. இயக்குநர் ஜெகதீபன் கதையை நகர்த்திச் செல்லும் விதம் குறியீடுகளின் மூலம் இளம் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினையை சிறிய நேரத்தினுள் காட்டி படத்தை முடிப்பது ஓர் வித்தியாசமான சிந்தனைதான். இளைய சமுதாயமே நீயே உணர்ந்துகொள் என்ற தொனிப்பொருளுடன் சமூகத்தை சிந்திக்க வைக்கின்றார். இவரின் இக் கன்னிமுயற்சி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

**நாம் அரசாங்கத்தின் நிதிகளை பார்த்துக்கொண்டு இருக்காமல் உள்ளூராட்சி சபை தலைவர்கள் திட்டங்களை முன்மொழிந்து அதற்கான எண்ணக்கருப் பத்திரங்களை (Concept papers) திட்டமிடல் பிரிவு ஊடாக பெற்று அதனை சபையில் தீர்மானமாக நிறைவேற்றி அரசாங்க அதிபருக்கும், ஆளுநருக்கும், அமைச்சின் செயலாளர்களுக்கும் முன்வைப்பதன் ஊடாக அபிவிருத்தி செய்யலாம்**



# கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைந்து செயற்பட்டால் நாட்டில் சுபீட்சமான அபிவிருத்தியை காணலாம்

**இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த அரசியல்வாதியும் - தமிழரசுக் கட்சியின் நிர்வாக செயலரும் கல்விமானும் சமாதான நீதவானுமான சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் இன்றைய அரசியல் சூழலின் போக்கும் எதிர்கால நிலை குறித்தும் யாழ் ஓசைக்கு வழங்கிய நேர்காணலின் போது**

***கேள்வி :- பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஊடாக நீங்கள் கைப்பற்றியுள்ளீர்கள் இதன் மூலம் எவ்வாறு மக்களுக்கு சேவையாற்றப்போகிறீர்கள்?***

***பதில் :-*** 3 நகர சபை- 10 பிரதேச சபை உள்ளிட்ட 13 சபைகளை கொண்ட 160 உறுப்பினர்கள் தவிசாளர் - உபதவிசாளர் பதவி உள்ளிட்ட வகையில் உள்ளோம்.

இது உண்மையில் மக்கள் எமக்கு கொடுத்துள்ள கண்முன்னே உள்ள மாபெரும் வெற்றி ஆகும்.

எனினும் உள்ளூராட்சி சபைகள் மூலம் பாரபட்சம் காட்டப்படாது அரசு சார்ந்த திட்டங்களை சமனாக பங்கீடு செய்து அபிவிருத்தியை இலக்காக கொண்டு செயற்படுவது தான் முதல் திட்டம் ஆகும்.

அதாவது விவசாய பிரதேச மக்களுக்கு விவசாய உதவிகளையும்-கடல் தொழில் பிரதேச மக்களுக்கு கடல் தொழில் உபகரணங்களையும் வழங்கி அவர்களது அழிந்த வாழ்வாதாரத்தை முன் கொணர்ந்து சேவை செய்வதுடன் உள்ளூராட்சியின் கீழான முழு வளங்களையும் முழுமையாக பயன்படுத்தி வீதி, சுகாதாரம், திண்மகழிவு, சந்தை, சனசமூக நிலையம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் வியாபாரங்களை முன்நகர்த்துவதனை மையமாக கொண்டு செயலாற்றுவது என்பதாகும்.

***கேள்வி :- தமிழர்களின் தேசிய பிரச்சினையை தீர்ப்பது பற்றி எவ்வாறான நிலைப்பாட்டை உங்களது கட்சி கொண்டுள்ளது?***

***பதில் :-*** தமிழர்கள் சுதந்திரமாகவும் - நிம்மதியாகவும் வாழக்கூடிய நிரந்தர அரசியல் சூழல் உருவாக வேண்டும்.

சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்த மக்களின் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டு நிம்மதியான சூழல் உருவாக வேண்டும் என்பதே அனைவரது விருப்பம் ஆகும்.

***கேள்வி :- உள்ளூராட்சி சபைகளுக்கு ஊடாக எவ்வாறான அபிவிருத்திகளை முன்னெடுப்பீர்கள்?***

***பதில் :-*** கடந்த 50 ஆண்டுகளாக தமிழர்கள் தலைகுனிந்து வாழ்ந்து வருகின்றனர். இதற்கு காரணம் எதிர்ப்பரசியல் ஊடான செயற்பாடு.

எக்காலத்திலும் எதிர்த்து நின்று எதனையும் சாதித்துவிட முடியாது.

உள்ளூராட்சி சபைகளில் எதிர்த்தரப்பாளரையும் ஒன்றிணைத்து வரவேற்று செயல்படுத்தினால் மெய்யான சமுதாய வெற்றியை அடைந்து சுபீட்சமான அபிவிருத்தியை மேற்கொள்ளலாம்.

***கேள்வி :- உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான பயிற்சி நிர்வாகம் தொடர்பாக தாங்கள் முனைப்புடன் செயற்பட்டுள்ளீர்கள். அவ்விடயம் தொடர்பாக குறிப்பிடுங்கள்?***

***பதில் :-*** உள்ளூராட்சி சபைகளில் அனுபவ முதிர்ச்சி அற்றவர்களும் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக நல்லாட்சியை வழங்கலாம். அத்துடன் முரண்பாடுகள் அற்ற நிர்வாகத்தையும் , வினைத்திறன் உள்ள செயற்பாட்டையும் கொண்டு வரலாம்.

***கேள்வி :- நெல்சிப் - மற்றும் ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக யாது கூறுகிறீர்கள்?***

***பதில் :-*** கடந்த வருடம் வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளிலும் நெல்சிப் தொடர்பான உள்ளூராட்சி திட்டம் (LOCAL AUTHORITY PLAN) தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஒவ்வொன்றும் மக்களின் முன்னுரிமை பிரகாரம் தயாரிக்கப்பட்ட சிறப்பான திட்டம். அத்திட்டத்தை அடிப்படையாக கொண்டே தெரிவு இடம்பெற்று, அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இதற்குள் அரசியல் கலப்படம் கூடாது ஏனெனில் அது மக்களின் ஜனநாயக தெரிவாகும்.

நாம் அரசாங்கத்தின் நிதிகளை பார்த்துக்கொண்டு இருக்காமல் உள்ளூராட்சி சபை தலைவர்கள் திட்டங்களை முன்மொழிந்து அதற்கான எண்ணக்கருப் பத்திரங்களை (Concept papers) திட்டமிடல் பிரிவு ஊடாக பெற்று அதனை சபையில் தீர்மானமாக நிறைவேற்றி அரசாங்க அதிபருக்கும், ஆளுநருக்கும், அமைச்சின் செயலாளர்களுக்கும் முன்வைப்பதன் ஊடாக அபிவிருத்தி செய்யலாம்.

***கேள்வி :- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிப்பயன்பாடு - அபிவிருத்தி பற்றி யாது நினைக்கிறீர்கள்?***

***பதில் :-*** DCB என்றவுடன் அத்திட்டம் காலதாமதமான திட்டம் என்றே பொதுவாக கூறப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடான இந்த நிதி உண்மையில் போதுமானது அல்ல.

மேலும் திட்டங்கள் உரிய காலத்தில் வழங்கப்பட்டாலும் நிதி காலதாமதித்தே வருவதால் அதன் பயன்பாடு என்பது முழுமையானதாக மாறவில்லை. சில வேளைகளில் நிதி திரும்பி செல்லும் சந்தர்ப்பங்களும் உண்டு 5 மில்லியன் நிதியை 10 மில்லியனாக வழங்குமாறு ஏற்கனவே விடுத்த கோரிக்கை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் இன்றும் வலுவுள்ள ஒதுக்கீடாக அது மாறவில்லை.

இதனால் ஈஇஆ என்பது மெய்யான அபிவிருத்தியின் இலக்கு என கூறமுடியாது.

**நேர் கண்டவர் :**
**செ. ரமேஷ்**

***கேள்வி :- வேலையற்ற பட்டாதாரிகள் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என எண்ணுகிறீர்கள்?***

***பதில் :-*** இனி அரசு பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் என்ற பொதுவான நம்பிக்கை இழந்து விட்டது.

இதுவரை 79 ஆயிரம் பட்டதாரிகள் வந்துவிட்டதாக அறிகிறேன்.

எதிர்காலத்தில் பட்டதாரிகள் அரச தொழில் என்பதை விடுத்து நிதி உழைக்க கூடிய சுய உற்பத்தியை அதிகரித்து செயலாற்ற கூடிய தொழில் ஒழுக்கத்துடன் செயற்பட்டால் அவர்கள் விரைவில் கோடீஸ்வரராக கூடிய நிலமை ஏற்படும் என நான் நம்புகிறேன். அதுதான் இவர்களுக்கு ஓர் சிறந்த வழி, தெரிவு.

# இலக்கிய இன்பம்





## திருவள்ளுவர் கூறும் பெண்மை

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்"**

பெண் என்பவள் ஆணைச் சார்ந்து வாழ்க்கை நடத்துவதில் அறிவு, ஆற்றல் வாய்ந்ததாக திகழ வேண்டும்.

இல்லறம் என்ற நல்லறத்தை செய்யும் ஆண் இயல்பாகவே பலரைப் பேணும் கடமையை செய்பவன். அவனுடைய கடமைகளை நிறைவாகச் செய்வதற்கு பெண்ணின் துணை நிச்சயமாகத் தேவை. பெண் தன்னுடைய கடமைகளை சரிவர செய்வதற்கு கற்பு என்ற குணத்தை உடையவளாக இருத்தல் அவசியம்.

இல்லாள் என்ற நிலையில் பெண்ணின் கடமைகள் வீட்டுடன் மட்டும் வரையறை செய்யப்பட்டிருக்கவில்லை. பெண்ணின் இல்லறம் ஆணின் வாழ்விற்கு ஆணிவேர் போன்றது. இன்று கற்பு என்பது ஒழுக்கம் சார்ந்ததாகவும் உடலுடன் தொடர்புடையதாகவுமே விளங்குகிறது. ஆனால் கற்பு என்பது மனித வாழ்வியலுடன் தொடர்புடையது. ஆணுக்கும் சரி, பெண்ணுக்கும் சரி கற்பொழுக்கம் பொதுவானது. வாழ்க்கைக்கு கோடுபோட்டு வாழ்வதற்கு கற்பு சிறந்த ஔடதமாக திகழ்கிறது. பண்டைய காலத் தமிழ் மக்கள் பழி, பாவங்களுக்கு அஞ்சி வாழ்க்கையை கட்டுக்கோப்பானதாக அமைத்து வாழ்ந்தனர். எந்த வித துன்பங்கள், சோதனைகள், வேதனைகள் வந்தாலும் கற்பொழுக்கத்திலிருந்து வழுவாமல் இருக்க வேண்டும். இதனை திருவள்ளுவர் தனது குறளில் '' கற்பெனும் திண்மை'' எனக் குறிப்பிடுகிறார். ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு கற்பென்ற வைராக்கியம் உண்டென்றால் அவன்/ அவள் சிறந்த இல்லற வாழ்க்கையை மேற்கொள்கிறாள் என்று அர்த்தம். கலங்காமல் இருக்கும் திடமான உறுதி பெண்ணுக்கே இருப்பதாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனால்தான் பெண்களைக் காட்டிலும் பெரும் தகைமை பெற்றது உலகில் வேறொன்றும் இல்லை என்பதே அவரது வாதம் அத்துணை சிறப்பை பெண்மைக்கு கொடுத்திருக்கிறார் வள்ளுவர்.

இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் பெண்ணின் பெருமையை சிலாகித்துக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது. ஒருவனுடைய இல்வாழ்க்கையில் கற்புள்ள / ஒழுக்கமுள்ள மனையாள் இருந்தால் அவனுக்கு எவ்வித தீமைகளும் வாழ்க்கையில் நிகழாது என நிறுத்திட்டமாக கூறுகிறார். நல்ல மனைவியை ஒருவன் பெறுவதே சிறந்த அதிஷ்டமானதாகும் எனக்குறிப்பிடுகிறார். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றுக்கும் பெண்ணின் பங்கு மிக மிக அவசியமானது. கற்பு, ஒழுக்கத்தினால் ஒரு பெண் இம்மூன்றையும் பெறுவதற்கு பேருதவி புரிகிறாள் என்பது வள்ளுவரின் வாதம். திண்மை என்ற சொல் பெண்ணின் உணர்வின் தன்மையைக் காட்டுகிறது.

இல்லறத்திலே இருநிலைகளில் பெண்ணினுடைய மேன்மை வெளிப்படுத்தப்படுகிறது. மனைவி, தாய் என்ற இருநிலைகளில் பெண்ணின் செயல்முறைமை ஆணின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக உள்ளது. இல்லறத்தின் பயனாக மக்கட்பேற்றை பெறுவதற்கு பெண் பெரிதும் துணை நிற்கிறாள்.

பெண் என்பவள் தன்னைப் பற்றி மட்டுமல்லாமல் தன்னைச் சூழவுள்ள எல்லோரைப் பற்றியும் சிந்தித்துச் செயற்படும் திறன்படைத்தவள். வாழ்க்கைத் துணையான பெண்ணிடம் கற்பு நலம் இருப்பதால் இல்லறம் செவ்வனே நடைபெறுகிறது என்பது வள்ளுவரின் கருத்து. குடும்பக் கடமைகளில் பெண்ணுக்கு சிறப்பிடம் வழங்கப்பட்டிருக்கிறது. பின் வந்த இலக்கியங்களிலும் பெண்மையின் சிறப்புப்பற்றி பேசப்பட்டிருக்கிறது.

எனவே வள்ளுவர் தந்த திருக்குறளில் பெண்ணின் பெருமைக்குணமாகிய கற்புப் பற்றிச் சிலாகித்துரைக்கிறது.

ஈரடிகளில் பெண்ணின் பெருமைகளை விளக்குமுனைந்த அவர், பயன்படுத்திய சொற்கள் அவரின் புலமைச்சிறப்பிற்கு தகுந்த எடுத்துக்காட்டாகும். இல்லற வாழ்வில் ஆணின் செயற்திறனுக்கு பெண்ணின் கற்பின் திண்ணமே துணை நிற்கிறது. இதனால் ஆணைவிடப் பெண்ணுக்கு இயற்கை உளவுணர்வைக் கொடுத்திருக்கிறது என்பதை 'கற்பெனும் திண்மை' என்ற பதத்தின் மூலம் விளக்குகிறார். பெண்ணென்பவளுக்கு கற்பென்ற வைராக்கியம் இருந்தால் தான் இவையெல்லாம் சாத்தியப்படும் என்பதையும் கற்பில்லையேல் பெண்ணின் எல்லாப் பெருமைகளும் சிறுமைப்பட்டுவிடும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

எஸ்.நதிபரன்

# ஊர்ப் புதினம்



முத்திரை சேகரித்தல் என்ற பொழுது போக்கு மாணவர்களிடம் பிரபலமாக இருந்த காலம் ஒன்று இருந்தது.

உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள் எம் அன்றாட வாழ்வில் பெரும் பங்கை வகித்த காலம் அது. அப்போது கடித உறைகளில் வரும் முத்திரைகள் சேகரிக்கப்படும்.

முத்திரைகளை அப்போது உள்நாடு, வெளிநாடு என இரு பகுதிகளாகப் பிரிப்பார்கள். வெளிநாடுகளை தனித்தனி நாடுகளாகப் பிரித்து அல்பம் போடுவார்கள். முத்திரைகளில் நாடுகளின் தன்மை, தேசியப் பண்புகள் குறித்துக் காணப்படும். அவற்றைக் கற்றுக் கொள்வார்கள்.

வட்ட வடிவம், நீள் வடிவம், சதுரம், முக்கோணம் என முத்திரைகளின் வடிவங்கள் மாறுபடும். உலகம் பற்றிய பார்வை முத்திரைகளின் ஊடாகக் கிடைக்கும். நாடுகளின் தேசியக் கொடிகள் தொடர்பான விபரம் அறிந்தனர்.

சுருக்கமாக சொல்லப்போனால் பூகோளம் தொடர்பான அறிவு மாணவர்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

முன்னைய காலங்களில் முத்திரை சேகரிக்கும் பொழுதுபோக்கு கழகங்களும் இருந்தன. இலத்திரனியல் யுகத்தின் எழுச்சி கடிதம் எழுதும் வழக்கத்தை அருகச் செய்துவிட்டது.

இப்போது வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், தொலைத்தொடர்பு நிறுவனங்களின் கடிதங்கள், வீட்டிற்கு வருகின்றன.

ஆயினும் முத்திரை சேகரிக்கும் ஆர்வம் மாணவர்களிடையே பெரிதாக ஏற்படவில்லை. அவ் வழக்கத்தை ஊக்குவித்தால் மாணவர் அறிவு ஆற்றல் கூடும்.

ஆசிரியர், பெற்றோர் மாணவர்களை முத்திரை சேகரிக்கும் பொழுதுபோக்கு நோக்கித் திரும்புதல் கல்வி வளர்ச்சிக்கும் நல்லது.

● சிவகாமி -

# கிறுக்கனின் கேள்விகள் சிந்திக்க வைக்குதல்லோ - ?

பள்ளியில் படித்த பசும் நினைவுகளை மீட்கின்றேன்;
வெள்ளிகள் தோறும் விடியமுன் எழுந்து
வயாவிளான் மானம் பராயானின் ஆலயம்
அழகுறக் கழுவி ஆனந்தமான பலர்
பாலன் யேசுமேற் பக்தியே கொண்டு
பரவித்திரிகிறார் பரவசமாகிறார்
ஏனையா மாறினீர் எம்மிடமேது இல்லையென?
ஓரூரில் ஒரு கோவில் உங்களுக்குப் போதாதோ?
நாளொரு விழா நாலாயிரம் தேவை
வேளைக் கொரு தோற்றம் விதவித அலங்காரம்
பாழாகிப் போகுது பாடுபட்டுச் சேர்த்த பணம்
திரும்பும் இடமெங்கும் சிலை சிலையாய் உம் தெய்வம்
திரும்பியும் பார்ப்பதில்லை சிலையாகி நிற்கிறார்கள்.
கடவுளென நினைத்தவர்கள் கல்லாகி நிற்கிறார்கள்
காடாகிப் போனதையா களனிகள் நிறைந்த ஊர்கள்
அவர்களுக்கு மெருகூட்டி இவர்கள் உழைப்பதற்கு
இரக்கின்றார் மீண்டும் எள்ளளவும் இரக்கமின்றி
கோடிக்கணக்கில் கொட்டுறீர் கோவிலுக்குள்
காலத்திற்கு ஏற்ப நீர் காவுகிறீர் கடவுளரை
கிரியைகளுக்கே பணம் பிழையால் உரிய பலன்
கிடைப்பதில்லை
சதுர்த்தி சட்டி சங்கிராந்தி சங்காபிடேகம்
சோக்கான ஒலிபெருக்கி சுவாமி காவ ஆட்களில்லை
அவரையும் இப்போ நீர் ஸ்ட்ரெச்சரில்(சகடை) தள்ளுகி
றீர்
தலைவர் செயலரென தம்பட்டமடித்துவிட்டு
ஆட்டுக்கிடாவை அறுக்கின்றீர் விழா முடிய
ஏழைகளுக் கெங்கள் பணம் எள்ளளவும் சேர்வதில்லை
ஆளைத்தான் பார்க்கிறீர்கள் ஆற்றலினைப் பார்ப்ப
தில்லை
ஊதாரித்தனத்தை உணர்த்தினாலும் உணர்வாரில்லை
எம்மவரைத் திருத்த எம்மாலே முடியாதையா
நாம் மாறிவிட்டோம் நம் வழியில் விட்டுவிடும்

வயவையூரான்

---

ஆசைகள்
மனதிலே
ஆர்ப்பரித்திட
நீயோ
காதல் தரிசனம்
தருகின்றாய்

ஒரு நிமிடம்
என்னோடு பேசு
ஒளி முதலாகும்
எனது வாழ்வு

கவி எழுதும்
வேளைகளிலே
என் மீது
பலபேருக்கு
பொறாமை
ஏதோ
படித்துக்கிழிக்கிறான்
என்று
புலம்புகின்றார்கள்

என் வாழ்க்கை
சரித்திரத்தை
தீண்டி
காதல் தீயை
மூட்டி விட்டு
ஒதுங்கி
கொள்கிறாய்

அவள் பெயரில்
சங்கீத நாதம்
ஒலிக்கிறது

உன் பெயரை
தாங்கியவர்கள்
அழகானவர்கள் என்று
இப்போதுதான்
எனக்கு
தெரியும்

மருதங்கேணியூர்
வே. வே. அகிலேஸ்வரன்

---

எதிர் வீட்டுக்காரனுக்கு
என் மீது கோபம்
தன் மகளை
மணக்காத நிலையோ
புரியவில்லை

நிலவை பழிக்கும்
அவள் முகத்தை
நிஜமாக தீண்டிட
ஆசை கொண்டேன்
நிறமாறும் நிலவென்று
அறிந்த பின்பு
நிஜமாக எனக்குள்ளே
நிம்மதியில்லை

## சுவடுகள்

வானுயர்ந்த கோபுரமாய்
வரிசையாக தென்னைமரம்
வாடி வதங்கி தலை குனிந்து
வடிக்கிறதே கண்ணீரை
சோலைகளின் குதூகலமும்
சொக்க வைக்கும் கோபுரமும்
சோர்ந்து போய் கிடப்பதென்ன
உருக்குலைந்து போனதென்ன
வீரம் கொண்ட கடலலைகள்
கொஞ்சும் தமிழ் கொண்டமணம்
சுதந்திரமாய் திரிந்த நிலம்
சூறாவளி ஆனது போல்
சுக்கு நூறாய் போனதென்ன
ஒரு தாய் குழந்தையை போல்
ஓடி ஆடி அணைத்த மண்
ஒன்று பட்டு வாழ்ந்த இடம்
கூறு போடும் நிலமையிலே
கூவுகின்ற குயிலின் ஓசை
ஆடுகின்ற மயிலின் அழகு
சாதி மத பேதமின்றி
ஒன்று பட்டு நின்ற நெஞ்சம்
ஓசையின்றி மறைந்ததென்ன
காலம் பல சென்றிடினும்
வழிகளுக்குள் தெரிவதெல்லாம்
பார் போற்றும் பாதச் சுவடு

ஜனகன் கிஷா
அல்வாய் வடக்கு

---

## கவிதைகள் மாதிரி

சிம்மாசனம்
வேண்டுமென்று
மனு எழுதினேன்....
நாற்காலியே
தாமதமாய்
வந்தது!

வீணையை
விசாரித்துக்
கொண்டிருக்கிறேன்
என்னை
விரல்கள் இல்லாத
தொழுநோய்க்
காரன் என்கிறாய்!

உன்..
கூந்தல் வாசனையில்
குடியிருக்க...
புலம் பெயர்கிறது!
பதினாறு நிரம்பாத
என் பருவம்!

விண்மீன்களை
எண்ணி எண்ணிக்...
களைத்து விட்டேன்
நீ... எங்கே
இருக்கிறாய்!

உன்
வருகையின்
பின் நாளில்
என்னிடம்
இருந்த காகிதப்
பூக்களும்
வாசனை வீசின....

நான்...
பேராசைக்
காரன்தான்!
உன்னில்
பிரியப்பட்டதால்...

காத்திருப்புக்களையே
காதலின்
கூலியாய்
கொடுத்துக்
கொண்டிருக்கிறாய்...

காதலைப்
பார்த்த
முதல் நிமிஷத்திலே
உன்னோடு
வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்

என்
வர்த்தமானியையே...
தாக்கிவிடுகின்றன!
உன்
இராஜாங்க
அறிவிப்புக்கள்!

உனக்கான
முன்னுரையை
எழுதுவதோடே...
என்....
முதலாம் பாகம்
முற்றுப் பெறுகிறது...



நெடுந்தீவு
முகிலன்

# சிந்திப்போம் செயற்படுவோம்...

கலாசார பூமி என பலராலும் வர்ணிக்கப்பட்ட யாழ்ப்பாணக்குடா தற்போது கலாசார சீர்கேடுகளின் அரங்கமாக மாறிவருகிறது. யாழ்.மண்ணின் மகிமையை குன்றச்செய்யும் வகையில் புதியதொரு பிரச்சினையாக இக்கலாசாரசீர்கேடு தலைதூக்கியுள்ளது. இவைகளை எவ்வாறு தடுத்து நிறுத்தி அதிலிருந்து எவ்வாறு எமது சமூகத்தை மீட்சி பெற வைப்பதென்பதே எமக்கிருக்கும் பெரும் சவாலாகும். பண்பாட்டின் கருவூலமாகப் பார்க்கப்பட்ட யாழ்.மண் இன்று கொலை, களவு, பாலியல் துஸ்பிரயோகம், விபசாரம், வேண்டத்தகாத உறவுகள், மது, போதை வஸ்துப் பாவனை என்பவற்றுள் சிக்கிச் சாக்கடையாக மாறிக்கொண்டிருக்கின்றது. ஆகவே எமது சமூகம் ஏன் இத்தகைய தவறான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது? இத்தகைய தவறான போக்கு இறுதியில் எம்மினத்தை எங்கு கொண்டு சேர்க்கப்போகிறது? என்று எண்ணுகையில் நெஞ்சம் கனக்கிறது.

உலகிற்கே பண்பாட்டைக் கற்றுக் கொடுத்தவர்கள் நாம் என்று பெருமை பேசிய எம்மவர்கள் இன்று அந்நிலை கடந்து எம்பண்பாட்டைத் தொலைத்து மொத்த இனத்துக்கும் களங்கம் கற்பிக்க முனைவது தமிழர்களாகிய எமக்கு வருந்தத்தக்க ஓர் விடயமாகும். நாம் கடந்து வந்த காலங்களின் நினைவுகளைச் சற்று மீட்டிப் பார்ப்போமேயானால் அன்று எம்மினம் யுத்தத்தால் முழுமையாக உள்வாங்கப்பட்டிருந்த காலம். எம்மீது வலிந்து திணிக்கப்பட்ட போரினாலும், கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளினாலும் உயிரிழிப்புக்கள் உடமை இழப்புக்கள், உறவுகளின் இழப்புக்கள் என துன்பச் சுழியில் சிக்கிச் சுழன்றது. அடக்குமுறைகளிலிருந்தும் ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபடத்துடித்த எம்மக்கள் என்றுமில்லாதவாறு பெரும் மனிதப் பேரவலங்களைச் சந்தித்த வண்ணம் இருந்தனர். இந்நிலையில் கூட எமது யாழ். மண் தமது கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களில் ஆழ வேரூன்றியிருந்தது. தமிழர் தம் பண்பாட்டு அடையாளங்கள் கட்டிக் காக்கப்பட்டன. ஒழுக்கம் தலைசிறந்து விளங்கியது.

இவ்வாறு அன்று எம்மினம் ஓர் தனிச்சிறப்போடு மிளிர்ந்தமைக்கு அன்றைய ஆட்சியாளர்கள் எம்மண்மீதும் எம்பண்பாட்டின் மீதும் கொண்டிருந்த அதீத அக்கறையும் பண்பாட்டைப் பேணுவதில் காட்டிய கண்டிப்பும் ஆகும். ஆனால் இன்று நிலமை அவ்வாறில்லை. மது, போதை வஸ்து , விபச்சாரம், காமக்களியாட்டங்கள் என யாழ். மண் ஓர் உல்லாசபுரியாக மாறிக்கொண்டிருக்கிறது. யுத்தகாலத்திலே எமது உறவுகள் பலர் காணாமல் போனோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டது போல் யுத்தத்தின் பின் யாழ்.மண்ணின் பண்பாடும் காணாமல் போனோர் பட்டியலில் சேர்த்துக்கொண்டிருப்பது சமூகப்பிரக்ஞை உள்ளவர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்துகிறது.

உரிமைகள் மறுக்கப்படும்போது புரட்சி ஓங்குகிறது. சட்டம் செயலற்றுப்போகும்போது வன்முறை வெடிக்கிறது. நீதி நிராகரிக்கப்படும்போது அநீதி தலைகாட்டுகிறது. ஆகவே யாழ்.குடாநாட்டில் நடந்தேறும் கலாசார சீர்கேடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் தட்டிக்கேட்பதற்கும் ஆளுமைமிக்க ஓர் தலைமைத்துவம் இல்லாமையே சீர்கேடுகள் அதிகரிக்க வழி வைக்கிறது என்பதே நிதர்சன உண்மையாகும்.

எமது பண்பாட்டுச்சிதைவுகள் என்பது வெறுமனே பாலியல் சார் சீர்கேட்டுச் சம்பவங்களோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கு அப்பாலும் விரிவடைந்து செல்கிறது. பன்நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டுவந்த மூத்தோரை மதிக்கும் பண்பு இன்று எம்மவரில் எத்தனை பேரிடம் காணப்படுகிறது என்பது நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய விடயமாகும். இன்று எம் இளைஞர்களில் சிலர் மனித நேயம் இழந்தவர்களாய் அடிதடி, கொலை, களவு என வன்முறையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். ஈரைந்து மாதங்கள் தம்மைக் கருவறையில் தாங்கி பாலூட்டி சோறூட்டி அரவணைத்த தாயையும் தோள் மீது தாங்கி வளர்த்த தந்தையையும் இன்று முதியோர் இல்லங்களில் கொண்டுசேர்க்கும் அளவில்தான் எம்மவரின் மனிதநேயம் வளர்ந்திருக்கிறது.

அன்று யாழ்.மண்ணில் வாழ்ந்த மக்கள் இறைபக்தியும் ஆன்மிக நாட்டமும் மிக்கவர்களாக விளங்கினார்கள். காலையில் எழுந்து நீராடி தினம்தோறும் ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு ஆற்றிவந்தார்கள். இன்று எமது மக்களோ இறைவனைத் தரிசிக்கக் கூட நேரமின்றி பணம் பணம் என்று பிணம் தின்னிக் கழுகுகளாய் பணத்தின் பின் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். காலை எழுந்தவுடன் இறைவனைப் பூசித்த காலம் போய் இன்று காலை எழுந்தவுடன் இளைஞர் முதல் முதியவர் வரை வயது வித்யாசமின்றி மதுச்சாலைகளின் முன்னே அது திறக்கும் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதை காணமுடிகிறது.

தென்னிலங்கை வாசிகள் யாழ்.மண்ணிலே வேலை செய்து பிழைப்பை நடத்திவருகிறார்கள். ஆனால் மண்ணின் மைந்தர்களுக்கோ வேலை செய்ய நேரமும் இல்லை, அவர்கள் வேலை செய்யும் மனோநிலையிலும் இல்லை. வெளிநாடுகளில் அவர்களது உறவுகள் வியர்வை சிந்தி உதிரத்தை உழைப்பாக்கி அனுப்பும் பணத்தை வீணே மதுப்போத்தல்களுக்காகவும், புகைத்தலுக்காகவும் கரைத்துக் கொண்டிருக்கிறார்கள். உலகிற்கே பண்பாட்டைக் கற்றுத்தந்த எம் இனம் இன்று நாகரிக மோகத்தால் கட்டுண்டு தமிழர் பிரதேசத்துக்கும், பண்பாட்டுக்கும் ஒவ்வாத வகையில் விரசமான ஆடை அணிகலன்கள் சிகை அலங்காரங்களுடன் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

''இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்'' ஆகையால் இன்று யாழ். சமூகத்தின் மீது அக்கறை கொள்ளாது இனத்தின் இருப்பை உறுதி செய்ய முன்வராத எம் இளைஞர், யுவதிகளை நாளை நாட்டின் தலைவர்களாக்கினால் எமது யாழ் சமூகத்துக்கு எதைச் செய்யப்போகிறார்கள் என்பது சிந்திக்கவேண்டிய விடயமாகும்.

எனவே இளைஞர்களே! யுவதிகளே! உமது பிரதேசத்தில் இடம்பெறும் சமூகப் பிறள்வுகளைப் புறமொதுக்கி எமது பண்பாட்டைக் காக்க விரைந்து செயற்படுங்கள் அவ்வாறின்றி வெறும் சிற்றின்பங்களுக்குள் மூழ்கிக்கிடப்பீர்களாயின் எமது இனம் எமது பண்பாடு என்பன அழிந்து போகும். இதற்காகவா நாம் இத்தனை காலமும் இவ்வளவு இன்னல்களை எதிர் கொண்டோம் முகம் கொடுத்தோம்?. உடமைகளைள இழந்தோம் உறவுகளை இழந்தோம், அங்கங்களை இழந்தோம், அனாதைகளானோம். இத்தனை துன்பங்களைத் தாங்கியது எதற்காக...?

எம் இனம் வாழ எம்குலம் வாழ எம் மொழி எம்பண்பாடு வாழ வேண்டும் என்பதற்காகத்தானே?. ஆகையால் யாழ். குடாநாட்டு இளைஞர்களே யுவதிகளே மூத்தோர்களே கல்விமான்களே சிந்தியுங்கள் எம் பண்பாட்டைக் காக்கும் முனைப்போடு செயற்படுங்கள் வருங்காலம் உங்கள் கையில்.

தீரன்



# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## (07.10.11 முதல் 14.10.11 வரை)

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### ★ மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் நற் பலாபலன்கள் ஏற்படும். குடும்பத்தில் சற்று மந்தமான பலாபலன்கள் அமையும் நிலை உண்டு. தொழில் நிலைகளில் சற்று திடீர் சிக்கல் அமையும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை.



### ★ இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்ச்சிகளில் நல்ல வெற்றிகள் அமையும். தொழிலில் மேன்மையான பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. பணவரவு திருப்திகரமான நிலையிலே ஏற்படும் பலன் உண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### ★ மிதுனம்

மிதுன ராசி அன்பர்களுக்கு மத்திமமான பலன்களே அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறிகள் இருக்கும். குடும்பத்தில் மத்திமமான பலன்களே அமையும் நிலையுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் ஏற்படும். தாயார் வழியில் செலவீனங்கள் ஏற்படும் நிலையுண்டு. பெண்களுக்கு அனுகூல பலனுண்டு. மாணவர்க்கு வெற்றியுண்டு.



### ★ கடகம்

கடகராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளிலே சற்று தடை, தாமத நிலைகள் ஏற்படும் பலாபலன்கள் உண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பணவரவு மத்திமமான நிலையிலேயே அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் மத்திமமான பலன்களே அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு மனசஞ்சலமுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### ★ சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு ஓரளவுக்கு அனுகூலமான பலன் உண்டு. தொழில் நிலைகளில் அலைச்சல். இழுபறி நிலை இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். குடும்பத்தில் மத்திமமான சுமாரான பலன்களே அமையும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் ஓரளவுக்கு அனுகூலமான நிலையுண்டு. பெண்களுக்கு நிதானம் தேவை .மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### ★ கன்னி

கன்னி ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றி உண்டு. குடும்பத்தில் அனுகூலமான நற்பலன்கள் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### ★ துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலா பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் சிறு சிறு அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். உடல் நிலையில் சுகயீனம் மருத்துவ செலவுகள் என்பன ஏற்படும் பலன் உண்டு. கொடுக்கல், வாங்கல், கடன் நிலைகளில் நிதானம் தேவை. பெண்களுக்கு மனச்சஞ்சலம் இருக்கும் மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### ★ விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகள் வெற்றிதரும். குடும்பத்தில் அனுகூலமான நன்மைகள் அமைய இடமுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் சற்று வேலைப்பளு அமைந்திருக்கும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலம் அமையும். பெண்களுக்கு நன்னையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### ★ தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான சுமாரான பலனே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலனுண்டு. குடும்பத்தில் சற்று மத்திமமான பலன்களே அமையும் பலனுண்டு. கடன் கொடுக்கல் வாங்கல் விடயங்களில் நிதானம் தேவை. பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.



### ★ மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். முயற்சிகளில் வெற்றி அமையும். குடும்ப நிலையில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பணவரவு திருப்திகரமான நிலையிலே அமைந்திருக்கும். உறவினர்களின் மூலமாக அனுகூலமான பலன் ஏற்படும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு நற்பலன் அமையும், பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு அனுகூலமுண்டு.



### ★ கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதான செயற்பாடு தேவை. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு சிறு சிறு நன்மை அமையும். பணவரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலை அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### ★ மீனம்

மீனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றி உண்டு. தொழில் நிலையில் மேன்மையான பலன் உண்டு. குடும்பத்தில் மகிழ்வும் நிறைவான பலனும் அமையும். பணவரவு திருப்திகரமான நிலையிலே அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் அனுகூலமான பலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கட்கு வெற்றியுண்டு.

# பீதியை ஏற்படுத்தும் பிசாசுக் கடல்

பிசாசின் கடல்.. கேட்டாலே அதிர வைக்கும் பெயர். ஜப்பான் மக்களுக்கும் அப்படித்தான். உலக மேப்பில் இப்படியொரு கடல் உள்ளதா என்றால்.. இல்லை என்பதுதான் உண்மை. ஆனால் பசிபிக் கடலின் ஒரு பகுதியை தான் இப்படி அழைக்கிறார்கள். ஜப்பான் கடற்கரை பகுதியில் உள்ள இந்த பிசாசின் கடலுக்கு இன்னொரு செல்லப் பெயரும் உண்டு. அது 'டிராகன் டிரையாங்கிள்'. அதாவது டிராகன் முக்கோணம். ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு தெற்கே 100 கி.மீ. தொலைவில் உள்ளது மியாகே தீவு. இப் பகுதியில் இருக்கிறது பிசாசின் கடல். ஜப்பானிய மொழியில் 'மா-நோ-உமி' என்கிறார்கள். இதன் வழியாக சென்ற யாரும் உயிரோடு திரும்பியதில்லையாம். இப்பகுதியை கடந்து சென்ற பல கப்பல்கள்இ படகுகள் மர்மமான முறையில் மாயமாகியிருக்கின்றன. அதில் சென்றவர்கள் என்ன ஆனார்கள் என்ற தகவலும் இல்லை. இப்பகுதியில் திடீர் திடீரென தீவுகள் உருவாவதும் இருக்கும் தீவுகள் மறைவதும் பீதியை ஏற்படுத்துகிறது.

அட்லாண்டிக் பெருங்கடலின் வடமேற்கு பகுதி மற்றும் கரீபியன் கடல் பகுதியில் உள்ள பிரபலமான மர்ம பகுதி 'பெர்முடா டிரையாங்கிள்'. இந்த வழியாக சென்ற கப்பல்கள் இப்பகுதியை கடந்து சென்ற விமானங்கள் போன்றவை இப்பகுதியில் மர்மமான முறையில் மாயமானதாக கூறப்படுகிறது. அமெரிக்காவின் புளோரிடா கடற்கரையை ஒட்டியுள்ள பெர்முடா முக்கோணத்துக்கு நேராக பூமிப் பந்தின் மறு புறத்தில்தான் ஜப்பானின் பிசாசு முக்கோண பகுதி இருப்பதால் மக்களை அதிகம் பீதிக்கு உள்ளாக்குகிறது 'மா-நோ-உமி' முக்கோணம். பெர்முடா முக்கோணம் போல மாநோஉமி வழியாக செல்லும் கப்பல்கள் விமானங்களும் அடிக்கடி மாயமாகியிருக்கின்றன. 1952 - 1954 காலகட்டத்தில் டிராகன் முக்கோண கடல் பகுதி வழியாக சென்ற ஜப்பானின் ராணுவ கப்பல்கள் நிலை என்னவானது என்பது இன்று வரை புரியாத புதிராகவே இருக்கிறது. அந்த கப்பல்களில் பயணித்த 700 பேரின் நிலை பற்றியும் தெரியவில்லை.

இதை பற்றி கண்டுபிடிக்க 31 விஞ்ஞானிகள் அடங்கிய குழு டிராகன் முக்கோணத்தின் முக்கிய பகுதிக்கு கப்பலில் சென்றுள்ளனர். அவர்களும் திரும்பி வரவில்லை. அதற்கு பிறகு ஜப்பான் அரசு சுதாரித்துக் கொண்டு அப்பகுதியை அபாயகரமான பகுதியாக அறிவித்தது என்கிறார்கள் டிராகன் முக்கோணம் பற்றி ஆராய்ச்சி செய்து வருபவர்கள்.

விஞ்ஞானிகளில் ஒரு தரப்பினர் வேறுமாதிரி சொல்கிறார்கள். ''ஜப்பானிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் எரிமலைகள் வெடிப்பது நிலஅதிர்வு ஏற்படுவது அடிக்கடி நடப்பதுதான். கடலுக்கு அடியில் இருக்கும் எரிமலைகள் நில அதிர்வுகள் காரணமாக கடலின் மேல் பகுதியில் திடீர் அலைகள் உருவாகின்றன. அதில் சிக்கும் கப்பல்கள் விபத்துக்குள்ளாகின்றன. டிராகன் முக்கோண பகுதியில் சில தீவுகள்கூட திடீர் திடீரென மாயமாகின்றன. திடீரென புதிதாக தீவுகள் உருவாகின்றன. இதற்கெல்லாம்கூட கடல் அடியில் ஏற்படும் நிலநடுக்கமும் எரிமலைகளும்தான் காரணம்'' என்கின்றனர்.

நெருப்பை கக்கும் டிராகன்கள்தான் இதற்கு காரணம் என்று நம்புபவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் ஜப்பானிய புராண கதைகளை உதாரணம் காட்டுகின்றனர். ''மியாகே தீவுப்பகுதியில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏராளமான டிராகன்கள் வாழ்ந்தன. அந்த இனம் அழிந்துவிட்டாலும் அவற்றின் அமானுஷ்ய சக்தி இன்னமும் அப்பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கிறது. மியாகே தீவுப்பகுதியை தங்களது சாம்ராஜ்யமாக அவை கருதுகின்றன. தங்களது சாம்ராஜ்யத்துக்குள் வருபவர்களை டிராகன் சக்திகள் விடுவதில்லை.

அந்த வழியாக வரும் கப்பல்கள் படகுகளை அழிக்கின்றன'' என்கின்றனர் அவர்கள். பெர்முடா முக்கோணம் போலவே.. இன்னமும் மர்மமாக இருக்கிறது பிசாசு கடல்.

# தேசிய மெய்வல்லுநர் போட்டியில் வடமாகாணம் 7 ஆம் இடம்

## 3 தங்கம், 5 வெள்ளி, 9 வெண்கலம், 3 வர்ண விருது

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் கடந்த 30ஆம் திகதி

**அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் மேல் மாகாணம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.**

மாகாணங்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் நிலைகள்

| | |
|---|---|
| மேல் மாகாணம் | - 728 |
| மத்திய மாகாணம் | - 441 |
| வடமேல் மாகாணம் | - 359 |
| சப்பிரகமுவ மாகாணம் | - 357 |
| தென் மாகாணம் | - 175 |
| வடமத்திய மாகாணம் | - 100 |
| வட மாகாணம் | - 93 |
| கிழக்கு மாகாணம் | - 48 |
| ஊவா மாகாணம் | - 20 |

முதல் 3ஆம் திகதி வரை கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண விளையாட்டு வீர, வீராங்கனைகள் தமது சாதனைகளை நிலைநாட்டத் தவறவில்லை.

வடமாகாண விளையாட்டு வீரர்கள் என்று பார்ப்பதிலும் விட இவ் வெற்றிக்கு முழுவதும் உரித்துடையவர்கள் யாழ்.மாவட்ட வீரர்கள் என்றே குறிப்பிடலாம். ஏனென்றால் வடமாகாணத்தில் பெற்ற பதக்கங்கள் அனைத்தையும் அவர்களே பெற்றுள்ளனர்.

இம்முறை நடைபெற்ற போட்டியில் 17 பதக்கங்களையும் 3 வர்ண விருதுகளையும் வடமாகாணம் பெற்றுக் கொண்டது. இதில் யாழ். அருணோதயாக் கல்லூரி 9 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய பாடசாலைகளும் தமது பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை. இதனால் இம்முறை வடமாகாணம் 93 புள்ளிகளைப் பெற்று 7ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இதில் 3 தங்கங்களைப் பெற்றதோடு புதிய சாதனைகளையும் நிலைநாட்டியுள்ளார். அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளான ஏ. பவித்திரா (19 வயது) கோலூன்றிப் பாய்தலில் 2.81 மீற்றர் ஆக இருந்த சாதனையை முறியடித்து 3 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையையும் ஏற்படுத்தினார்.

அதேபோல் 21 வயது கோலூன்றிப் பாய்தலில் 2.90 மீற்றர் இருந்த சாதனையை முறியடித்தும் எஸ்.தனுசா 3.10 மீற்றர் பாய்ந்து சாதனை படைத்துள்



3 தங்கம் வென்ற வீரர்கள்

ளமை வட மாகாணத்திற்கே பெருமை சேர்த்த விடயமாகும்.

மேலும் வடமாகாணத்தின் சிறந்த மெய்வன்மையாளராக யாழ் இந்துக் கல்லூரி மாணவன் 19 வயதுப் பிரிவைச் சேர்ந்த வசீகரன் ஜஸ்மினன் நீளம் பாய்தலில் 6.87 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கம் வென்று புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அடுத்த 6ஆவது இடத்தில் இருக்கும் வடமத்திய மாகாணம் 100 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இதனை எட்டுவது எமது மாகாணத்திற்கு சாதாரண விடயமாக இருந்த போதும் தங்கம் வெல்வார்கள் என நினைத்த சில வீரர்கள் உடல்நிலை மேசமானதால் போட்டிகளில் இயல்பாக பங்குபற்ற முடியவில்லை. இதனால் 7 புள்ளிகள் வித்தியாசத்தில் ஒரு இடம் தள்ளிப் போனது எமக்குக் கிடைத்த துர்பாக்கிய நிலை என்றே குறிப்பிடலாம்.

எது எவ்வாறாக இருந்த போதிலும் எம்மிடத்திலும் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. நாம் பெற்ற பதக்கங்கள் எல்லாம் கள நிகழ்ச்சிகளிலேயே ஆகும். சுவட்டு நிகழ்ச்சியை பார்க்கும் போது மேல்மாகாணம் மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் போன்றவைகளுடன் போட்டியிடுவதற்கு எம்மால் முடியாமல் போனது பெரும் குறைபாடாகும்.

இதற்கான பயிற்சியைப் பெறும் வீரர்களுக்கு உரிய பயிற்சிகள் சென்றடையாமையும் நவீன முறைகள் காணப்படாமையுமாகும்.

இதை விட மிக முக்கியமான விடயம் எமது மாணவர்கள் சுவட்டு நிகழ்ச்சிகளில் தோற்றாமை அதற்குரிய மைதானம் எதுவும் அமைக்கப்படாமையே ஆகும்.

நிச்சயமாக எமது வீரர்களுக்கு சரியான களம் அமைத்துக் கொடுக்கப்படும் போது அவர்கள் சாதனை படைப்பது உறுதி. இதனை அமைத்துக் கொடுப்பது விளையாட்டுத்துறைக்கென பொறுப்பாக இருப்பவர்களினதும் ஆர்வலர்களும் மற்றும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் முயற்சி எடுத்தால் முடியாததொன்றல்ல.

எனவே சாதனை படைக்கத்துடிக்கும் வீரர்களை மளுங்கடிக்க விடாது பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

*(நெடுங்கேணி நிருபர்)*




## வடமாகாணம் 3 வர்ண விருதுகளை வென்றது



அனற்



தர்சிகா



யக்ஷனா

இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் வடமாகாணம் 3 வர்ண விருதுகளை வென்றுள்ளது.

17 வயதுப்பிரிவு பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய மாணவி அனற் வர்ணவிருது ஒன்றையும் 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான குண்டெறிதலில் வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவி தர்சிகா வர்ணவிருது ஒன்றையும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி யக்ஷனா விருது ஒன்றை பெற்று வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## லீக் போட்டியில் யங்கென்றிஸ், யூனியன் வெற்றி

யாழ். உதைபந்தாட்ட லீக் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து மாவட்ட ரீதியாக நடத்திவரும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் ஆனைக்கோட்டை யூனியன், இளவாலை பங்கென்றீஸியன் அணிகள் வெற்றி பெற்றன. அரியாலை உதைபந்தாட்ட அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் மோதிக் கொண்டது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்கென்றீஸியன் அணியை எதிர்த்து பாரதி அணி மோதிக்கொண்டது. இதில் யங்கென்றீஸியன் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டு கழக அணி சம்பியனாக தெரிவு

அச்சுவேலி,

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணியினரால் நடத்தப்பட்ட ஹொக்கி சுற்றுப் போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டு கழக அணி வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஹொக்கி சுற்றுப்போட்டியில் இறுதியாட்டம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணியும் கிறாஸ் கொப்பர்ஸ் அணியும் மோதிக்கொண்டன. இரண்டு அணிகளும் வெற்றி தமக்கே என்ற நிலையில் ஆர்வத்தோடு விளையாடின.

மிகத் தீவிரமாக நடைபெற்ற போட்டிகளில் முதல் பாதி ஆட்டத்தின் போது கிறாஸ் கொப்பர்ஸ் அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரண்டு கோல்களை போட்டது. யாழ். பல்கலைக்கழக அணி கோல்களைப் போடக்கூடிய நிலை காணப்பட்ட போதிலும் உரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டதால் முதல் பாதி ஆட்டத்தில் 2 : 0 என்ற நிலையில் கிறாஸ் கொப்பர்ஸ் அணி முன்னணியில் நின்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் போது தொடர்ந்து முன்னணியில் நின்ற கிறாஸ் கொப்பர்ஸ் அணி மேலும் இரண்டு கோல்கள் போட்டது. யாழ்.பல்கலைக் கழக அணியும் இரண்டு கோல்களைப் போட்டது.

ஆட்ட முடிவில் கிறாஸ் கொப்பர்ஸ் அணி 4:2 என்ற கோல்கணக்கில் யாழ். பல்கலைக்கழக அணியை வென்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

ஆட்டநாயகனாக கிறிஸ் கொப்பர்ஸ் அணியைச் சேர்ந்த நிலோஸன் தெரிவு செய்யப்பட்டார். ஆட்டத்தொடர் நாயகனாக யாழ்.பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த வீரரான பானு தெரிவுசெய்யப்பட்டார்.

# இந்திய-இங்கிலாந்து தொடர்...

# பழிதீர்க்குமா இந்தியா?

சொந்த மண்ணில் இங்கிலாந்து அணியை எதிர் கொள்ளவுள்ள இந்திய அணி இங்கிலாந்து மண்ணில் அவ்வணியிடம் கண்ட தொடர் தோல்விக்கு வஞ்சகம் தீர்க்குமா என்ற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.

இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்திய கிரிக்கெட் அணியுடனான 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் மற்றும் ஒரேயொரு இருபது-20 தொடர்களில் விளையாடவுள்ளது. இது கிரிக்கெட் அரங்கில் பெரும் எதிர்பார்ப்பையே ஏற்படுத்தியுள்ளது.

10ஆவது உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய இந்திய அணி உலக சம்பியன் அணியாக கடந்த ஜூலை மாதம் நடுப்பகுதியில் பெரும் எதிர்பார்ப்புகளுடன் இங்கிலாந்துக்கு புறப்பட்டு சென்றது. எனினும் தன் சொந்த மண்ணிலேயே அதிக போட்டிகளை வென்று தரப்படுத்தலில் முதலிடத்தை பெற்ற இந்திய அணி தனது நாட்டுக்கு வெளியே அதனை நிரூபித்துக் காட்டட்டும் என சவால் விட்ட இங்கிலாந்து அணி, சவாலுக்கு அமையவே இந்திய அணியை சுருட்டியது.

இந்திய அணியுடனான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றிய இங்கிலாந்து அணி, இந்திய அணியிடமிருந்து டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தை பறித்ததுடன் அதனை 3 ஆவது இடத்துக்கும் தள்ளியது.

எனினும் தன் சொந்த மண்ணில் வெற்றியின் வேட்கை கொண்டிருந்த இங்கிலாந்து அணி அவ்வணியுடனான இருபது-20 தொடரையும் ஒரு நாள் தொடரையும் தனக்கே உரியதாக்கிக் கொண்டது. 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரில் காலிறுதியில் வெளியேறிய இங்கிலாந்து அணி அத்தொடரில் சம்பியனான இந்திய அணிக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்தது.

இதனால் இங்கிலாந்து மண்ணில் ஒரு போட்டியில் கூட வெற்றிபெறாத இந்திய அணி தரப்படுத்தலில் தான் கொண்டிருந்த நிலைகளையும் அவ்வணியிடமே தாரை வார்த்து நாடு திரும்பியது.

இந்நிலையில், எதிர்வரும் 14 ஆம் திகதி தன் சொந்த மண்ணில் இங்கிலாந்து அணியை சந்திக்கவுள்ள இந்திய அணி இங்கிலாந்தில் அவ்வணியிடம் கண்ட இடைவிடாத தோல்விக்கு பழிதீர்க்குமா என்ற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.

எனினும், இத்தொடருக்கான இந்திய அணியின் தேர்வுக்குழுவின் முடிவு சற்று சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது. தற்போது மீண்டு ஒரு ஆண்டிற்கு இந்திய அணியின் தேர்வுக்குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீகாந்த் தலைமையிலான தேர்வுக்குழுவினர், காயமில்லாத அணி ஒற்றை தேர்வு செய்திருப்பதாக அனுப வீரர்கள் சிலரை கழற்றி விட்டிருப்பது அணியின் பலத்தில் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் தொடரின் முதல் இரு போட்டிகளுக்கான இந்திய அணி அண்மையில் அறிவிக்கப்பட்டது. இதில் காயத்திலிருந்து முழுமையாக மீளாத வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இளம் வீரர்கள் கொண்ட அணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் இந்திய அணி கண்ட தொடர் தோல்விக்கு அணியின் வீரர்கள் அடுத்தடுத்து உபாதைக்கு உள்ளானமை அவ்வணியின் பின்னடைவில் பெரும் பங்கு வகித்தது. ஆரம்பம் முதல் அடுத்தடுத்து வீரர்கள் உபாதையால் அணியிலிருந்து விலக பலமிழந்த இந்திய அணி இங்கிலாந்துக்கு சவால் அளிக்க முடியாது திணறியது.

எனவே இங்கிலாந்து அணியுடனான தொடரில் ஏற்பட்ட காயத்திருந்து மீளாத சச்சின் டெண்டுல்கர், விரேந்திர சேவாக், யுவராஜ் சிங், இஷாந்த் சர்மா மற்றும் சகீர்கான் ஆகியோர் இத்தொடரில் பரிசீலிக்கப்படவில்லை.



எனினும் தற்போது சிறந்த உடற்தகுதியுடனுள்ள அணியின் அனுபவ சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கிற்கு இடம் வழங்கப்படாமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்தில் அவ்வணியுடனான தொடரின் போது அடி வயிற்றில் ஏற்பட்ட வலியின் காரணமாக தொடரின் பாதியில் விலகிய ஹர்பயன் தற்போது சிறந்த உடற்தகுதியை பெற்றுள்ளார் என்றே கூற வேண்டும்.

ஏனெனில் [illegible] நிறைவடையவுள்ள சம்பியன் லீக் இருபது-20 தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக செயற்பட்ட இவர் சிறப்பாக விளையாடினார். அந்தவகையில் அணியில் ஹர்பஜனுக்கு இடம் அளிக்கப்படாமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே தொடரின் முதலிரு போட்டிக்குமான இந்திய அணி குறித்து கருத்து தெரிவித்துள்ள தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த், ‘‘எல்லாவகையிலும் ஆராய்ந்து சிறந்த அணியையே தேர்வு செய்துள்ளோம். சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு சவால் விடுக்கும் அணியாகவே உள்ளது’’ என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தன் சொந்த மண்ணில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இங்கிலாந்து அணியை எதிர் கொள்ளவுள்ள இந்திய இளம் அணி இங்கிலாந்துக்கு சவால் கொடுக்குமா என்பதே எதிர்பார்ப்பாகவுள்ளது.

இளம் வீரர்களைக்கொண்ட அணியாக அமைந்திருக்கும் இந்திய அணியின் துடுப்பாட்ட பலம் மற்றும் பந்து வீச்சு பலம் என்பன தற்போது இங்கிலாந்தின் பலத்தற்கு முன்னாள் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

துடுப்பாட்டத்தினைப்பொறுத்தவரையில் அணித் தலைவர் மஹேந்திரசிங் டோனி , கௌதம் கம்பீர், சுரேஷ் ரெய்னா ஆகியோரே நம்பிக்கை வீரர்களாக உள்ளனர். அதேவேளை அண்மைக்காலமாக அசத்தி வரும் அணியின் இளம் வீரர் ரஹனே அணிக்கு கை கொடுப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது. ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் சந்தேகத்தினையே ஏற்படுத்தியுள்ளனர். இதேவேளை அணியின் பந்துவீச்சுப் பலம் பிரவீன் குமாரைப் பின்னியேயுள்ளது.

இதனிடையே இந்திய அணிக்கு தன் சொந்த மண்ணில் விளையாடுவது இன்னொரு நெருக்கடியான சவாலாக அமைந்துள்ளது. அதாவது இந்திய அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணம் இந்திய ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே அளித்தது. இதனால் தன் சொந்த மண்ணில் தனது ரசிகர்களை திருப்திப்படுத்த வேண்டிய ஒரு இக்கட்டான நெருக்கடியான சூழலுக்குள் இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது. எனவே இது இந்திய அணிக்கு இத்தொடரில் ஒரு வகையான நெருக்கடியை ஏற்படுத்தலாம்.

மறுபக்கத்தில் இங்கிலாந்து அணி பலம் நிறைந்த அனுபவீரர்களைக்கொண்ட அணியாகவே களமிறங்கவுள்ளது. இதில் அண்டர்சனுக்கு ஓய்வு அளிக்கப்பட்டபோதிலும் அவருக்கு பதிலாக வேப்பந்து வீச்சாளர் கெவின் பீட்டர்சன் இணைக்கப்பட்டுள்ளார்.

அணியின் துடுப்பாட்ட வரிசைப் பலம் நிறைந்ததாகவே இருக்கின்றது. ஒரு நாள் போட்டியில் அணியின் பெரும் துடுப்பாட்ட தூணாக விளங்கும் அணித்தலைவர் அலிஸ்டர் குக் இத்தொடரில் சிறப்பாக ஆட்டத்திறனை வெளிப்படுத்துவார் என்பது மறுப்பதுக்கில்லை.

அதேவேளை, வேகப்பந்து வீச்சாளர்களை அதிகம் கொண்ட அணியாக உள்ளமையினால் இத்தொடரில் இந்தியாவுக்கு சவால் அளிக்கும்.

இங்கிலாந்து அணி மனதளவில் பலம் கொண்ட அணியாகவே இத் தொடரில் மோதும் என்பது மறுப்பதற்கில்லை. அதாவது தன் சொந்த மண்ணில் இந்திய அணியை அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி கொண்டமை அவ்வணியை மனதளவில் உறுதியடையச் செய்திருக்கும். எனவே இத் தொடரை இங்கிலாந்து அணி இலகுவாகவே எதிர்கொள்ளும் என்பது மறுப்பதுக்கில்லை.

அதேவேளை, தன் சொந்த மண்ணில் இந்திய அணியை வென்ற இங்கிலாந்து அணிக்கு இந்திய மண்ணில் வைத்து அவ்வணியை வீழ்த்தவேண்டிய ஒருநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது இங்கிலாந்து அணிக்கு சற்று பலவீனத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையே எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 5 போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடர் பெரும் எதிர்பார்ப்பையே ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்து அணி தன் சொந்த மண்ணில் இந்திய அணிக்கு கொடுத்த நெருக்கடியை தற்போது இந்திய மண்ணில் கொடுக்குமா அல்லது இங்கிலாந்தில் பெற்ற தோல்விக்கு தன் சொந்த மண்ணில் வைத்து இந்திய அணி வஞ்சகம் தீர்க்குமா என்பதே எதிர்பார்ப்பாகவுள்ளது.

10 ஆவது உலகக்கிண்ணத் தொடர் வெற்றியின் பின் தன் சொந்த மண்ணில் முதல் முறையாக ஒரு நாள் போட்டியை விளையாடவுள்ள இந்திய அணி உலக சம்பியன் அணி என நிரூபித்து இங்கிலாந்து அணியை பழிதீர்க்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

ப.சுகிர்தன்






# ஆச்சரியமூட்டும் அபூர்வங்கள்

சிலரை பார்த்து நம் உறவினர் போல இருக்கிறது என்போம். உருவம் ஒரே மாதிரி இருகின்றதே என்று குழம்பி இருப்போம். இந்த குழப்பம் மனிதரிடையே மட்டும் அல்ல விலங்குகளிடையேயும் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக மனிதர்களின் மூதாதையர் என்று சொல்லப்படுகின்ற குரங்குகளிடம் ஆச்சரியமூட்டும் அபூர்வமான உருவ ஒற்றுமை காணப்படுகின்றது.

உலக அளவில் சுமார் 264 வகையான குரங்குகள் காணப்படுகின்றன. அதில் இப்பொழுது பாதி அழியும் தறுவாயில் இருகின்றது. விசித்திரமான குரங்குகளை சில புகைப்படக்கலைஞர்கள் தேடிப் பிடித்து தங்களின் கமெராவுக்குள் பதி வாக்கியுள்ளார்கள். அவற்றை நீங்களும் பாருங்கள்.

# குடாநாட்டு நிகழ்வுகள்



சிறுவர் தினத்தை முன்னிட்டு அச்சுவேலி பொலிசாரால் நடாத்தப்பட்ட ஓவிய போட்டிகளின் போது போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.
(படம் : அச்சுவேலி நிருபர்)



கொமர்சியல் வங்கியினரால் அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட கணினி தொகுதிகளை கையளிக்கும் வைபவமும், புனரமைப்பு செய்யப்பட்ட கணினி ஆய்வுகூட திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்ற போது ஆய்வுகூடம் பிராந்திய முகாமையாளரினால் திறந்து வைக்கப்பட்டு கணனி இயக்கப்படுவதை படத்தில் காணலாம்.
(படம் : அச்சுவேலி நிருபர்)



காரைநகர் கிழவன்காடு அருள்மிகு முருகன் ஆலயத்தில் அலங்கார உற்சவத்தின்போது 16 நாட்களிலும் 'கந்தர் அலங்காரம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றிய ஆன்மிகச் சொற்பொழிவாளர் 'செஞ்சொற் செம்மல்' இரா.கேதீசனுக்கு 'சிவத்தமிழ் வாரிதி' என்னும் பட்டத்தினை புலவர்மணி வே.குமாரசாமி வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.
(படம் ஏழாலை நிருபர்)



கோப்பாய் கோமகன் வன்னியசிங்கத்தின் நூற்றாண்டு விழாவில் அவர் நினைவாக வெளியிடப்பட்ட 'சாணக்கியன்' என்னும் நூலின் முதற் பிரதியை விரிவுரையாளர் லலீசன் சி.வி.கே. சிவஞானத்திற்கு கையளிப்பதை படத்தில் காணலாம்.
(படங்கள் - அச்சுவேலி நிருபர்)

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday October 07, 2011